# உதயன்

பக்கங்கள் - 32 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 246 ஆடி 16ஆம் நாள் சனிக்கிழமை 01 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## மஹிந்தவின் சகாவுக்கு மரண தண்டனை

கொழும்பு, ஓக. 1

இரத்தினபுரி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மஹிந்தவின் சகாவுமான பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூன்று அரசியல்வாதிக 24

# ராஜபக்ஷக்களுடன் யாருக்கு ‘டீல்’?

## கூட்டமைப்பு மீதான குற்றச்சாட்டுகளை முடிந்தால் நிரூபித்துக்காட்டுமாறு விக்கிக்கு சரவணபவன் சவால்



யாழ்ப்பாணம், ஓக. 1

ராஜபக்சக்களுடன் கடந்த காலங்களில் ‘டீல்’ பேசியவர்களையும், பின் கதவால் ஒப்பந்தம் செய்தவர்களையும் தன்னுடன் கூட வைத்துக் கொண்டு, அவர்களை வேட்பாளர்களாகவும் களமிறக்கி விட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பெரமுன இடையே ஒப்பந்தம் இருப்பதாக வாய் கூசாமல் பொய் சொல்கிறார் முன்னாள் நீதியரசர். ராஜபக் 23

# விரக்தி மனநிலையிலிருந்து விலகி வாக்களியுங்கள்!!!

## யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் மக்களிடம் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஓக. 1

தமிழ் மக்கள் விரக்தி மனநிலையிலிருந்து விலகி வாக்களிக்க முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் விதத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர் மௌனிப்பின்பின் எம்மக்களின் சுயாதிபத்தியத்துக்கான போராட்டத்தை அரசியல் ரீதியாக முன் 23

## சம்பந்தனின் பங்கேற்புடன் பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் பங்கேற்புடன் 24

## பார்கள் பூட்டு

கொழும்பு, ஓக. 1

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபானக் கடைகளும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. ஓகஸ்ட் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானக் கடைகளையும் மூட தீர்மானித்துள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஓ.5)

## லங்காபுர ஊழியருடைய உறவினருக்கும் தொற்று

கொழும்பு, ஓக. 1

பொலநறுவை லங்காபுர பிரதேச சபை ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவரின் உறவினர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 24

## யாழில் ஆளும் கட்சி வேட்பாளரின் விதிமீறலை கட்டுப்படுத்த முடியவில்லை

### நியமிக்கப்பட்ட விசேட அதிகாரி தேர்தல்கள் ஆணைக்குழுவை தலையிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஆளும் கட்சி அரசியல்வாதியின் தேர்தல் விதிமுறை மீறல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழு தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு தேர்தல்கள் 23

## விடுதலைப் புலிகளின் மிருகத்தனமான பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டினேன்

### மார்தட்டுகிறார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஓக. 1

முப்பது வருட கால மிருகத்தனமான பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை வெற்றிகரமான வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றோம். துரதிர்ஷ்டவசமாக, 2015 இல், நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததால் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் தடைப்பட்டன. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், பிரதமருமான மஹிந்த 04

## யாழ். போதனாவில் சிகிச்சைபெற்றவருக்கு கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்ற நபருக்கு கொழும்பில் மீளவும் இரண்டு 24

## விக்னேஸ்வரனின் வங்கி கணக்கில் ரூ. 70 லட்சம்

### அவரது ஊடகப் பிரிவு கூறுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 1

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதல 04






## மாகாண சபையையே நிர்வகிக்க முடியாதவர்கள் சமஷ்டி கேட்கின்றனர்

### கூட்டமைப்பை எள்ளி நகையாடுகிறது நவ சிஹல உறுமய கட்சி

கொழும்பு, ஓக. 1

மாகாணசபையின் அதிகாரத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கு உரிய சேவையை வழங்கமுடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த அடிப்படையில் சமஷ்டி தீர்வை கோருகின்றது என்று தெரியவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் 04

## தீர்வை வென்றெடுக்க ஆணையைத் தாருங்கள்

### தமிழ் மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 1

நியாயமான ஓர் அரசியல் தீர்வை வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக் 24




# களவெடுக்க முயன்றவர் கலிகையில் சிக்கினார்

வடமராட்சி, ஓக. 1

வடமராட்சி, கலிகைப் பகுதியிலுள்ள வீடொன்றில் திருட முயற்சித்தவரை வீட்டிலிருந்தோர் மடக்கிப் பிடித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் கலிகைச் சந்தியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்க கதவை திறந்து விட்டு, வீட்டிலிருந்தவர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில் அதிகாலை ஒரு மணியளவில் குழந்தைக்கு பால் கொடுப்பதற்காக வீட்டிலுள்ள பெண் உறக்கத்தில் இருந்து எழுந்தபோது, வீட்டுக்கு வெளியே நாய் பலமாகக் குரைப்பதை அவதானித்துள்ளார். அப்போது யாரோ நடக்கும் சத்தமும் அவருக்கு கேட்டுள்ளது. அதன் பின்னர் பின்பக்கமாக ஒருவர் வீட்டிற்குள் நுழைவதை பெண் கண்டுவிட்டார்.

அவர் கூக்குரல் இட, தூக்கத்தில் இருந்து விழித்த அவரது கணவரும், மாமனாரும் திருடனை துரத்திச்சென்று, மடக்கிப் பிடித்தனர். திருடனைக் கைது செய்த நெல்லியடிப் பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ,ஓ,422)




# சம்பந்தன், ஹக்கீம், ரிஷாத் மூவரும் ஆபத்தானவர்கள்!!

## பிதற்றுகிறார் பீரிஸ்



**கொழும்பு, ஓக. 1**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகிய மூவரும் நாட்டுக்கு ஆபத்தானவர்கள். அவர்களின் கோரிக்கைகள் எதனையும் ராஜபக்ஷ அரசு நிறைவேற்ற வேமாட்டாது. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதிகளின் தனிநாட்டுக் கோரிக்கையுடன் வலம் வரும் சம்பந்தனை எப்படி நாம் நம்புவது? அதேபோல் அடிப்படைவாதிகளுடன் தொடர்பு வைத்திருக்கும் ரிஷாத் பதியுதீனையும், ரவூப் ஹக்கீமையும் எப்படி நாம் நம்புவது? இவர்கள் மூவருமே மன்னிக்க முடியாதவர்கள்.

தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளான இவர்கள், அம்மக்களின் நலன் சார்ந்து செயற்படவில்லை. தங்கள் சுயலாபம் கருதியே அரசியல் நடத்துகின்றார்கள்.

இவர்கள் மூவரும்தான் கடந்த நல்லாட்சி அரசுக்கு முண்டு கொடுத்தவர்கள். ஆனால், இவர்களை நம்பி நாடாளுமன்றம் அனுப்பிய மக்கள் எந்தப் பயனையும் பெறவில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பிணைமுறி மோசடிக்காரர்களைக் காப்பாற்றிய இம்மூவரும் இன்று எமது அரசை வெட்கமில்லாமல் விமர்சிக்கின்றார்கள்.

இவர்கள் மூவரும் நாட்டு ஆபத்தானவர்கள். இவர்களின் கோரிக்கைகள் எதனையும் ராஜபக்ச அரசு நிறைவேற்றவேமாட்டாது. பொதுத் தேர்தலில் பின்னர் ஹக்கீம், ரிஷாத் ஆகியோரை அரசில் இணைக்க வேமாட்டோம்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மிகவும் பலமிக்க ஆட்சியை சிறிலங்கா பொதுஜன பெரமுன நிறுவியே தீரும். தமிழ், முஸ்லிம் மக்களுடன் நாம் நேரில் பேசி அவர்களின் குறைகளைத் தீர்த்து வைப்போம் - என்றார்.

(ஓ,எ,22)

# வாள் முனையில் நகைக் கொள்ளை

வீட்டில் இருந்தவர்களை தாக்கி, வாளைக் காட்டி அச்சுறுத்தி நகைகள் அபகரிக்கப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிகிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் மேற்கு, சோளம் தோட்டப் பகுதியில் உள்ள வீட்டின் பின்பக்கமாக சென்ற நபர்கள் கதவை உடைக்க முற்பட்டுள்ளனர்.

சத்தம் கேட்டு வீட்டிலுள்ளவர் வெளியில் வந்துள்ளார்கள். அவரைக் கொள்ளையர்கள் கம்பியால் தாக்கியதுடன் வீட்டில் இருந்தவர்களை வாளைக் காட்டி அச்சுறுத்தினர். வீட்டில் இருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் அவலக் குரல் எழுப்பியுள்ளனர். அயலவர்கள் ஓடி வந்த போதும் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர். (அ,ஓ,20)

# சகல மாணவருக்கும் அடையாள இலக்கம்!

## கல்வியமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 1

அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும், இனிமேல் மாணவர் அடையாள இலக்கத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மாணவர்களுக்கு அடையாள இலக்கம் வழங்கப்பட்ட பின்னர், அந்த இலக்கத்தை 5 ஆம் ஆண்டு புலம்பரிசில் பரீட்சை, சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகள், விளையாட்டு உட்பட ஏனைய திறமைசார் போட்டிகளுக்கு பயன்படுத்த முடியும்.

முதற்கட்டமாக தற்போது பாடசாலைகளில் கற்கும் மாணவ, மாணவிகளுக்கு அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்டவுள்ளன. அடுத்த ஆண்டு முதல் மாணவர்களைப் தரம் 1 இல் பாடசாலைகளுக்கு சேர்க்கும் போது அவர்களுக்கு அடையாள இலக்கங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார். (அ,ஓ)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆதரித்து முஸ்லிம் சமூகத்தினது பரப்புரை இன்று

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வடக்கு முஸ்லிம் சமூகத்தின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணியளவில் யாழ் நகர்ப்பகுதியில் உள்ள பிள்ளையார் இன் விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசா, உதயன் குழுமத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், திருமதி சசிகலா ரவிராஜ், கு.சுரேந்திரன், வே.தபேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)



# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

**எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**
**எனது அன்புக்குரிய வர்த்தகப் பெருமக்களே!**

### நான் ஒரு வர்த்தகராக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய காரணம்

1. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் வட பகுதி மக்கள் பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலமாக எமது தேசத்தைக் கைப்பற்றியதன்மூலம் பல்லாயிரம் கோடிரூபாய்களை எமது தேசம் இழந்து நிற்கின்றது.
2. இறுதி யுத்தத்தை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்று, பல்லாயிரம் உயிர்களை இழந்து நிற்கும் எமது சமூகத்திற்கு ஒரு தீர்வைக் கொடுக்கவேண்டிய கட்சியாக இந்தக் கட்சி இருக்கின்றது.
3. எமது தேசத்தில் காணாமல் போனோர் மற்றும் யாழ்.குடாநாட்டில் 2006 தொடக்கம் 2009 காலப்பகுதியில் சுட்டுக்கொலை செய்யப் பட்டவர்கள் விவரங்களைத் திரட்டி அதற்கொரு ஆணைக்குழுவை அமைத்து, விசாரணை செய்யப்படவேண்டும்.
4. தமிழீழ வைப்பகத்தில் வைபிலிடப்பட்ட பல்லாயிரம் கோடி தங்க நகைகளை மீளளித்தல் அல்லது அதற்குரிய நக்ஷ்டஈட்டை அரசு வழங்க வேண்டும்.
5. மயிலிட்டித் துறைமுகத்தை அப்பகுதியைச் சார்ந்த கடற்தொழிலாளர் சமுதாயத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
6. இராணுவத்தால் அபகரித்து வைத்திருக்கும் தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
7. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு முற்றுமுழுதான அபிவிருத்தித் திட்டம் கொண்டுவரப்படல் வேண்டும்.
8. எங்கள் பிரதேசத்தில் இருக்கும் அனைத்து வர்த்தகர்களின் ஒற்றுமையுடன் பங்குதாரர்களாக பல நிறுவனங்களை ஆரம்பித்து, 4 வீத வட்டி கடன் 20 ஆண்டுகால அடிப்படையில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பைக் கொண்ட பல தொழிற்சாலைகளை அமைத்து, இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கவேண்டும்.
9. இவைகள் யாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய இந்தக் கட்சியிலேயே எங்களுக்கு கிடைக்க வேண்டிய சகல உரிமைகளையும் முதலீடுகளையும் அழிவுகளுக்குக் கிடைக்கவேண்டிய நக்ஷ்டஈடுகளையும் நாடாளுமன்றத்தில் பேசிப் பெறுவதற்காகவே எனக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு தயவாக வேண்டி நிற்கின்றேன்.
10. என் அன்பான வர்த்தக மற்றும் வாக்காளப் பெருமக்களே! தற்போதைய சூழலில் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மனம் வருந்துகின்றேன். தேர்தல் முடிந்த பின் 60 நாள்கள் நான் இந்த மாவட்டத்திலே தங்கியிருந்து உங்கள் எல்லோரையும் சந்தித்து, உங்கள் பிரச்சினைகள், தேவைகள் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து நாடாளு மன்றத்துக்குக் கொண்டு சென்று, அதற்குரிய தீர்வை எடுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.



**கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எமது மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கும் உரிமைகளுக்கும் வித்திடுங்கள்.**

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

**“ உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்! ”**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

# இராணுவம் இடையூறு

## கோத்தாவுக்கு விக்கி கடிதம்



யாழ்ப்பாணம், ஓக. 1

முழுக்கறுப்பு சீருடை அணிந்த இராணுவத்தினர் தனது தேர்தல் பரப்புரையைக் குழப்பும் வகையிலும் தன்னை அச்சுறுத்தும் வகையிலும் நடந்து கொண்ட சம்பவம் குறித்து ஜனாதிபதி கோத்தாபயவுக்கு கடிதத்தை எழுதியுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் விக்னேஸ்வரன், இத்தகைய செயற்பாடுகளினால் தன்னை அச்சப்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் காலத்தில் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் அவர் இந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். இந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதமருக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த 28ஆம் திகதி குருநகரில் இரவு 8 மணியளவில் தேர்தல் பரப்புரை மேடையில் இருந்த போது, முழுக் கறுப்புச் சீருடை அணிந்த 14 இராணுவத்தினர் (கறுப்புப் பூனைகள்) மோட்டார் சைக்கிள்களில் வண்டிக்கு இருவராக கூட்ட அரங்கிற்குள் தடதடவென்று பெரும் சத்தத்துடன் நுழைந்தனர். வாகன எஞ்சின்களை அலறவிட்டுத் தொல்லை கொடுத்தனர். நான் புறப்படும் வரை காத்திருந்தனர். பிறகு என் கார் புறப்பட்ட போது 14 ஆள்களுடன் 7 மோட்டார் சைக்கிள்களுடன் என் காரைச் சுற்றிச் சுற்றி வந்தனர். கொஞ்ச நேரம் ஓரத்தில் நின்றுவிட்டு என் கார் செல்லும் பாதையில் குறுக்கிட்டனர்.

பிறகு ஒரே வரிசையில் சென்று ஒரு பக்கச் சந்தில் போய் மறைந்தனர். எனது பாதுகாப்புப் பொலிஸார் என்னுடன் காருக்குள்ளேயே இருந்தனர். இந்த இராணுவத்தினர் எனக்கு எதையாவது உணர்த்த விரும்பினார்களா என்று தெரியவில்லை. தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் என்னைப் போன்ற வயதான ஒருவரை மிரளச் செய்து விடமாட்டா என்று போதிலும் மக்களுக்குத் தவறான செய்தியை வழங்கி வாக்களிப்பு நடைமுறையை பாதிக்கக்கூடும். இந்தச் சம்பவம் குறித்து புலனாய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். வட மாகாணத்தில் 2020 நாடாளுமன்றத் தேர்தல் இராணுவத்தின் இருப்பினால் பாதிப்பு ஏற்படாமல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறும் என நம்புகிறேன் என உள்ளது. (ஒ.5)




# யானை தாக்கிய விரிவுரையாளர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாக பெண் விரிவுரையாளர் யானை தாக்கிப் படுகாயமடைந்திருந்த நிலையில், அவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

கொழும்பு களனி பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய காயத்ரி டில்ருக்ஷி என்பவரே உயிரிழந்தவராவார். அவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யானையால் தாக்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதில சிகிச்சைக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 166 பேர் வீட்டுக்கு!

கிளிநொச்சி ,ஓக. 1

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இயக்கச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தில், தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 166 பேர் நேற்று வெள்ளிக்கிழமை காலை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் .

ஜோர்தான் நாட்டில் தங்கியிருந்த நிலையில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டவர்களே இவ்வாறு இயக்கச்சியில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கான பி. சி.ஆர் பரிசோதனைகள் நடைபெற்று, கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 166 பேரே இவ்வாறு சொந்த இங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் . (அ ,6, 113)

## விடுதலைப்...

ராஜபக்ச தெரிவித்தார்.

காவத்தையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டைப் பிளவுபடுத்தும் சமஷ;டி வழியிலான தீர்வைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கேட்கின்றார். முதலில் அவர் சமஷ;டியைத் தூக்கி வீசிவிட்டு பொதுவான தீர்வைக் கேட்க வேண்டும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒரு மாபெரும் தலைவர். அவரின் கொள்கைத்திட்டத்தை நாம் வெற்றிகரமாக செயற்படுத்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வலுவான நாடாளுமன்றத்தை நிறுவ வேண்டும். இதற்குப் பொதுமக்களின் ஆதரவு எங்களுக்குத் தேவை.

எனவே, நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒளிமயமான எதிர்காலத்துக்காகப் பாடுபடும் எமது கட்சிக்கு உங்கள் மதிப்புமிக்க பொன்னான வாக்குகளை எதிர்வரும் 5ஆம் திகதி வழங்குங்கள், என்றார். (ஒ.5,22)

## மாகாண...

அரசியல் பயணம் தோல்வியில் முடிவடைந்துள்ளது. மாகாணசபை முறைமையும் முற்றாக நீக்கப்படவேண்டும். 13 என்பது எமது நாட்டுக்கு தேவையற்றதொன்றாகும் என்று நவ சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபையின் அதிகாரத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கு உரிய சேவையை வழங்கமுடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த அடிப்படையில் சமஷ;டித் தீர்வை கோருகின்றது என்று தெரியவில்லை. மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பாதி திறைசேரிக்கு திரும்பியுள்ளது. எனவே, அரசியல் சுகபோகத்துக்காகவும், மக்களை அடக்கி ஆள்வதற்குமே கூட்டமைப்பு சமஷ;டி கோருகின்றது.

நாம் ஒருபோதும் சமஷ்டியை ஏற்கமாட்டோம். அதனை வழங்குவதற்கும் இடமளிக்கமாட்டோம். இந்த நாட்டில் மாகாணசபை முறைமை நீக்கப்படவேண்டும். 13கூட தேவையில்லை. நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக உள்ளூராட்சிமன்றங்களுக்கு நிர்வாக அதிகாரங்களைப் பகிரலாம். மற்றும்படி ஏனைய அதிகாரப்பகிர்வுகள் அவசியமற்றதொன்றாகும்.

வடக்கில்தான் அதிகமாக குலபேதம் இருக்கின்றது. இந்நிலையில் அதிகாரங்களைப் பகிர்ந்தால் அங்கு மக்கள் மத்தியில் வீண் பிரச்சினை உருவாகும். ஒரு தரப்பை இன்னுமொரு தரப்பு அடிபணிய வைக்க முற்படும். இதனால் அவர்களுக்குள் மோதல் வெடிக்கலாம். மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாகலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பயணம் என்பது தோல்வியடைந்தவொன்றாகும். மக்களுக்காக அவர்கள் எதனையும் செய்வதாகத் தெரியவில்லை. அபிவிருத்தியைக்கூட செய்யாதவர்கள் எதற்காக அதிகாரங்களைக் கோருகின்றனர், என்றார். (ஒ.5,44)

## விக்னேஸ்வரனின்...

மைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தனது சொத்துக்கள் பற்றிய விவரங்களைப் பகிரங்கப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் அவரது ஊடகப்பிரிவால் நேற்று அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரனின் உள்ளூர் வங்கிக் கணக்குகளில் மொத்தமாக 44 லட்சத்து 24 ஆயிரத்து 724 ரூபாவும், வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் 9 ஆயிரத்து 618 பவுண்டுகள் பணமும் ஆயிரத்து 210 டொலர்கள் பணமும் உள்ளன.

இவைதவிர, யாழ்ப்பாணத்திலுள்ள சண்டிலிப்பாய் இரட்டையபுலத்தில் ஒரு துண்டு காணியும் கொழும்பு 7 இல் அவர் வசிக்கும் வீட்டின் மீது சீவிய உரித்தும் அவருக்கு இருக்கின்றன. இதனைத் தவிர அவருக்கு வாகனங்களோ வேறு எந்தச் சொத்துக்களுமோ இல்லை. நீதிபதியாகவும், நீதியரசராகவும் பணி புரிந்தகாலத்தில் விக்னேஸ்வரன், உழைத்த பணமும் முதலமைச்சராகப் பணி ஆற்றிய காலத்தில் அவருக்குக் கிடைத்த வேதனத்தில் ஏற்பட்ட சேமிப்பும் இவற்றுள் அடங்கும், என்றுள்ளது. (ஒ.5)

# தாய்க் கட்சியான கூட்டமைப்புக்குத்தான் தமிழர் சகலரும் வாக்களிக்க வேண்டும்

## தமிழ் அரசுக் கட்சியின் திருமலைச் செயலர் கோரிக்கை

திருகோணமலை, ஓக. 1

**காய்த்த மரமே கல்லடிபடும் என்பார்கள் ஆன்றோர்கள். அப்பேர்ப்பட்ட காய்த்த மரமே தமிழ் அரசுக் கட்சி. எத்தனை சிறு கட்சிகள் உருவானாலும் நமக்கு தாய்க் கட்சி தமிழ் அரசுக் கட்சி. தமிழ்ச் சமூகத்தின் அடையாளமும் அதுவே. அந்தக் கட்சியைப் பாதுகாப்பதும் கட்டி எழுப்புவதும் எம் தாய் அன்னைக்குச் செய்யும் சேவைக்கு நிகரானது. அப்பேர்ப்பட்ட தாயை தலைகுனிய விடாமல் ஓகஸ்ட் 5ஆம் திகதி தலை நிமிர்த்திப் பெருமை கொள்வோம்.**

இவ்வாறு திருகோணமலை நகர சபையின் முன்னாள் தலைவரும், தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளருமான க.செல்வராஜா (சுப்ரா) தெரிவித்தார்.

திருகோணமலை நகரில் இளைஞர்களுக்கிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சிக்கு மிகப்பெரிய அத்திபாரம் உண்டு. சமூகத்தின் அடையாளமாக, மக்களின் ஆதரவுடன் இருக்கும் இந்தக் கட்சிக்கு பொய்ப் பரப்புரைகளை மாற்றுத் தமிழ்க் கட்சிகள் செய்கின்றன.

தன் சுகத்தை விட தமிழினம் முக்கியம் என்பது சம்பந்தன் ஐயாவின் கூற்று. தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காக அரசியல் ஆதிக்கமோக அரசுகளுக்கு பலதடவைகள் சாணக்கியமாக விட்டுக் கொடுத்திருக்கின்றார்.

ஆனால் இன்றுவரை அரசியல் தீர்வு சொல்லப்படவில்லை. மனிதன் தன் உரிமைக்காக இன்னுமொரு மனிதனிடம்தான் போராட வேண்டி இருக்கிறது.

நாம் கூடுதலான நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றால் தான் எம் பலம் அதிகரிக்கும். பலம் அதிகரித்தால் காலச் சக்கரம் எதிர்பாராத புதுமைகளை நிச்சயம் செய்யும். காலத்தின் அருமருந்தும் மனித இயல்பின் வளைந்து கொடுக்கும் தன்மையும் இறை அருளும் எமது நீண்ட காலக் குறிக்கோளிலிருந்து நிச்சயம் விடை கிடைக்கும்.

தமிழர்களாகிய நீங்கள் தமிழ் அரசுக்கு எதிராக நிற்கும் கட்சிகளுக்கு வாக்களிப்பீர்களானால் அது தமிழுக்கும் தமிழர்களுக்கும் மாபெரும் துரோகம்.

எம் தலைவிதியைத் தீர்மானிக்கும் கடமைதான் வாக்களிப்பது.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது அனைவரும் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து நீங்கள் விரும்பும் மூன்று வேட்பாளர்களுக்கும் வாக்களியுங்கள். நீங்கள் இதைச் செய்யாவிட்டால் யார் செய்வார்கள்? வழி தெரியாமல் தவிக்கும் வழிப்போக்கர்களைவிடவும் திசை தெரிந்தும் தூங்கும் மனிதர்களாக இருப்பது மடமை. உரிமைகளை இழந்து வாழ்வது முகவரி அற்ற தபால்களைப் போன்றது.




மாட்டின் லூதர்கிங் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வருகிறது. "அடையாளங்கள் அற்று வாழ்வதைவிட அடிமைகளாக வாழ்வது மேல்" என்று அவர் கூறியவற்றை சரியாக செவிசாய்த்ததன் விளைவே வெள்ளை மாளிகைக்கு ஒரு கறுப்பு நிற அதிபரை உருவாக்க முடிந்தது. நாமும் இதை நினைவில் வைத்துக் கொண்டு ஒற்றுமையாகவும் சாதுரியமாகவும் செயற்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரை திருகோண மலை பெறமுடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்பதை விட அதற்குத் தகுதியானவர் யார் என்பதே முக்கியம். எனவே வீட்டுச் சின்னத்துக்கு உங்கள் வாக்குகளை அளித்து இரண்டு ஆசனங்களைப் பெற நாம் ஒன்றுபட வேண்டும் - என்றார். (த)

## தமிழர் இருப்பைச் சீர்குலைப்பதாக வன்னித் தேர்தல் களம் பயன்படுகிறது

### எச்சரிக்கின்றார் சாள்ஸ் நிர்மலநாதன்



முல்லைத்தீவு, ஓக. 1

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகின்ற வகையில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தை பலம் இழக்கச் செய்கின்ற வகையில் தேர்தல் களம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆட்சியாளர்களின் பணபலம், பொய் வாக்குறுதிகளால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர் சாள்ஸ் நிர்மலநாதன் முல்லைத்தீவு மூங்கிலாற்று பகுதியில் நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் அடையாளங்களை அழிப்பதற்காக தனித்துவத்தை இல்லாமல் செய்வதற்காக வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஆட்சியாளர்கள் உள்ளிட்ட பலர் பல பின்னணிகளில் வேட்பாளர்களாக களம் இறக்கப்பட்டுள்ளார்கள். தமிழர்கள் 'வீடு' சின்னத்துக்கு வாக்களிக்காமல் வேறு சின்னத்துக்கு வாக்களித்தால் மட்டும் இது சாத்தியமாகின்றது. அதற்கு எமது மக்கள் இடமளிக்கக்கூடாது.

இந்தத் தேர்தல் தமிழர்களுக்குச் சவாலானது.

இதில் தமிழர்களை பல விதங்களில் குழப்புகின்றார்கள். பொருள்கள் வழங்கப்படுகின்றன பொதுஜன பெரமுனவின் மா லொறி ஒன்று ஒட்டுசுட்டானில் சீல் வைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் எங்களை ஆள்வதற்கு இடமளிக்காது எங்களை நாங்களே ஆள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள். - என்றார். (த-19)

## ஐ.தே.கவின் புதிய அமைப்பாளராக ரகித தயான் விமலரத்ன நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சியில் அதிரடி மாற்றங்கள் மற்றும் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் பொதுத்தேர்தலில் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்காது ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படும் அமைப்பாளர்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசியல் காரணிகளுக்காக கொலை செய்யப்பட்ட முன்னாள் சப்ரகமுவ மாகாணசபை உறுப்பினர் ஜாலிய விமலரத்னவின் புதல்வரும் கேகாலை நகர சபை உறுப்பினருமான ரகித தயான் விமலரத்ன ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தில் அரசியலில் பிரபலமான இவர் 2018 ஆம் ஆண்டில் நகர சபைக்கு தெரிவான இளம் உறுப்பினராவார். (ஐ)

## தமிழ் வாக்குகளைச் சிதறடிக்க பதுளையில் பெரும் சதித்திட்டம்

### கூறுகின்றார் வடிவேல் சுரேஷ்



பதுளை , ஓக. 1

பதுளை மாவட்டத்தில் தமிழ் வாக்குகளைச் சிதறடித்து தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்குவதற்கான சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளை லுணுகலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலே இனவாதம் தலைதூக்கியுள்ளது. சிறுபான்மையின மக்களுக்கு எதிராகப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது அரசியல் இருப்பை நாம் கட்டாயம் தக்கவைத்துக்கொள்ளவேண்டும். ஆனால், பதுளை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கு சதித்திட்டம் நடந்துகொண்டிருக்கின்றது. திட்டமிட்ட அடிப்படையில் சமூகவலைத்தளங்களில் சேறு பூசப்பட்டு வருகின்றது.

தமிழ் வாக்குகளைச் சிதறடிப்பதற்காக பல சுயேச்சைக் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. ஆனால், பெரும்பான்மை இனத்தவர்கள் சரியான முறையில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர் - என்றார். (த)

## பயிற்சி நிலையங்களை மலையகத்தில் நிறுவுவோம்

### நாமல் ராஜபக் ஷ அங்கு பரப்புரை

நுவரெலியா, ஓக. 1

மலையக இளையோருக்கு தொழிற் பயிற்சிகளை வழங்கக் கூடிய வகையில் பயிற்சி நிலையங்களை நிறுவுவோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்தார்.

ஹற்றன் டீ.கே.டப்ளியூ மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இளைஞர்கள் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசியல் வரலாற்றில் நுவரெலியா மாவட்டத்துக்கு அதிக வேலைகள் நடைபெற்றமை மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மூலமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் காலப்பகுதியிலேயே என்பதை நாம் நினைவு படுத்த வேண்டும். கடந்த ஐந்து வருடங்களில் பல அபிவிருத்தித் திட்டங்கள் பாதியில் தடைப்பட்டன. வேலை வாய்ப்புகளை இழக்க நேரிட்டது. அபிவிருத்தி முழுமையாக நிறுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் கிராம பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (த)



# பொருளாதார நெருக்கடி நிலையை அரசால் நிர்வகிக்க முடியவில்லை

## முன்னாள் எம்.பி. சமன் ரத்னப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.1

அரசாங்கத்தால் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தை முறையாக நிர்வகிக்க முடியாத நிலையேற்பட்டிருக்கிறது. மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கே பெரும் சிக்கல்களைச் சந்திக்க வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸ் பரவலையடுத்து நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையின் காரணமாக கடந்த சில மாதகாலத்துக்கள் 1,800 இற்கும் மேற்பட்ட வணிகங்கள் முற்றுமுழுதாக மூடப்பட்டிருக்கின்றன. அதேபோன்று மேலும் பெரும் எண்ணிக்கையானோர் தமது வேலை வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். எனினும் இவர்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தவில்லை. எனினும் அவ்வாறு வேலைவாய்ப்பை இழந்த இளைஞர், யுவதிகள் மற்றொரு தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வரையில் மாதாந்தம் அவர்களுக்கு 10,000 ரூபாவை வழங்குவதற்கு நாம் எமது கொள்கைப் பிரகடனத்தில் உறுதியளித்திருக்கிறோம். பொருளாதாரம் ஒருபுறமிருக்க நாட்டின் சட்டதிட்டங்களும் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட நிலையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பது போன்று தெரிகிறது. முச்சக்கர வண்டித் தொழிற் சங்கத் தலைவரின் படுகொலை, அதியுச்ச பாதுகாப்பு வலயத்தில் மர்மமான முறையில் இடம்பெற்ற இறப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற மரணம் தொடர்பில் எவ்வித சி.சி.டி.வி காணொலிகளும் வெளியாகவில்லை.

எனினும் ஐ.டி.எச் வைத்தியசாலையிலிருந்து வந்த கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளியின் சி.சி.டி.வி காணொலிகள் வெளியாகின. எனினும் அதியுச்ச பாதுகாப்பு வலயத்திலிருந்து எந்தவொரு காணொலிகளும் கிடைக்கவில்லை என்பது எமக்குப் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது -என்றார். (ஐ)

# நேருக்கு நேர் கூட்டம்: குழப்பத்துக்கு முயற்சி?

கிளிநொச்சி, ஓக. 1

கிளிநொச்சி மாவட்டத்தில் இறுதிநாள் தேர்தல் பரப்புரைக்கு ஒரேநேரத்தில், நேர் எதிர் இடங்களில் இருகட்சிகள் கூட்டம் நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர். இது அந்தக் கட்சிகளிடையே வலிந்து முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. தேர்தல் பரப்புரை இறுதி நாளான ஓகஸ்ட் 2 ஆம் திகதி, கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள பசுமைப் பூங்கா மைதானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தை நடத்துவதற்கு முற்கூட்டியே அனுமதி பெறப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது மத்திய கல்லூரியின் மைதானத்திலும் அதே தினத்தில் அதே நேரத்தில் சந்திரகுமார் தலைமையிலான சுயேச்சைக்குழுவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை நடத்தவும் பொலிஸார் அனுமதி கொடுத்துள்ளனர். இவ்வாறு ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் கூட்டம் நடத்துவது பொருத்தமற்ற செயலாக இருக்கும் என்பதோடு, கட்சி ஆதரவாளர்களிடையே முரண்பாட்டையும், குழப்பத்தையும் தோற்றுவிக்கும் எனவும், எனவே இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்று முறையிடப்பட்டுள்ளது. (அ)

# அவன்காட் வழக்குக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, ஓக.1

அவன்காட் நிறுவனத் தலைவர் நிஸங்க சேனாதிபதி மற்றும் பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிரான அவன்காட் நிறுவன வழக்கிற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த வழக்குத் தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றில் இடம்பெறும் விசாரணைகளை இடைநிறுத்தவே மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இந்த இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்தது. அவன்காட் நிறுவனத்திற்கு மிதக்கும் ஆயுத களஞ்சியசாலையை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கியமை, துப்பாக்கி கட்டளை சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றம் எனத் தெரிவித்து சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 1

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,391 ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது. இன்று மேலும் 58 பேர் குணமடைந்துள்ள நிலையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்று உறுதியான மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 814 ஆக அதிகரித்துள்ளது. (ரி2)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்
நேர்மையும் கண்ணியமும் மிகுந்த,
அனுபவமும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட,
எளிமையான, இலகுவில் அணுகக்கூடியவர்களை
எங்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்வோம்!
(தமிழ் மக்கள் பண்பாட்டுப் பேரவை)

6
தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

7
பாலச்சந்திரன்
கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)
1 2 3 4 5 6 7 8 9 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனவாதமும் இன்னொரு பெருந்தொற்றே!

இனப்பிரச்சினைக்கான தீர்வு நந்திக்கடல் முடிவுடன் கொடுக்கப்பட்டாயிற்று. எனவே தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி வாய்திறக்கக்கூடாது. இவ்வாறு எச்சரித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர.

அமாவாசை, பௌர்ணமி போன்ற கனத்த நாள்களில் உளநலம் பாதிக்கப்பட்ட சிலர் மூர்க்கமாக நடந்துகொள்வார்கள் என்பது எம் முன்னோர்களின் ஐதீகம். இது உண்மையாகக்கூட இருக்கலாம். எம்மில் பலர் அத்தகையவர்களைக் கண்டிருப்போம். இலங்கையில் இனவாதம் என்பதும் அத்தகைய ஒன்றுதான். தேர்தல்கள் போன்ற 'கனத்த' நாள்கள் வந்துவிட்டால்போதும் இத்தகைய இனவாத வியாதி பிடித்தோருக்கு மூர்க்கக் குணம் இயல்பாகவே வந்து ஒட்டிவிடும்.

இனவாதம்தான் தென்னிலங்கையின் வாக்குவங்கியைத் தீர்மானிக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர், பொதுபலசேனாவினர், விமல் வீரவன்ஸ உள்ளிட்ட பலரின் அரசியல் இருப்பும் சமூகத்தின் மட்டில் அவர்களுக்கு ஏற்படும் செல்வாக்கும் இத்தகைய இனவாதக் கருத்துக்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. தற்போது தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில் சிறுபான்மை இனங்களான தமிழர்களையும், முஸ்லிம்களையும் தாக்கி இவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் மட்டில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இல்லை.

இவை வாக்குகளுக்காகவும் சமூக அந்தஸ்துக்காகவும் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் மட்டுமே என்று எடுத்துவிட்டுக் கடந்துவிடவும் முடியாது. இத்தகைய இனவாதிகள் தாம் வெளிப்படுத்துகின்ற விசமக் கருத்துக்களில் சிலவற்றை நிறைவேற்றி விட்டால் போதும் அடுத்த சில ஆண்டுகளுக்கு அவர்கள் தெற்கின் வெற்றி வீரர்களாக நீண்டு நிலைப்பார்கள். திருகோணமலைக்கு சிங்களச் சாயம் பூசப்பட்டதைப் போன்று அடுத்தடுத்து ஒவ்வொரு இடங்களாக அவர்கள் முன்னேறக்கூடும். போர் மூலமாக தமிழர்களிடம் இருந்து கைப்பற்றப்பட முடியாதவற்றை மத, கலாசார, பண்பாட்டுச் சாயங்களைப் பூசிக் கைப்பற்றிவிட அவர்கள் எத்தனிக்கின்றனர்.

இத்தகைய பெரும் அழிவில் இருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும் தமது இருப்பைத் தக்கவைக்கவும் தமிழர்கள் முனைப்புக்கொள்ள வேண்டும். கட்சிகளால் வேறுபட்டிருந்தாலும் 'இனவாதம்' என்ற ஒன்றின்கீழ் சிங்கள பேரினவாதிகள் ஒன்றுபடுவதைப்போன்று தமிழர்களும் ஒற்றுமை என்ற ஒன்றை தமது இருப்புக்கான ஆயுதமாகக் கொள்ள வேண்டும். வரவுள்ள பொதுத்தேர்தலில் தேசியக் கட்சிகளுக்கோ அல்லது அவர்களின் அடிவருடிகளுக்கோ வாய்ப்புக்களை இம்மியும் வழங்கக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருத்தல் வேண்டும். இதற்காக அனைவரும் ஓரணியில் ஒன்றுதிரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். அதுவே எமது இருப்பின் அத்திபாரம் என்பதை அனைவரும் புரிந்துகொள்வோம்.

கொரோனா மட்டுமல்ல இனவாதமும் இலங்கையில் இன்னுமொரு பெருந்தொற்று. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தால் கொரோனாவை எவ்வாறு வெல்ல முடியுமோ அதுபோன்று தேசியக் கட்சிகளையும் வாக்குகளைச் சிதறடிக்கும் எட்டப்பர்களையும் இனங்கண்டு இடைவெளியைப் பேணுவதன் மூலம் இனவாதப் பெருந்தொற்றையும் வீழ்த்த முடியும். பயன்படுத்துவோமாக!.



# தோல்வியுற்ற அரசுடன் 'டீலா'?

## ஐ.தே.கவுக்கு அவசியமில்லை என்கிறார் அகிலவிராஜ்

கொழும்பு,ஓக.1

**ஆட்சியமைத்து குறுகிய காலத்தில் தோல்வி கண்டுள்ள அரசுடன் 'டீல்' வைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது.**



தனித்து அரசைக் கைப்பற்றி சிறந்த நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே புதிய இளம் தலைமுறையினரை களமிறக்கியுள்ளோம். வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை எம்மால் மாத்திரமே மீளக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மத்திய கலாசார நிதியத்தில் முறைக்கேடுகள் இடம் பெற்றுள்ளன என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக நான் பதவி வகித்த காலத்தில் கலாச்சார நிதியத்தில் எவ்வித நிதி மோசடிகளும் இடம் பெறவில்லை.

நிதியத்தைப் பொறுப்பேற்கும் போது நிலையான வைப்பில் 30 கோடி ரூபா நிதி காணப்பட்டது. கலாசார அலுவல்கள் அமைச்சை பிறிதொரு தரப்பினருக்கு வழங்கும் போது நிதியத்தின் வைப்பில் 4.5 பில்லியன் ரூபா நிதி சேமிக்கப்பட்டிருந்தது. மத்திய கலாசார நிதியத்துக்கு வருவாயை அதிகரிப்பதற்கும், செலவுகளைக் குறைப்பதற்கும் முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

நிதியத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் அனைத்து தீர்மானங்களும் முன்னெடுக்கப்பட்டன.

சசுனோதய திட்டத்தின் கீழ் குறைந்த வருமானங்களைக்கொண்ட ஆயிரத்து 500 விகாரைகளுக்கு பிரதேச சபையின் ஊடாக 5 இலட்சம் ரூபா அபிவிருத்தி நிதி வழங்கப்பட்டது. அத்துடன், புராதன குளங்கள் மற்றும் தொல்பொருள் மரபுரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதறகும், அதனூடாக பயன் பெறுவதற்கும் சர்வதேச தரத்திலான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

ஆகவே எனது பொறுப்பில் இருந்தபோது, நிதியத்தில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்பதை உறுதியாகக் குறிப்பிட வேண்டும்.

பிற்பட்ட காலத்தில் அமைச்சு பதவி வகித்தவர் தொடர்பான அனுமானங்களையும் குறிப்பிட முடியாது. தேர்தல் இடம் பெறவுள்ள காலத்தில் அனைத்துச் செயற்பாடுகளும் ஒரு தரப்பினருக்கு சாதகமாகவும், பிறிதொரு தரப்பினருக்கு பாதகமாகவும் காணப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு எதிரான சதிகளை ஐக்கிய தேசியக் கட்சி, பிரதமருடன் கூட்டணியமைத்து முன்னெடுப்பதாக சஜித் தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

ஆட்சியமைத்து குறுகிய காலத்தில் அனைத்து மட்டத்திலும் தோல்வி கண்டுள்ள பிரதமர் மஹிந்தவின் பலவீனமான அரசுடன் டீல் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை எமக்கு கிடையாது - என்றார்.

(க)

# அரசியல் கட்சிகளின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,ஓக.1

ஓகஸ்ட் மாதம் இடம்பெறும் பௌர்ணமி தினத்தன்று தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அரசியல் கட்சி செயலாளர்கள் முன்வைத்த கோரிக்கை தேர்தல் ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவுடன் அண்மையில் நடந்த கூட்டத்தில், கட்சி செயலாளர்கள் கொரோனாத் தொற்றின் காரணமாக தங்களது தேர்தல் நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியவில்லை என்று சுட்டிக்காட்டினர். இதன் காரணமாக எதிர்வரும் ஓக்ஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வீடு வீடாகச் சென்று அல்லது தமது தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

கொவிட்19 தொற்று நிலைமையுடன் எதிர்நோக்கிய கட்டுப்பாடுகள் காரணமாக வீடு வீடாகச் சென்று வாக்குகளை இரந்து கேட்டல், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகள் ஓகஸ்ட் 3 ஆம் திகதி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக பரிசீலிப்பதற்கு, இணக்கம் தெரிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும், நடைமுறை சட்டத் தடங்கல்கள் காரணமாக, அதனைக் கைவிடத் தீர்மானித்துள்ளதாக,

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இருப்பினும், ஒகஸ்ட் 2 ஆம் திகதி நள்ளிரவில் விளம்பரபரப்புரை முடிவடைந்ததாலும், மேலும் பல பிரச்சினைகள்

ஏற்படக்கூடும் என்பதால் அதற்கு அனுமதி வழங்க முடியாது என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (க)

# கட்சியிலிருந்து நீக்க தீர்மானம்; ரஞ்சன் வழக்கு

கொழும்பு,ஓக.1

ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீக்க கட்சி எடுத்துள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்க தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, அந்தக் கட்சியின்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உப தலைவர் ரவி கருணா நாயக்க, பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டணி உருவாக்கப்பட்டது என்று ரஞ்சன் ராமநாயக்க தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (க)

# தமிழ்த் தேசிய இருப்புக்காக ஓரணியில் பயணிப்போம்!

## அழைக்கின்றது அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையம்

வவுனியா, ஓக. 1

**தமிழ்த் தேசிய இருப்பை நிலைநிறுத்த ஓரணியில் பயணித்து ஒருங்கிணைந்து முடிவெடுப்போம் என்று அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையம் குறிப்பிட்டுள்ளது.**

இது பற்றி அந்த அமைப்பு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பொதுத்தேர்தலானது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பெறுவதற்கான ஒரு வழியல்ல என்பதை தமிழ் இனம் நன்கு பட்டறிந்துள்ளது. என்றுமே மாறாத பெரும்பான்மை சிங்கள உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் தமிழ் இனத்தின் உரிமைக் குரல்கள் புறக்கணிக்கப்பட்டமையே வரலாறு. தமிழர் தாயகப் பகுதிகளை விழுங்கி மக்களை இனப்படுகொலை செய்த அரசு தற்போது தமிழ் இனத்தின் தொன்மைக்கான அடையாளங்களை அழிப்பதனூடாக வரலாற்றை மாற்றி இனவழிப்பை வலிமைப்படுத்த முயற்சிக்கிறது.

இலங்கையில் இன்று தமிழ்த் தேசிய இனம் உள்ளகத் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி ஜனநாயக வழியில் உரிமைகளை நிலைநிறுத்த முடியாமல் தடுக்கப்பட்டுள்ளது. எனவே எங்கள் இனத்தின் வெளியகத் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி சர்வதேச நாடுகளினதும், அமைப்புக்களினதும் ஆதரவுடன் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை நிலை நாட்டுவதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியையும், போர்க் குற்றச் செயல்கள், மற்றும் இனவழிப்பு ஆகியவற்றுக்கான நீதியையும் பெறுவதே இன்று எம்மினத்தின் முன் உள்ள ஒரே வழியாகும்.

எனவே இந்தத் தேர்தலில் தமிழ் இனத்துக்கான பிரதிநிதிகளை பெரும்பான்மையாகத் தெரிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம்.

அனைத்துலக நியமங்களின்படி சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடக்குமுறைகளையும், எமது இனத்தின் உரிமைகளையும், இலங்கை அரசியல் சாசனத்தின் புறக்கணிப்புகளையும், தமிழ் இனத்தின் மீதான இனவழிப்பையும் அனைத்துலக சமூகத்திடம் கொண்டு செல்வதற்கு ஜனநாயகப் பொறிமுறை ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர். இதற்கு தாயகம், தமிழகம், புலம்பெயர் சமூகம் ஆகியவற்றில் வாழும் அனைத்து தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து ஈழத்தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் முனைப்புள்ளவர்கள் எமக்குத் தேவை- என்றுள்ளது. (த-110)




## திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் ஐ.ச.கூட்டமைப்பு போட்டியிடவில்லை

*அதன் செயலாளர் நாயகம் பகிரங்க அறிவிப்பு*

அம்பாறை. ஓக.1

திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் முஸ்லிம் கட்சிகளை ஒரே சின்னத்தில் களமிறக்குவதற்கு முன்னெடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளதால் அங்கு போட்டியிடுவதற்கு எடுத்த தீர்மானத்தை கைவிட்டுள்ளதாக ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம். ரி. ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் மட்டுமே போட்டியிடுகின்றது.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான தீர்மானம் ஏற்கனவே கட்சியால் எடுக்கப்பட்டிருந்த போதிலும் , அங்கு முஸ்லிம் கட்சிகளை ஒரே சின்னத்தில் களமிறக்க எடுத்த முயற்சி தோல்வி அடைந்ததால் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது. அங்குள்ள சில கட்சிகள் தனியாகப் போட்டியிடுவதற்கும், வேறு சிலர் பெருந்தேசியக் கட்சிகளில் கூட்டாகவும் தனியாகவும் எவ்வித நிபந்தனைகளும் இன்றிப் போட்டியிடுவதற்கும் தீர்மானித்திருந்ததால் முஸ்லிம் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள் உரிய அளவு கிடைப்பதற்கான வாய்ப்பு அங்கு கடுமையான சவால்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதனால் நாட்டில் முஸ்லிம் சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஒரேயொரு மாவட்டத்தை நாம் இலகுவாக வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பம் கை நழுவிப்போயுள்ளது. இவ்வாறான ஒரு துரதிஷ்டமான நிலைமையை மேலும் மோசமாக ஆக்கக்கூடாது என்பதற்காக ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடாமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (ஐ)




# அற்ப அரசியலுக்காக பொய் வாக்குறுதிகளா?

## நஸீர் அஹமட் ஆதங்கம்

ஏறாவூர்.ஓக.1



வறிய மக்களுக்கு உதவி தருகின்றோம். வீடமைத்துத் தருகின்றோம் என்றெல்லாம் பொய் வாக்குறுதி கூறி அற்ப அரசியலுக்காக மக்களை ஏமாற்ற வேண்டியதில்லை. வறுமைப்பட்ட மக்களுக்கு வாழ வழியேற்படுத்திக் கொடுப்பதே நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர் நகரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில அரசியல்வாதிகளுக்கு மக்களைத் தொடர்ந்து வறுமையிலேயே உழல வைக்க வேண்டும் என்றும், அவர்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் உயர்ந்து விடக் கூடாது என்ற உள்நோக்கமும் இருக்கிறது. இதனால் தான் அடிமட்ட மக்களை அப்படியே வைத்திருக்க அவர்கள் நினைக்கின்றனர்.

வறிய மக்களை சதாகாலமும் கையேந்தும் நிலையில் விட்டுவைப்பது ஒரு சமூகத் தலைவனின் தலைமைத்துவப் பொறுப்பாக இருக்க முடியாது.

தேர்தல் பரப்புரைக்காக வீடு வீடாகச் செல்லும் போது மக்கள் வாழ்வதற்கான தங்களது ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார்கள். உதவியைக் கோரி நிற்கிறார்கள். இப்படிப்பட்ட ஏழைகளிடம், கடந்த 30 வருடங்களாக பொய் வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர்.

வீடமைத்துத் தருகின்றோம் என்று வாக்குறுதியளித்த அரசியல்வாதிகள் வெளிநாடுகளிலும் ஆடம்பர வீடுகளை வாங்கியுள்ளனர். ஆனால் ஏழைகள் இவர்களது பொய் வாக்குறுதிகளை நம்பி இன்னமும் ஒழுகிக் கரையும் குடிசை களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 2021 ஆம் ஆண்டாகும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையற்ற இளைஞர்கள் வெறுமனே காலத்தைக் கழிக்காமல் அவர்கள் கை நிறைய வருமானம் பெறும் தொழில்வாய்ப்பைப் பெற்றிருப்பார்கள் என்பதே எனது வாக்குறுதியாகும் - என்றார். (க)

# "நல்லைக் குமரன்" மலர் வெளியீடு





யாழ்ப்பாணம், ஒக.1

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகார குழுவின் ஏற்பாட்டில் நல்லைக் குமரன் மலர் வெளியீடும், யாழ்.விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுக் காலை நாவலர் மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகார குழுவால் வருடந்தோறும் நல்லூர் முருகன் ஆலய உற்சவகாலத்தில் "நல்லைக்குமரன்" என்ற நூல் வெளியிடப்படுவதுடன், சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றியதுடன் நில்லாது பல சமூகப் பணிகளையும் மேற்கொள்பவர்களுக்கும் 'யாழ்.விருது' வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவின் தலைவரும் யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளருமான த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்கள், சைவ சமய விவகார குழுவின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த வருடத்துக்கான "யாழ். விருது" கவிஞர் சோ. பத்மநாதனுக்கு வழங்கப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சோ. பத்மநாதனுக்கு இந்த விருதை வழங்கி கௌரவித்தார். பொற்கிழியை யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் வழங்கினார்.

தொடர்ந்து நல்லைக்குமரன் மலர் வெளியிடப்பட்டது. நல்லைக்குமரன் மலரின் முதல் பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரதிநிதி பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகரசபை துணை முதல்வர் து.ஈசன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ் விருதைப் பெற்ற கவிஞர் சோ. பத்மநாதன் ஏற்புரையை நிகழ்த்தினார்.

(ஐ-111)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஒக.1

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா காலை 7.30 மணிக்கும்,மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். தொடர்ந்து செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத்திருவிழா நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-17)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய 7 நாள் மாலைநேர திருவிழாவின் பதிவு




## தேரடியை மறவாதீர்!

நம்மை நாம் சிந்திக்க
நல்லூரானின்
திருவிளையாடலிது
நமக்குள் நல்லூரான்
இருக்கும் போது
நமக்கேது பயம்?
தம்மையே புகழ்ந்து
இச்சை பேசுவோர்
தரணிக்குப் பாரமானார்
தவத்திரு யோகரும்
செல்லப்பரும் மேவிய
தேரடியை மறவாதீர் !

*கே.எஸ்.சிவஞானராஜா*

## நல்லருள் தருவாய் கந்தனே!

நின்னைச் சரணடைந்தேன் முருகா
நின் மலர்ப்பாதங்களில் பணிந்தெழுதேன்
நின்னருள் வேண்ட கைகூப்பி நின்றேன்
நின் செவியினிக்க பண்ணிசைத்தேன்
நின் கண்ணிரண்டில் எனைக்காண ஓடி வந்தேன
நீயே கதியென்று நல்லூர் முருகா
நிர்க்கதியற்று நாவசைத்து வேண்டுகின்றேன்
நமக்கெல்லாம் நல்லருள் தருவாய் கந்தனே!

*அரியாலையூர்*
*மிஷாந்தி செல்வராஜா*

## நல்லை நகரின் நாயகன்

குறிஞ்சி நிலத்தின் குமரன்
குறைகள் களையும் வேலன்
நாற்றிசை போற்றும் போலன்
நாவில் உறையும் சீலன்
செய்வினைகள் அருளும் ஆரோன்
தில்லைக் கூத்தனின் மைந்தன்
நல்லை நகரின் நாயகன்

*லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்*
*மறவன்புலோ மத்தி.*



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
வாயுபுத்ரா போன் சொப்
இல.364,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
077 364 4246,
077 859 5151

# கொரோனாப் பரவலை தடுக்க தீவிர நடவடிக்கை

*சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டு*



**கொழும்பு, ஓக.1**
**கொரோனா கொத்தணியில் நோயாளிகள் அடையாளம் காணப் படுவதில் சில சமூகப் பரவல் காணப்பட்டாலும் இந்த நோயா ளிகள் ஊடாக வைரஸ் சமூகத்திற்குள் பரவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார பணிப் பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.**

சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய பிரிவுகள் இணைந்து கொரோனா பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கை களை மேற்கொள்கின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். சுகாதார பிரிவு, பாதுகாப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவு நோயாளிக ளுக்கு அருகில் செயற்பட்டவர் களைக் கண்டறியும் நடவடிக்கைக ளில் ஈடுபட்டுள்ளன என்று சுகாதார பணிப்பாளர் தெரிவித்துள்ளார். கொரோனாப் பரவல் தொடர்பில் வெளியிட்ட விசேட அறிக்கையி லேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ரி1)



## குரங்குகளின் தொல்லையால் தோட்டச் செய்கை பாதிப்பு

மன்னார், ஓக. 1
நானாட்டான் பிரதேசத்தில் குரங்குகளின் தொல்லை யால் தோட்டச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மன்னார் நானாட்டான் பிரதேசத்திற்குட்பட்ட இராசமடு மடுக் கரை போன்ற பிரதேசங்களில் அதிகளவான மேட்டு நிலப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேலிகள் அடைத்து பாதுகாப்பு செய்த போதும் குரங்குகள் நிலக்கடலை, பயறு, கௌப்பி போன்ற பயிர்களை வேருடன் பிடுங்கி நாசப்படுத்துவதுடன் தென்னை மரங்களில் காணப்படும் குரும்பை களை யும் பிய்த்து சேதப்படுத்துகின்றன என்று தோட்டச் செய்கையாளர்கள் தெரிவித்தார்கள்.
மேலும் பனை மரங்களில் ஏறி கள்களை குடித்துவிட்டு பாலைகளில் கட்டப்பட்டுள்ள முட்டி மற்றும் பிளாஷ் ரிக் போத்தல்களை அறுத்து குரங்குகள் எறிந்து விடுகின்றன என்றும் சீவல் தொழிலாளிகள் தெரி வித்தார்கள். குரங்குளின் தொல்லையால் தோட்டங் களிலும் பனை மற்றும் தென்னை மரங்களின் அருகிலும் தொடர்ச்சியாக காவல் நிற்க வேண்டியுள் ளது என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள் ளனர். (ரி1-213)

இராஜாங்கனையில்

## தபால்மூல வாக்களிப்பு நிறைவு

கொழும்பு, ஓக.1
கந்தகாடு புனர்வாழ்வு மத் திய நிலையத்தில் கொவிட் 19 தொற்று நோயாளர்களு டன் தொடர்புகளை பேணி யமை தொடர்பில் மூடப்பட்டி ருந்த இராஜாங்கனை பிர தேசத்தின் தபால் மூல வாக் களிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந் துள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள் ளது. இராஜாங்கனை பிரதே சத்தில் 502 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றிருந் தனர். இதில் 472 பேர் தமது வாக்குகளை அளித்துள்ளனர் என ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ரி1)

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் 13 வயதுக்குட்பட்டோருக்கு தடை

கொழும்பு, ஓக. 1
தொலைக்காட்சி மெய்மை நிகழ்ச்சி கள், விளம்பரங்கள் மற்றும் விளம்ப ரங்களுக்கு குரல் கொடுப்பது போன் றவற்றில் சிறுவர்களை பயன்படுத்து வது தொடர்பில் கடுமையான வழிகாட் டுதல்களை அறிமுகப்படுத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. 13 வய துக்குட்பட்ட சிறுவர்களை தொலைக் காட்சி மெய்மை நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்துகின்றமையை தடைசெய் வது தொடர்பில் எதிர்காலத்தில் வர்த் தமானி அறிவிப்பும் வெளியிடப்படும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி கார சபையின் தலைவர் கலாநிதி முதித்த விதானபத்திரன தெரிவித்தார். நாட்டிலுள்ள அனைத்து தொலைக் காட்சி அலைவரிசைகளும் வழிகாட் டுதல்களை கடைபிடிக்க வேண்டியி ருக்கும் என்றும், அவ்வாறு இணங் கத் தவறும் அலைவரிசைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.
தொலைக்காட்சி மெய்மை நிகழ்ச்சி களுக்குப் பயன்படுத்தப்படும் சிறுவர் களைத் துஷ்பிரயோகம் செய்வது குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு சபைக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக வெகு ஜன ஊடக அமைச்சுடன் தொடர்ச்சி யான கலந்துரையாடல்கள் நடை பெற்று வருகின்றன என்றும் வழிகாட் டுதல்களின் வரைவு கடைசி கட்டத்தை எட்டியுள்ளது என்றும் முதித்த விதா னபத்திரன தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சி நிலையம் ஒன்றில் மெய்மை நிகழ்ச்சி மேடை அமைப்பா ளரான 54 வயதான நபர் ஒருவர் பன்னிபிட்டியவில் உள்ள அவரது வீட்டில் வைத்து சிறுவர்களை துஷ்பி ரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமையை அடுத்து இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி1)

இராஜாங்கனையில்

## பயணக் கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கம்

அநுராதபுரம், ஓக.1
கொரோனாத் தொற்றுக் காரணமாக அநுராதபுரம், இராஜாங்கனைப் பகுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள் இன்றுமுதல் முற்றாக நீக்கப் பட்டுள்ளது.
அந்த பகுதியிலிருந்து பல புதிய கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டமையினால் இரா ஜாங்கனைப் பகுதிக்கு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.
எனினும், கடந்த 19 ஆம் திகதி முதல் இதுவரை இந்தப் பிரதேசங்களில் எந்தவொரு தொற்று நோயாளரும் இனங்காணப்படாத நிலையில் தற்போது இரா ஜாங்கனை பிரதேசத்தில் கொவிட்19 தொற்று பரவல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே சுகாதார அதிகாரிகளின் ஆலோ சனைக்கு அமைவாக பயணக் கட்டுப்பாடுகள் நேற் றுக் காலை முதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளது. (ரி2)

## தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்கு

மஸ்கெலியா, ஓக.1
மஸ்கெலியா மற்றும் நல்லதண்ணிப் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட இரு வெவ்வேறு பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.
இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில், 14 பெண்களும் ஓர் ஆணும் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறே தோட்ட வலதல பிரிவில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 11 பெண் தொழிலாளர்களுடன் ஓர் ஆண் தொழிலாளியும் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் மஸ் கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமி மலை தோட்ட பெரிய சூரியகந்தை பிரிவில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது தேயிலைச் செடிக்கு அடியிலி ருந்த குளவிக் கூடு கலைந்ததில் மூன்று பெண்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி லியத்தபிட்டிய தெரிவித் துள்ளார். (ரி2)



## முல்லைத்தீவில் தேர்தல் அறிவுறுத்தல் வகுப்பு

முல்லைத்தீவு, ஓக.1
முல்லைத்தீவு மாவட்டத்தில் 2020 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடு படும் முதன்மை தலைமை தாங் கும் அலுவலர்களுக்கான அறிவு றுத்தல் வகுப்பு முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தினால் நேற்றுமுன்தினம் முன்னெடுக் கப்பட்டுள்ளது.
மாவட்டச் செயலாளர் க.விமலநா தன் தலைமையில், முல்லைத்தீவு மாவட்டச் செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.



வன்னித் தேர்தல் மாவட்டத்தின், முல்லைத்தீவுத் தேர்தல் தொகுதி யில் வாக்கெடுப்பு நிலையங்களில் முதன்மை தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிக்கப்பட்ட வர்களுக்கான இறுதி அறிவுறுத் தல் வகுப்பே நடைபெற்றுள்ளது. மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் கலந்து கொண்டு இந்த அலுவ லர்களுக்கு செயன்முறை ரீதி யான பயிற்சிகளை வழங்கியுள் ளார்.
இதன்போது, நாட்டின் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, தேர்தலின்போது நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ள விசேட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் செயன்முறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (ரி2-19)

# கொரோனாவுக்கு அஞ்சாமல் திரண்டு சென்று வாக்களியுங்கள்!

## பேராசிரியர் ஹூல் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.1

மக்கள் கொரோனா தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை. தங்களது உரிமையை நிலைநாட்ட அனைவரும் வாக்களிக்க வேண்டும் என தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக மக்கள் வாக்களிப்பதற்கு தயங்குகிறார்கள் அல்லது பயப்படுகிறார்கள் என்ற நிலைமை காணப்படுகின்றது . உண்மையில் மக்கள் கொரோனா தொடர்பில் அச்சப்பட தேவையில்லை. நாங்கள் வாக்களிப்பின் போது கொரோனா தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எம்மைப் பொறுத்தவரைக்கும் ஏற்கனவே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு வாக்களிப்பை மேற்கொள்வது தொடர்பாக மாதிரி வாக்களிப்பினை பரீட்சித்துப் பார்த்திருக்கிறோம்.

தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடியில் வாக்களிப்பின் போது கொரோனாத் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு குறைவானதாகவே இருக்கும். அதாவது நீங்கள் வீதியில் பயணிக்கும் போதோ அல்லது தங்களுடைய அன்றாட கடமைகளைச் செய்யும்போதோ கொரோனாத் தொற்று ஏற்படுகின்ற வாய்ப்பைவிட வாக்களிப்பு நிலையத்துக்குள் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

அத்தோடு நீங்கள் வாக்களிப்பு நிலையத்துக்குள் செல்லும்போது முகக் கவசம் அணிந்து கைகளை கழுவி ஏனையோர் பாவித்த பேனைகளைப் பாவிக்காத வகையில் பல சுகாதார நடைமுறைகளை வாக்களிப்பு நிலையங்களில் மேற்கொண்டுள்ளோம். எனவே உங்களுக்குரிய வாக்களிப்பு உரிமையை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் -என்றார். (அ-20)




# யானைகள் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 1

இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வன உயிரிகள் திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மின்னேரியா உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில், அதிகளவான யானைக் குட்டிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதனால் யானைகளின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிக்கின்றது என்று கருதுகின்றோம் என்று அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித் துள்ளது. (ம)

# கருக்கலைப்பு நிலையம் நடத்திய போலி வைத்தியர் கைது

கொழும்பு, ஓக.1

நிட்டம்புவை பகுதியில் கருக்கலைப்பு நிலையம் ஒன்றை நடத்தியபோலி வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 40 வயதுடைய ஒரு வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரிடம் இருந்து கருக்கலைப்புக்காக பயன் படுத்தும் உபகரணங்கள் சிலவும் வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நிட்டம்புவைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ரி2)

# உரிமைகளை ஒழித்தது 19

## மஹிந்தவின் விளக்கம்



கொழும்பு.ஓக.1

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லாதொழித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி துரதிஷ்டவசமாக ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த தன் காரணமாகவே பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சியை ஸ்தாபித்தோம். எமது கட்சி தொடர்ந்து பலப்படுத்தப்படும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்தார். கண்டி நகரில் இடம் பெற்ற துறைசார் நிபுணர்களின் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

ராஜபக் ஷர்களின் உரிமைகளை மறுப்பதற்காகவே அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நல்லாட்சி அரசால் உருவாக்கப்பட்டது. இத்திருத்தத்தால் சாதாரண மக்களின் அடிப்படை உரிமைகள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. புதிய அரசில் இந்த தவறு திருத்திக் கொள்ளப்படும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி துரதிஷ்டவசமாக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்ததன் காரணமாவே புதிய கட்சியை உருவாக்கினோம். இழக்கப்பட்ட உரிமைகளை ஜனநாயக ரீதியில் முறையாகப் பெற்றுக் கொண்டுள்ளோம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் வெற்றியைத் தடுப்பதற்கு கடந்த அரசு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சூழ்ச்சிகளை முன்னெடுத்தது . அனைவரது முயற்சிகளும் தோல்விய டைந்தது. 69 இலட்ச மக்கள் ஜனநாயக ரீதியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

புதிய அரசில் துரிதமாக ஆற்ற வேண்டிய விடயங்கள் பல உள்ளன. அரசியலில் சிறந்த தேர்ச்சி மிக்கவர்களையும், நாட்டுக்குச் சேவையாற்றும் இளம் தலைமுறையினரையும் மக்கள் நாடாளுமன்றுக்கு இம்முறை தெரிவு செய்ய வேண்டும். என்றார். (சு)

# பிள்ளையானுக்கு அமைச்சுப் பதவி?

கொழும்பு, ஓக.1

நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) வெற்றி பெற்றால் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என ஸ்ரீலங்காபொதுஜன முன்னணி வாக்குறுதியளித்துள்ளது. இந்தத் தகவலை பிள்ளையானுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று 'டெய்லிமிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

**எனினும், அவர் சிறையிலிருந்து பிணையில் விடுதலையானால் மாத்திரமே அமைச்சுப் பதவியை வழங்க முடியும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்த பிள்ளையான் தற்போது சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.**

பிள்ளையானைத் தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பதன் மூலம் அவருக்கு அமைச்சுப் பதவி கிடைப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று அவரின் சகா ஒருவர் தெரிவித்தார் எனவும் 'டெய்லிமிரர்' செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-22)

# சஜித்துக்கு ஆதரவளித்த 37 பேர் நேற்று 'அவுட்'!

## ரணில் அதிரடி

கொழும்பு,ஓக.1

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கும் மேலும் 37 உறுப்பினர்களின் கட்சி உறுப்பிரிமையை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அதி ரடியாக நீக்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக வேட்புமனுக்களை தாக்கல் செய்த உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த அதிரடி நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது. 54 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 61 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் அடங்கலாக 115 பேரை சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் அடுத்த கட்டமாகவே நேற்று மேலும் 37 பேர் நீக்கப்பட்டுள்ளனர். (அ-22)

# காலையிலேயே சென்று வாக்களித்து விடுங்கள்

## பேனையும் கொண்டுசெல்லுங்கள் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் கோரிக்கை

**கிளிநொச்சி, ஓக. 1**

நாட்டில் தற்போது உள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நேரத்துடன் சென்று வாக்களிக்குமாறு மாவட்டச்செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தேர்தல் நிலைமைகள் தொடர்பாகக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்டத்தில் 92ஆயிரத்து 264 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தபால் மூல வாக்களிப்பு நிறைவடைத்துள்ளது. அதில் 90 வீதத்துக்கு மேல் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது. குறிப்பாக தபால் மூலம் 3ஆயிரத்து 590 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

5 ஆம் திகதி இடம்பெறவுள்ள தேர்தலில் ஆயிரத்து 596 அலுவலர்கள் பணியாற்றவுள்ளனர். 107 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

அடுத்த நாள் காலை 8 மணிக்கே 14 வாக்கு எண்ணும் நிலையங்களிலும் வாக்கு எண்ணும் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளன. இதுவரை மாவட்டத்தில் பெரிய அளவிலான தேர்தல் முறைப்பாடுகள் எவையும் கிடைக்கவில்லை. சாதாரண முறைப்பாடுகள் 37 கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவித்தார்.

மாவட்ட மக்கள் நாட்டில் உள்ள தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு சுகாதார முறைகளைப் பின்பற்றி முகக் கவசங்களை அணிந்து கறுப்பு அல்லது நீல நிற பேனைகளைக் கொண்டுசெல்ல வேண்டும்.

காலை 7 மணிக்கு ஆரம்பிக்க இருக்கும் வாக்களிப்பு நடவடிக்கை மாலை 5 மணி வரை இடம்பெறும். மாலை வரை காத்திராது நேர காலத்துடன் சென்று வாக்களியுங்கள். தேர்தல் செயற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளன. என்றார். (த-6)

# குடிதண்ணீர் விநியோகத்திட்டம் மக்களிடம் நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம். ஓக. 1

யாழ்ப்பாணம் இருபாலை தெற்கு ஞானவைரவர் கோயிலடி பிரதேச மக்களுக்காக 25 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்திட்டம் நேற்று அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இருபாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஞான வைரவர் கோயிலடி கிராம மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந் நிலையில் மக்களின் குடிதண்ணீப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பிரதேச சபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் எடுத்த முயற்சியின் பயனாக இத் திட்டம் அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



தேர்தல் திணைக்களம், மாவட்டச் செயலர் ,பிரதேச செயலர் ஆகியோரின் அனுமதியுடன் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதேச நீர்ப்பாவணையாளர் சங்கத்தலைவர் பாக்கியராசா பிரதீபன் தலைமை தாங்கினார்.

சமூக தண்ணீர் வழங்கல்திணைக்கள மாகாணப் பொறியியலாளர் க. நிஜாந்தன் குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து மக்களிடம் கையளித்தார். (ஐ-20)

## டெங்கு நுளம்பு பெருகும் சூழல் காணப்படின் சட்ட நடவடிக்கை

சாவகச்சேரி ஓக. 1

டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் தண்ணீர் ஏந்து பொருள்களை அகற்றாமல் உள்ள குடியிருப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சுகாதாரத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொடிகாமம் பகுதியில் நீண்டகாலமாக (2018-2020)டெங்கால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந் நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பிராந்திய பூச்சியியலாளர் தலைமையில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்குக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் ஆகியோர் அப்பகுதியில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சுமார் 60 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் கொடிகாமம் பொலிஸ் நிலையம் மற்றும் பாடசாலைகள், குடியிருப்புகள் போன்றவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய தண்ணீர் ஏந்து பொருள்கள் அதிக அளவில் காணப்பட்டன.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் தண்ணீர் ஏந்து பொருள்களில் மூன்று நாள்கள் தொடர்ச்சியாக தண்ணீர் தேங்கி நிற்பின் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய வாய்ப்புகள் காணப்படும்.

இதனைக் கருத்தில்கொண்டு டெங்கு குடம்பிகள் காணப்பட்ட பொலிஸ் நிலையம் மற்றும் பாடசாலைகள் போன்ற 7 பொது இடங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## வர்த்தகர் மூவருக்கு ரூ.12 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி. ஓக. 1

திகதி காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்கள் மூவருக்கு தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார திணைக்கள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அண்மையில் கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது வண்டு மொய்த்த மா மற்றும் கடலை, பழுதடைந்த பூரான் கிழங்கு, குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான மென்பானங்கள் திகதி காலாவதியான பொதி செய்யப்பட்ட ஐந்து கிலோ நிறையுடைய அரிசி ஆகியன கைப்பற்றப்பட்டன.

மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில், வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. ஒரு வர்த்தகருக்கு நான்கு குற்றங்களுக்கு 8 ஆயிரம்ரூபாவும், ஏனைய இரு வர்த்தகங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## உணவுகள் கொள்வனவின்போது அவதானம் செலுத்த வேண்டும்

### சுகாதாரப் பகுதி அறிவுறுத்தல்

சாவகச்சேரி, ஓக . 1

வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் சீனா நாட்டு இனிப்பு வகைகளைக் கொள்வனவு செய்யும் போது சுட்டுத்துண்டில் உள்ள அறிவுறுத்தல்களை வாசித்து கொள்வனவு செய்யுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் கடந்த புதன்கிழமை திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

இதன்போது வர்த்தக நிலையங்களில் திகதி காலாவதியான மென்பான வகைகள், அச்சிட்ட தாள்களில் வெதுப்பக பொருள்களை வைத்திருந்தமை மற்றும் சுட்டுத்துண்டில் போதிய விவரங்களின்றி காணப்பட்ட சீனநாட்டுத் தயாரிப்பான இனிப்பு வகைகள் போன்றவற்றை கைப்பற்றினர்.

பொது மக்கள் பாவனைக்கு உரிய உணவுப் பொருள்களில் போதிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். சுட்டுத்துண்டில் போதிய விவரங்கள் காணப்படாத இனிப்பு வகைகளைக் கொள்வனவு செய்ய வேண்டாமெனவும் அறிவித்துள்ளனர். (ஐ -9)

கடந்த இரு வாரங்களில்

## தென்மராட்சியில் 9 பேருக்கு டெங்கு

சாவகச்சேரி, ஓக . 1



தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த இரு வாரங்களில் ஒன்பது பேர் டெங்கால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையை அடுத்து டெங்கால் அதிகளவானோர் பீடிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த இரு வாரங்களில் கொடிகாமம் ,சாவகச்சேரி நகரம், மந்துவில்,நாவற்குழி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தலா இரண்டு பேர் வீதமும், வரணியில் ஒருவருமாக ஒன்பது பேர் டெங்கால் பீடிக்கப்பட்டனர்.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் மக்கள் அவதானத்துடனும் விழிப்புடனும் செயற்பட்டு டெங்கு நோயைத் தடுக்க ஒத்துழைக்குமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-9)

## குளவி கொட்டி முதியவர் பாதிப்பு

சாவகச்சேரி, ஓக.1

குளவிக்கொட்டுக்கு இலக்காகி 70 வயதான முதியவர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் மட்டுவில் வடக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வீதியில் நடந்து சென்றவேளை மரத்திலிருந்து வந்த கருங்குளவிகள் முதியவர் மீது கொட்டின என தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## வவு. சரஸ்வதி வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு

வவுனியா,ஜூலை 31

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக வேலைத்திட்டத்தின் கீழ் இந்த ஆய்வு கூடம் திறக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஜெ.மனோகௌரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர்பி.எஸ்.எம். சாள்ஸ் கலந்துகொண்டு ஆய்வு கூடத்தைத் திறந்தார்.



நிகழ்வில் மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன், கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஆளுநர் "விஞ்ஞானம் எங்களுக்குத் தேவையாக உள்ளது. எங்குசென்றாலும் விஞ்ஞானம் படித்த மாணவர்கள், பட்டதாரிகள், உயர் கல்வி தகைமையுடையோருக்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன, க.பொ.த.உயர்தர தரத்தில் கூட விஞ்ஞானம் படித்தவர்கள் தேவை என அரசு கேட்கின்றது. எனவே விஞ்ஞான கல்வியையும், கணித கல்வியையும் ஊக்குவிக்கின்ற தேவை உள்ளது. " என்றார். (ஐ-110)

# நாடாளுமன்றுக்கு செல்லும் பெண்களிடம் கோரிக்கைகள்

மட்டக்களப்பு,ஓக.1
நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பெண்களுக்கு, பெண்களின் உரிமைகள், தேவைகளை மையப்படுத்திய சில கோரிக்கைகள், கிழக்கு மாகாண பெண்கள் வலையமைப்பின் அனர்த்த முகாமைத்துவப் பெண்கள் கூட்டமைப்பினால் விடுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ள பெண் வேட்பாளர்களிடம் அது தொடர்பான விஞ்ஞாபனம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கிராமப்புற மக்களில் 61 சத வீதமானவர்கள் பொருளாதார நிலையில் கடனாளிகளாகவே உள்ளனர்.

மொத்த தொழில்துறையில் 58 வீதமான மக்கள் முறைசாரா துறையில் உள்ளனர்.

இலங்கையில், கொரோனாவால் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாக 30 சத வீதமான குடும்பங்கள் நாளாந்தம் தாங்கள் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்துள்ளனர். பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதில் குறிப்பாக வீட்டு வன்முறைகளே அதிகளவில் இடம்பெறுகின்றன.

இவை பெண்களுக்கெதிரான மனித உரிமை மீறல்களாகும். பெண்கள் சுதந்திரமாக, சுயாதீனமாக, சம உரிமையுள்ள பிரஜைகளாக வாழ்வதற்குரிய வாய்ப்புகளை மட்டுப்படுத்துகின்றன.

பெண்களின் உடல், உள, மறு உற்பத்தி நலன்கள் மீதான தாக்கங்களை ஏற்படுத்துவது ஊடாக முழுச் சமூகத்தையும் பாதிக்கின்றது. சமூகத்தில் அவர்களின் பங்குபற்றலை மட்டுப்படுத்துகிறது.

இந்தப் பின்னணியிலே நாம் அரசியல், அரசமைப்பு, சட்டம், சட்ட நடைமுறை உட்பட குடும்பம், கல்வி, சுகாதாரம், சொத்துடைமை கொள்ளல், வாழ்வாதாரங்கள், வேலைவாய்ப்பு, பணியிடங்கள் ஆகிய அனைத்துத் தளங்களிலும் பெண்கள் உரிமைகளை அனுபவிப்பதையும், அவர்களின் சமத்துவத்தையும் உறுதி செய்தல் வேண்டும் என்பதை வலியுத்துகின்றோம், என்றுள்ளது. (க-46)

# சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்பேன்

## சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 1
**விகாரைகள் மற்றும் மதத்தலங்களின் அபிவிருத்திக்காக சேவை செய்ததற்காகத் தன்னை சிறையில் அடைத்தாலும் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தாம் தயாரென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இதேவேளை, தற்போதைய அரசாங்கத்திடம் எந்தவித வேலைத்திட்டங்களும் இல்லாததனால், தொலைபேசிச் சின்னத்தின் வெற்றியைக் கண்டு அஞ்சி, ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக போலிப் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும், இவர்களுக்கு மக்கள் தக்கபாடத்தை கற்பிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
இன்று தொலைபேசியைச் சுற்றி பெருந்தொகையான மக்கள் ஒன்றுக்கூடியுள்ளனர். எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது. எமது ஆட்சியில் கிராம இராச்சியம், நகர ராச்சியம் செயற்றிட்டத்தின் ஊடாக நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் அபிவிருத்தியடையச் செய்வோம்.

கடந்தகால ஆட்சியில் நான் கலாசார அமைச்சராக செயற்பட்டபோது, விகாரைகள் மற்றும் மதஸ்தலங்களின் வளர்ச்சிக்கான பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருந்தேன்.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் போது, பாதிப்படைந்திருந்த தேவாலயங்களின் சீரமைப்புக்கு நிதி வழங்கியிருந்தேன். தற்போதைய அரசாங்கம் இதன்போது நிதி மோசடி இடம்பெற்றதாக போலி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. நான் அமைச்சரவை கூட்டங்களின் போது எனக்கு வழங்கப்பட்ட தேநீரைக் கூட அருந்தாத மனிதன். இவ்வாறான போலிப் பரப்புரைகளை மேற்கொள்ளும் மோசடிகாரர்களுக்கு மக்கள் தகுந்த பதிலை வழங்குவார்கள் என்று எண்ணுகின்றேன். - என்றார். (ஐ)

# வடக்கைச் சீரழிக்கவே விக்னேஸ்வரன் முயற்சி

## இடம்கொடாதீர்கள் என்கிறார் தவிசாளர்

வடக்கில் எத்தனை உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன என்பது கூடத் தெரியாமலும், உள்ளூராட்சியின் அபிவிருத்தி நிர்வாகம் குறித்து கடந்த 5 வருடங்களில் எதுவுமே விளங்காமலும் இருந்தவரான முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்றம் சென்று மீண்டும் வடக்கைச் சீரழிக்க, பாழ்படுத்த முயற்சிக்கின்றார் என்று சாடியுள்ளார் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி. கேதீஸ்வரதாஸ்.

தமிழ் மக்கள் விழிப்பாக இருந்து சேவையறிந்து இரவு பகல் பாராது உண்மையாகக் கடமையாற்றும் நேர்மையான செயல் வீரர்களுக்கு வாக்களியுங்கள் என அவர் கோரியுள்ளார்.

ஆலோசனைகளைக் கேளாது தன்னிச்சையாகச் செயற்படும் போக்குடைய விக்கினேஸ்வரன் நாடாளுமன்றம் சென்றால் எப்படியிருக்கும் என்பதனை ஒருகணம் சிந்தி த்துப்பாருங்கள்.

எனவே, விக்னேஸ்வரன் தலைமையிலான மீன் கட்சி இப்படித்தான் இருக்கப்போகின்றது. தனித்துவமான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கே வாலைக்காட்டி, கயிறுவிட்ட விக்கினேஸ்வரனை ஒட்டு மொத்தத் தமிழினமே வெறுத்து ஒதுக்க வேண்டும். மீன் கட்சி வேட்பாளர்கள் வழங்கும் விளக்கமில்லாத விவரணங்களை மக்கள் வாசித்து நேரத்தை வீணடிக்காதீர்கள். இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டோம். அனைத்து அன்புமிகுந்த தமிழ் மக்களும் ஒன்றிணைந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து பெருவெற்றி பெறவையுங்கள் என அவர் தெரிவித்துள்ளார். (த-50)

# 2005 ஆம் ஆண்டை நினைவுபடுத்தும் நிகழ்காலம்

## கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள் என்கின்றனர் மன்னார் புத்திஜீவிகள்

தற்போதைய சூழ்நிலை 2005ஆம் ஆண்டு காலப்பகுதியைத்தான் நினைவூட்டுகின்றது. எனவே ஜனநாயகம் பிறந்துவிட்டதாக எவரும் நினைக்க வேண்டாம். போர்க் காலப்பகுதியில் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து பல இன்னல்களை அனுபவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யவேண்டும் என்று மன்னாரிலுள்ள புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர்.


தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட துறை சார்ந்த வல்லுநர்களையும் இந்த முறை நாடாளுமன்றுக்கு அனுப்புவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சில தவறுகள் உள்ளன. முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்கள் கட்சிரீதியாகப் பயணிக்காமல் எதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளால் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை அடையும் விதத்தில் பயணிக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக ஆசனங்கள் கிடைக்கின்றமைதான் தமிழர்களுக்கான பலம் அவர்கள் என்றும் தெரிவித்துள்ளனர். (த-213)

# தேர்தல் பரப்புரை பற்றி கலந்துரையாடல்

வவுனியா,ஓக.1
'வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் போலியான செய்திகள் அற்ற தேர்தல் பரப்புரை' எனும் தொனிப்பொருளில் சிவில் சமூக அரங்கம் வவுனியா நகரபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.



எம்.பி.சி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜெகான் பெரேரா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சட்டத்தரணிகள் , மதத் தலைவர்கள் , பொதுமக்கள் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் தேர்தலின் போதான பரப்புரைகள் , மக்கள் எவ்வாறு விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும் , போலித் தேர்தல் வாக்குறுதிகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. (க-18)



# இன்னுமொரு சமூகத்தை அழிக்க வேண்டுமா?

## கருணாவை நம்பாதீர்கள் என்கிறார் கலையரசன்

மட்டக்களப்பு, ஓக. 1

**ஏற்கனவே ஒரு சமுதாயத்தை அழித்துவிட்டோம். அப்படி இருக்கும்போது இன்னுமொரு சமூகத்தையும் அழிக்க வேண்டுமா? மக்கள்தான் தங்களின் பிள்ளைகளைச் சரியான பாதையில் வழிநடத்த வேண்டும். சரியான முறையில் சிந்திக்க வேண்டும்.**



இவ்வாறு திகாமடுல்ல தேர்தல் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் சூடு பிடித்துள்ளது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பிலே 74 வீதமான தமிழர்கள் வாழ்கின்றார்கள். அம்பாறை மாவட்டத்திலே முன்னர் 21 வீதமும் பின்னர் 20 வீதமுமாக இருந்து தற்போது 18 வீதமாக இருக்கின்றோம். கடந்த கால போர் சூழல் தான் எம்மை விகிதாசாரத்தில் குறைத்துள்ளது.

2015 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலே நடைபெற்ற தேர்தல் முடிவுகளை அவதானித்தால் 74 வீதம் தமிழர்கள் வாழுகின்ற அந்த மாவட்டத்திலே 3 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அதே வேளை 26 வீதமான முஸ்லிம்கள் வாழுகின்ற சமூகத்திலும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றிருந்தனர்.

அவ்வாறான நிலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் கருணா தான். முன்னாள் கிழக்கு முதலமைச்சர் மஹிந்த தரப்பிலே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் ஹிஸ்புல்லா நாடாளுமன்ற உறுப்பினராகச் சென்றார்.

அவ்வாறானதொரு நிலைமையைத்தான் இங்கே மீண்டும் உருவாக்குவதற்கு கருணா துடித்துக் கொண்டிருக்கின்றார். அதனால் தான் இளைஞர்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவும் செய்யவில்லை என்ற பொய்ப் பரப்புரை மேற்கொண்டு வருகின்றார். எங்களுடைய இருப்பு இந்த மாவட்டத்திலே கேள்விக்குள்ளாகியுள்ளது.

நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலான காணிகளை மீட்டுக்கொடுக்கவில்லையா? பாடசாலைகளை மீட்டுக் கொடுக்கவில்லையா? எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். இவ்வாறு அரச படையின் ஆதிக்கத்துக்குள் இருந்த பல காணிகள் மீட்டுக்கொடுக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்ட வேட்பாளரை சுட்டு வீழ்த்தியவர் தான் கருணா.

தமிழ்த் தேசியம் பற்றி பேச முடியாத காலகட்டம் தான் அப்போது இருந்தது. அப்போது என்னை விலை கொடுத்து வாக்குவதற்கு கருணாவிடம் பணம் இருக்கவில்லை. ஆனாலும் அவருடைய நயவஞ்சகத் தனத்துக்கு நாம் துணை போகிறவர்களும் இல்லை - என்றார். (த)




## மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களே தேசிய பட்டியலில் தெரிவாகின்றனர்

*தெரிவிக்கிறது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன*

ஹற்றன், ஓக. 1



கடந்த அரசின் காலத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்குச் சென்று அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் சீ.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகள் என்பவர்கள், நாட்டின் அபிவிருத்திக்காக நாடாளுமன்றுக்குச் செல்லும் மக்களின் பிரதிநிதிகளே. இரண்டு கோடியே 20 லட்சம் மக்கள் வாழும் நாட்டில் ஒரு கோடியே 57 லட்சம் மக்கள் தமது வாக்குகளை அளிக்கின்றனர். 225 பேர் நாடாளுமன்றுக்குச் செல்ல முடியும். 197 பேர் நேரடியாக மக்களால் தெரிவுசெய்யப்படுகின்ற னர்.

ஏனையோர் தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் கடந்த அரசின் காலத்தில் தேசிய பட்டியலில் சென்று அமைச்சுப்பதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

நாட்டில் எதிர்காலத்துக்காக மக்கள் சரியான முறையில் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

கொரோனா வைரஸ் எமது நாட்டிலும் உலகம் முழுவதிலும் பரவும் என நாங்கள் எப்போதும் எதிர்பார்க்கவில்லை.

தேர்தல் நடத்த தயாரான போது கொரோனா வைரஸ் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. கொரோனா வைரஸ் காரணமாக பாடசாலைகளை மூட நேரிட்டதுடன் தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்த நேரிட்டது. இதனை நாங்கள் தெரிவுசெய்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சரியாக முகாமைத்துவம் செய்தார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. அந்தக் கட்சி ஆட்சியமைப்பதோ எதிர்க்கட்சியாக வருவதோ அல்ல. சிறிகொத்தவைப் பாதுகாக்க வேண்டும் என்பதே அந்தக் கட்சியினரின் நோக்கம்.

நாங்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அரசமைப்போம். எதிர்க்கட்சி யார் என்பதே பிரச்சினை.

மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து எவ்.சீ.ஐ.டி என்ற ஒன்றை ஏற்படுத்தி அரசியல் பழிவாங்கலுக்காக சிறையில் அடைத்தது. அரசியல் பழிவாங்கலை மாத்திரமே செய்தனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிர்க்கட்சியாகக்கூட வர முடியாது என்பது வருத்தமான விடயம். ஒருவர் தொலைபேசியை எடுத்துக்கொண்டு சென்றார். அதற்கு அழைப்பை எடுத்தால் அது துண்டிக்கப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர் எனவும் சீ.பி. ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (த)

## குமரன் பத்மநாதனை அரசு பரப்புரைக்குப் பயன்படுத்துகிறது

*சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்*

கொழும்பு, ஓக. 1



விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் குமரன் பத்மநாதனை அரசு தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்துவதாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

குமரன் பத்தமநாதன், கிளிநொச்சியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக குமரன் பத்தமநாதன் இந்தியாவில் தேடப்படும் நபராக இருக்கின்றார். கே.பியும், கருணாவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குச் சார்பாக பணியாற்றுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அரசுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் சில ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (த)

## நிறைவுப் பரப்புரை

யாழ்ப்பாணம், ஓக. 1

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு 2 இல் பட்டம் சின்னத்தில் போட்டியிடும் மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் நிறைவுப் பரப்புரைக் கூட்டம், புத்தூர் மேற்கு, கலைமதி விளையாட்டு மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும்.

மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவரும், வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினருமான கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் கூட்டம் இடம்பெறும்.

இதில் சுயேச்சைக் குழு 2 இன் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியுமான பழனி குகனேஸ்வரன், மூத்த பொதுவுடமைவாதியான தோழர் சி.கா.செந்திவேல், விசேட உரைகளை நிகழ்த்துவர். ஏனைய வேட்பாளர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க)

# சஜித் பிரேமதாசவை கைதுசெய்க!

## கொந்தளிக்கிறது இராவண பலய

கொழும்பு, ஓக. 1

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை உடனடியாகத் கைதுசெய்ய வேண்டும் என்று இராவண பலய அமைப்பின் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசில் அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாசவின் அனுமதியின் பேரில் அநுராதபுரம் இபலோகம பிரதேசத்தில் அமைந்துள்ள தொல்லியல் முக்கியத்துவமான கட்டடங்கள் அழிக்கப்பட்டன என சத்தாதிஸ்ஸ தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

துட்டகைமுனு மன்னனின் விஜிதபுர போர் நடைபெற்றதாக கூறப்படும் விஜிதபுர கோட்டையின் எச்சங்களே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன. கிராமத்தை நிர்மாணிக்க அனுமதி வழங்கிய அரச அதிகாரிகள் இதுவரை விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் இருக்கின்றமை ஆச்சரியமானது. என்றார். (த)

# ஐ.தே.க.வும் மக்கள் சக்தியும் பிளவு என்பது ஏமாற்று நடிப்பே!

## தெரிவிக்கின்றார் உதய கம்மன்பில



**கொழும்பு, ஓக. 1**

**ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என பிளவுப்பட்டுள்ளமை ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரின் ஏமாற்றும் நடிப்புமே என்று பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றனர் என குற்றம் சுமத்தி ஐக்கிய தேசியக் கட்சி பலரை கட்சியில் இருந்து நீக்கியுள்ளது. கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களின் பட்டியலை நாங்கள் நன்றாக பரீட்சித்துப் பார்த்தோம். எனினும், அந்தப் பட்டியலில் சஜித் பிரேமதாசவின் பெயரைக் காணவில்லை. இது என்ன திருட்டுத்தனம்? உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி, பிளவுப் பட்டுள்ளதா? இல்லை என்றால், ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேம தாசவும் பொய்யான ஏமாற்று நடிப்பில் ஈடுபடுகின்றனரா?.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி காரணமாக ரணில் விக்கிரமசிங்க மீது அதிருப்தியடைந்த ஐக்கிய தேசியக் கட்சியினரின் வாக்குகளை சஜித் பிரேமதாச பக்கம் இழுக்கவும், சஜித் பிரேமதாசவின் விகட நாடகம் காரணமாக அதிருப்தியடைந்த கட்சியினரின் வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொள்ளும் மறைமுக நோக்கிலும் அவர்கள் இந்தப் பிளவை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவே தற்போது புலப்படு கிறது.

உண்மையில் இவர்கள் பிளவுப் படவில்லை. தேர்தலுக்கு பின்னர் இரண்டு தரப்பினரும் இணைந்து பழைய போக்கில் கட்சியை முன்னெடுத்துச் செல்வார்கள். இதன் காரணமாகவே கட்சியில் இருந்து நீக்கப்படுவது தொடர்பில் பெரிதாக குழப்பமடைகின்றனர்.

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி நான் ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து விலகி பிவித்துரு ஹெல உறுமய கட்சியை ஆரம்பித்தேன். ஜாதிக ஹெல உறுமயவின் எனது அங்கத்துவத்துக்கு என்ன நடக்கப் போகிறது என்பது தொடர்பாக நான் பதற்றப்படவில்லை. நாங்கள் முற்றாக விலகி வந்து விட்டோம் என்பதே இதற்குக் காரணம்.

ஆனால், இவர்கள் பெரிதாக பதற்றமடைகின்றனர். இவர்களுக்கு இடையில் பிளவு ஏற்படவில்லை என்பதே உண்மையான காரணம். தேர்தலுக்கு பின்னர் இணையும் மறைமுக வேலைத்திட்டத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (து)

# ஆயுதமின்றி மூன்று புலிகள் நாடாளுமன்றம் செல்வர்

## கூறுகின்றார் மட்டு. வேட்பாளர்

மட்டக்களப்பு, ஓக. 1

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழர்களின் தலைமைத்துவத்தை பிற மாகாணத்தவர்களுக்குத்தான் வழங்கி வந்திருந்தோம். இந்த வருடம் தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 3 புலிகள் ஆயுதம் இல்லாமல் இலங்கை நாடாளுமன்றுக்குச் செல்லவுள்ளனர் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்க. ஜெயவாணிதாசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எவரும் எம்மிடம் வாலாட்ட முடியாது. இலங்கைச் சட்டத்துக்கு உட்பட்டுத்தான் நாங்கள் இந்த விடயங்க ளைச் செய்து கொண்டிருக்கின்றோம். எமது மக்களை அடிமைகளாக்க எவருக்கும் அருகதையில்லை.

ஓர் இனத்துக்காக தலைமை தாங்கக் கூடியவர், அந்த இனத்துக்காக தன்னுயிரையும் தியாகம் செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.

2020 ஆம் ஆண்டில் சிறைச்சாலைக்குள்ளிருந்து எமது தலைவர் வெளியே வரப்போகின்றார்- என்றார். (து)

# தமிழர்களின் பின்னடைவுக்கு வாக்கு விற்பனையே காரணம்

## கூறுகின்றார் ஈ.பி.டி.பி.யின் வவுனியா செயலர்

வவுனியா, ஓக. 1

தேர்தல் காலத்தில் கோழிக்குஞ்சுக்கும், தையல் மிசினுக்கும் எமது வாக்குகளை விற்கின்றமையே தமிழர்களின் பின்னடைவுக்குக் காரணம் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளர் கு.திலீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித்பிரேமதாச போல ஐந்தரை இலட்சம் ரூபா வீட்டுத்திட்டம், 50 ஆயிரம் பிடிகாசு என்று கூறி மக்களை நாம் கடனாளி ஆக்கவில்லை.

இந்த பகுதியில் பலமுறை அமைச்சராக இருந்த ரிஷாட் பதியுதீன் 10 தமிழ் குடியேற்றங்களையாவது செய்தாரா? இல்லையே. மாறாக காப்பெற் வீதிகளைப் போட்டு சாளம்பைக் குளத்தையும், ஆண்டியா புளியங்குளத்தை யும் உருவாக்கினார். எமது கிராமங்களில் வீதிகள் எப்படியிருக்கின்றன?. சாளம்பைக் குளத்தில் விளையாட்டு மைதானத்துக்குச் செல்லும் பாதைகூட காப்பெற்றாகத்தான் போடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கோழிக் குஞ்சுகளுக்கும் தையல் மிசின்களுக்கும் எமது வாக்கு களை விற்கின்ற மையே இதற்குக் காரணம்.

எமது மக்கள் எழுந்து நிற்கவே சக்தியில்லாத சூழலில் இருக்கும் நிலையில் உங்களை மீண்டும் பாழாங் கிணற்றுக்குள் தள்ளுவது சரியானாதா?. எனவே நீங்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்- என்றார். (து-110)

# தொழிலாளர்களை திருப்பி அழைத்துவர அரசு அக்கறை காட்ட வேண்டும்

கொழும்பு. ஓக.1

“வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் பல தசாப்தகாலமாக நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வந்திருக்கிறார்கள். தற்போது நாடு அவர்களுக்கு நன்றியுடைய விதமாக செயற்பட வேண்டிய தருணம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் நாட்டுக்குத் திருப்பியழைத்து வரப்படுவதற்கும், அவர்களுக்கான மறுவாழ்வைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் இரக்கமான அணுகுமுறையொன்றைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்” என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து நாட்டில் பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிநிலை மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களின் நிலை தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டிருக்கும் பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:




இலங்கையின் பொருளாதாரம் எதிர்வரும் காலங்களில் இருண்டதொரு நிலையை அனுபவிக்க வேண்டியேற்படும் என்று சர்வதேச ரீதியான பொருளாதாரக் கட்டமைப்புக்களின் கணிப்புக்கள் கூறுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் விசேட அவதானம் செலுத்த வேண்டும்.

பல தசாப்தகாலமாக வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வந்திருக்கிறார்கள். தற்போது கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அவர்கள் தமது சொந்த நாட்டுக்கு திரும்பிவர எதிர் பார்க்கின்றார்கள் - எனப் பதிவிட்டுள்ளார். (ஐ)

பாராளுமன்றத் தேர்தல் 2020

வலிகாமம் கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சமூக சேவைகள் உத்தியோகத்தராக ஏழு வருடங்கள் (2005 முதல் 2012 வரை) நிறைந்த சேவைகள் ஆற்றியவர். குறிப்பாக இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் சுய தொழில் ஓய்வூதியத் திட்டத்தில் 6500 பேரை இணைத்து பெரும்பணி புரிந்தவர்.



வேதநாயகம் தபேந்திரன்

(B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A (Jaf)

9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கைத் தமிழ் அரசு கட்சி X 9

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே!
உங்கள் ஏகோபித்த ஆதரவை வழங்கி
வெற்றிபெறச் செய்யுங்கள்.

வலிகாமம் கிழக்கு - கோப்பாய்
நலன்விரும்பிகள்

# வன்னியில் சிங்களவர் ஒருவரை எம்.பி. ஆக்க பசில் கங்கணம்

## சிங்களவர்களை குடியேற்றும் திட்டமே இது என்கிறார் பிரபா கணேசன்

முல்லைத்தீவு, ஓக. 1

வன்னித் தேர்தல் தொகுதியில் தேர்தலுக்காக ரிஷாட் வருகின்றார். மஸ்தான் வருகின்றார். தற்போது சிங்களவர்களும் வருகின்றார்கள். ஒரு சிங்களவரை வன்னியில் கொண்டுவந்தே ஆகவேண்டும் என்பதில் பஸில் ராஜபக்ச பிடிவாதமாக இருக்கின்றார் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாமூலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகாவலி ‘எல்’ வலய அபிவிருத்தி முல்லைத்தீவுக்கு வரும் போது முழுக்க சிங்களக் குடியேற்றங்களை நிறுவவேண்டும் என்று முயற்சிக்கின்றார்கள். சிங்களக்குடியேற்றங்களுக்கு ஒருபோதும் என்னால் இடம்கொடுக்கமுடியாது. 86 வீதம் தமிழர்கள் வாழும் இந்த இடத்தில் வேறு மாவட்டத்திலிருந்து சிங்களவர்கள் வந்து குடியேற முடியாது. இந்தச் சிங்களக் குடியேற்றத்துக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் தேவைப்படுகின்றார். பொதுத் தேர்தலில் அதற்கு இடம்கொடுக்க முடியாது. என்றார். (து-19)



# மின்சார பாவனையாளருக்கு ரூபா 300 கோடி சலுகை

கொழும்பு, ஓக.1
இலங்கை முழுவதுமுள்ள அனைத்து மின்சார பாவனையாளர்களுக்கும் ரூபா 300 கோடி சலுகை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள் ளது.
இதற்கமைய, மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் நுகர்வுக்குட்படுத்திய மின்சார பாவனைக்கே இவ்வாறு சலுகை வழங்கப்படவுள்ளது.
இதன்படி, 67 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரொனா வைரஸ் பரம்பல் தீவிரம் அடைந்த நிலையில், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நாடு முழுமையாக முடக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## கட்டுநாயக்க விமான நிலையத் திறப்பு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.1
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டுள்ள கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் திறக்கும் நடவடிக்கை காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் விமான நிலையம் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் தீவிரமடைந்துள்ளதால், விமான நிலையத்தைத் திறக்கும் நடவடிக்கை காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.
இதேவேளை, விமான நிலையத்தை விரைவில் திறப்பதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரி3)

## ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில்
# சுகாதார வழிகாட்டல்களை பேணுமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக.1
கொவிட்19 வைரஸின் தாக்கம் மற்றும் நாட்டின் தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் முக்கிய, வழிகாட்டல்களைப் பேணி நடந்துகொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கோரியுள்ளது.
இது தொடர்பில் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ள உலமா சபை உதவிப் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம்.எம்.எம். முர்ஷித் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
துல்ஹிஜ்ஜஹ் மாத முதல் பத்து நாள்களும் மிகச் சிறப்புப் பொருந்திய நாள்கள் என்பதால் எஞ்சியுள்ள நாள்களில் நல்லமல் செய்ய அனைவரும் ஆர்வம் காட்டுவதுடன், அதன் ஒன்பதாவது நாளில் அரபாவுடைய நோன்பை நோற்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.
உலகளாவிய ரீதியில் கொவிட்19 வைரஸின் தாக்கம் தொடர்ந்தும் இருப்பதனால், சுகாதார அமைச்சினால் வழங்கப்படுகின்ற அனைத்து வழிகாட்டல்களையும் உரியமுறையில் பேணி நடந்துகொள்வதுடன், பெருநாள் தொழுகையின்போது சமூக இடைவெளியைப் பேணுதல், முகக் கவசம் அணிதல், வீட்டிலிருந்தே வுழூ செய்துகொண்டு வருதல் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ரி3)

## தேசிய பாடசாலைகளை அதிகரிக்க பரிந்துரை

கொழும்பு, ஓக. 1
கல்வி தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்று, அண்மையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது.
அச் செயலணி, தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.
தற்போது நாட்டில் 345 தேசிய பாடசாலைகள் உள்ளன என செயலணியின் உறுப்பினரான கலாநிதி சுனில் ஜயரத்ன நவரத்ன தெரிவித்துள்ளார். எனினும், சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு தேசிய பாடசாலை கூட இல்லாதுள்ள நிலையே காணப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ரி2)

## நல்லூர் ஆலய சூழலில் கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 1
யாழ்.மாநகராட்சி மன்றம் நல்லூர் ஆலய சூழலில் கட்டாக்காலிகளாக நடமாடும் நாய்களை பிடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கடந்த புதன்கிழமை மாலை வேளையில் இந்த சுற்றாடலில் நடமாடிய ஐந்து கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன. பிடிக்கப்பட்ட நாய்கள் மிருக வைத்திய திணைக்களத்தின் உதவியுடன் விசர்நாய் தடுப்பூசி மற்றும் கருத்தடை செய்யப்பட்டு நாய்கள் காப்பகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆலய சுற்றாடலில் உள்ள மக்கள் தமது வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ரி1-17)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி நாளை ஞாயிறு காலை 8.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை யாழ் .மாவட்டத்தில் மாலுசந்தி, அல்வாய், நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, காந்தியூர், மந்திகை, மந்திகை ஆதார வைத்தியசாலை, மரின் வெல்த் ஐஸ் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ரெலிகொம் கரவெட்டி, மந்திகை, பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதி வேம்படி சந்தி வரை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் ரயில் கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீர மாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், திருநெல்வேலி புறப்பார்ட் டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.



# இன்றைய நாள்

**மேடம்:** உத்தியோகத்தஸ்தர்களுக்கு பொறுப்பு அதிகரிப்பதால் வருமானம் கூடும். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரத்தில் அனுபவமிக்க அணுகுமுறையால் நல்ல லாபம் கிடைக்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் பொது நல விஷயத்தில் ஈடுபட்டுப் பாராட்டைப் பெறுவீர்கள். தேவையற்ற அலைச்சல் கூடும். யாரையும் விமர்சித்து பேசாமல் இருப்பது நல்லது.

**மிதுனம்:** தடைபட்ட சுபநிகழ்ச்சிகள் இனிதேநடைபெறும். உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைத்து பதவி உயர்வு பெறுவர். வியாபாரத்தில் கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும்.

**கடகம்:** வியாபாரிகளுக்குப் புதிய ஒப்பந்தங்கள் சாதகமாக அமையும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிக்கான முயற்சிகள் நடப்பதால் சந்தோஷமான சூழ்நிலை நிலவும். பெண்கள் அக்கம் பக்கத்தினரிடம் சொந்த விஷயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**சிம்மம்:** தாழ்வு மனப்பான்மை நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவால் கடன் பிரச்னைகள் முடிவுக்கு வரும். அலுவலகத்தில் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு நல்ல பெயரெடுப்பீர்கள்.

**கன்னி:** மனதை ஒருமுகப்படுத்தி செயலில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம். பொருள் வரவு ஏதேனும் ஒரு வகையில் தொடர்ந்து இருக்கும். உதவி செய்து பாராட்டைப் பெறுவீர்கள்.

**துலாம்:** குடும்பத்தினரின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். வியாபாரத்தில் செலவுகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உதவிகரமாக இருப்பர்.

**விருச்சிகம்:** அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நண்பர்கள்மூலமாக நிறைய அனுபவப் பாடங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு:** உறவினர் வழியில் தோன்றிய பிரச்னைக்குத் தீர்வு காண்பீர்கள். அலுவலகத்தில் பணிகளில் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தினருடன் விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் செயல்கள் பெருமை தேடித் தரும். வியாபாரிகள் திட்டமிட்டு செயல்பட்டால் வீண் அலைச்சலை தவிர்க்கலாம். பொதுப் பிரச்னைகளில் தலையிட வேண்டாம்.

**கும்பம்:** இழுபறியில் இருந்த செயல்களை விடாமுயற்சியினால் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். தியானம், தெய்வ வழிபாடு மனஅமைதி தரும்.

**மீனம்:** கலைத்துறையினருக்கு நல்ல பெயர் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வெற்றி உண்டு. குடும்பத்தினிடையே சிறு சிறு வாக்குவாதங்கள் ஏற்படக்கூடும்.



# ஷானி கைது!

கொழும்பு,ஓக. 1

குற்றப் புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வர்த்தகர் மொஹமட் சியாம் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள, மேல் மாகாண முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவினால் அவரது வீட்டில் ஆயுதங்கள் வைத்திருந்தமை, ஆயுதங்கள் கடத்தியமை தொடர்பான விசாரணைகளிலான ஆதாரங்களில் மாற்றம் செய்தார் என்று ஷானி அபேசேகர மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில், நேற்றுக் காலை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் நாரஹேன்பிட்டியிலுள்ள அவரது வீட்டில் வைத்து ஷானி அபேசேகர கைதுசெய்யப்பட்டார்.

அவர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இதேவேளை, சி.ஐ.டி. பணிப்பாளர் பதவியிலிருந்து தன்னை இடைநிறுத்தி, மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பிரத்தியேக உதவியாளராக இடமாற்றம் செய்தமை மற்றும் பணி இடைநீக்கம் செய்தமை தொடர்பில், ஷானி அபேசேகர உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவின் வேண்டுகோளுக்கிணங்க, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டு பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் மற்றுமொரு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், குறித்த மனுவை அவரது சட்டத்தரணி நேற்று மீளப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆட்சியில் எதிர்க்கட்சியிலிருந்த பல்வேறு பிரபலங்கள் தொடர்பான விசாரணைகள், ஷானி அபேசேகரவினால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும், ஷானி அபேசேகர, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இயங்கினார் என்று தற்போதைய அரசு குற்றஞ்சாட்டி வரும் நிலையில், அவர் திட்டமிட்டுப் பழிவாங்கப்படுகின்றார் என்று தற்போதைய எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பான முறைப்பாட்டுக்கு அமைய, சாட்சியம் அளிப்பதற்காக முன்னிலையாகுமாறு அவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்ட அழைப்பாணையை இரத்துச் செய்யுமாறு கோரி அநுரகுமார திஸாநாயக்கவும், ஷானி அபேசேகரவும் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுக்கள் பரிசீலிக்கப்படும் வரை, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவும் சாட்சியம் அளிப்பதற்கு அழைக்கப்படமாட்டார்கள் என அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்கள் கடந்த திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாக்குறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ,22)

# ஷானி அபேசேகர கைது வேட்டையின் ஆரம்பமே!

## சாடுகின்றார் மங்கள சாடல்

**கொழும்பு, ஓக.1**

**ராஜபக் ஷக்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு எதிராக அப்பழுக்கற்ற சான்றுகளுடன் விசாரணைகளை மேற்கொண்ட ஷானி அபேசேகர ஒரு புலனாய்வாளர் மாத்திரமே. அவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை விரைவில் இடம்பெறவிருக்கும் மோசமான வேட்டைக்கான முன்னோட்டமாகும்.**

இவ்வாறு முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஷானி அபேசேகர வழக்கு விசாரணையொன்றில் சாட்சியங்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். இதனைக் கண்டிக்கும் விதமாகத் தனது டுவிட்டர் பக்கத்தில் மங்கள சமரவீர கருத்துப் பதிவிட்டுள்ளார்.

பொலிஸாரின் வேலை குற்றங்களை எதிர்த்துப் போராடுவதோடு, போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வதும் நாட்டின் முக்கிய பதவிகளில் உள்ள ஏனைய குற்றவாளிகளை அடையாளம் காண்பதுமே ஆகும்.

மாறாக சட்டக்கல்லூரிக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையை இன அடிப்படையில் கணிப்பீடு செய்வதும், இன ரீதியான முரண்பாடுகளைத் தூண்டுவதுமல்ல.

உளவுச்சேவையின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு பொலிஸ்மா அதிபர் இதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த 2012 ஆம் ஆண்டில் இயல்புக்கு மாறான வகையில் சட்டக்கல்லூரிக்குத் தெரிவான முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கடந்த 2015 ஆம் ஆண்டில் புலனாய்வுப்பிரிவு அறிக்கைப்படுத்தியிருப்பதாக உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையான முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாதிபர் நிலந்த ஜயவர்தன சாட்சியம் வழங்கியிருந்தார்.

இது தொடர்பான பத்திரிகைச் செய்திகளை மேற்கோள்காட்டி சமூகவலைத்தளங்களில் கடுமையான கண்டனங்கள் வெளியிடப்பட்டு வந்த நிலையிலேயே மங்கள சமரவீர இத்தகைய பதிவை வெளியிட்டுள்ளார். (க)

# கடைகளுக்கு துண்டுப்பிரசுரங்கள் வழங்குவோருக்கு பொலிஸ் தடை

வவுனியா, ஓக. 1

வவுனியா நகர்ப்பகுதிகளில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் சுயேச்சைக் குழுக்களின் தேர்தல் பரப்புரை துண்டுப்பிரசுரங்களை வியாபார வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கும் ஆதரவாளர்கள், வேட்பாளர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தேர்தல் பரப்புரை துண்டுப்பிரசுரங்களை வர்த்தக வியாபார நிலையங்கள் வங்கிகளுக்கு விநியோகிப்பவர்களுக்கு கொரோனாத் தொற்ற இனங்காணப்பட்டால் அவர்கள் சென்ற வர்த்தக நிலையங்கள் வங்கிகள் என நகரை முழுமையாக முடக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகிறன. அதனைக் கவனத்திற்கொண்டு பொலிஸார் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து அவர்களுக்கு தற்போதைய நிலைமைகளைத் தெளிவுபடுத்தி வருகின்றனர். அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்து அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு நேற்று வவுனியா நகர்ப்பகுதியில் வியாபார வர்த்தக நிலையங்களுக்கு தேர்தல் பரப்புரை துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வந்த சிலர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# தாய்ப்பாலூட்டல் வாரம் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஓக.1

இன்று ஓகஸ்ட் 1ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் தேசிய தாய்ப்பால் ஊட்டும் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டும் முக்கியத்துவம் குறித்தும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவினரால் பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. இலங்கையில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதில் வலுவான அடித்தளம் காணப்படுவதாகவும் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். உலக நாடுகளில் இது தொடர்பில் இலங்கை முதலாவது இடத்தில் உள்ளமை ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வருடம் தாய்ப்பால் ஊட்டும் வாரக் கருப்பொருளாக "தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிப்போம் இப்புவியைப் பாதுகாக்க தோள் கொடுப்போம்" என்பது அமைந்துள்ளது. (ரி1)

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பருந்து!

## பொலிஸாரால் மீட்பு

கொழும்பு, ஓக.1

மீகொட நாவலமுல்ல பகுதியில் அமைந்துள்ள விலங்குப் பண்ணையொன்றில் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பருந்து ஒன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, அத்துருகிரிய பொலிஸார் முன்னெடுத்த சோதனையின்போதே இந்தப் பருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளை விநியோகிப்பதற்கு பாதாள உலகக் குழு தலைவராகக் கருதப்படும் "அங்கொடா லொக்கா" என்பவரால் இந்தப் பருந்து பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சோதனையின்போது அந்தப் பண்ணையில் பணியாற்றிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்றையும், வெடிமருந்துப் பொருள் களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் அங்கொட லொக்கா வின் நெருங்கிய கூட்டாளிகள் என்று தெரிவிக்கப்படுகிறது. "குசா அலி சீஹாக்" என்று அழைக்கப்படும் இந்தப் பருந்து சுமார் 15 கிலோகிராம் எடையைச் சுமக்கும் திறன் கொண்டதாக நம்பப்படுகிறது. அத்துருகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி3)









பாராளுமன்றத் தேர்தல் – 2020 – யாழ்ப்பாணம் மாவட்டம்



# தேர்தல் சட்டமீறல் தொடர்பில் 5,814 முறைப்பாடுகள்

**கொழும்பு, ஓக.1**
**தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 5 ஆயிரத்து 814 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

கடந்த ஜூன் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 29ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியவற்றில் இந்த முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இருப்பினும் மேற்படி காலப்பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ரி3)

## சட்டக்கல்லூரியில் முஸ்லிம் மாணவர்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஓக.1
இலங்கை சட்டக்கல்லூரிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும்போது, முஸ்லிம் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளது என தேசிய புலனாய்வு சேவையின் முன்னாள் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.
ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அவர் இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை இலங்கை சட்டக் கல்லூரிக்கு முஸ்லிம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படும் விகிதம் அதிகரித்து காணப்பட்டது. 2003 ஆம் ஆண்டு இலங்கை சட்டக்கல்லூரியில் ஐந்து முஸ்லிம் மாணவர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும் 2012 ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 78 ஆக அதிகரித்தது. இது 25.24 வீதம் எனவும் அவர் கூறியுள்ளார்.
இதற்கு காரணம் என்ன என ஆணைக்குழு உறுப்பினர்கள் கேட்டபோது, அது நீதியமைச்சின் பிரச்சினை எனவும், அதனை நாட்டின் பிரச்சினையாக மாற்றியுள்ளதாகவும் நிலந்த ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார். (ரி3)

## கற்பிட்டியில் பீடி இலைகள் மீட்பு

சிலாபம், ஓக.1
கற்பிட்டி பல்லிவாசதுரை பிரதே சத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 இலட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 965 கிலோ கிராம் பீடி இலைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## தவ்ஹித் ஜமாத் அமைப்புக்கு பிரதியமைச்சர்கள் உதவினர்

*பிரதிப் பொலிஸ் மா அதிபர் சாட்சியம்*

கொழும்பு, ஓக.1
சஹ்ரான் ஹசீம் தலைமையிலான தேசிய தவ்ஹித் ஜமாத் அமைப்புக்கு முன்னாள் பிரதியமைச்சர்களான அமீர் அலி மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோரின் உதவி கிடைத்திருந்தது என்று அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.
ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி சாய்ந்தமருது அலியார் சந்தியில் தேசிய தவ்ஹித் ஜமாத் அமைப்புக்கும் அல் ஜாமத் அமைப்புக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை அடுத்து தலைமறை



வான சஹ்ரான் ஹாசீம் தலைமறைவாக இருந்தவாறு அமைப்புக்கு தலைமைத்துவத்தை வழங்கி வந்துள்ளார் என்பது ஆணைக்குழுவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
இதேவேளை சஹ்ரான் ஹாசீமின் ஆதரவாளர்களான ஆமி மொய்தீன், சிப்லி பாருக் என்போர் அரசியல்வாதிகளின் பாதுகாப்பாளராக கடமையாற்றினார்களா என ஜனாதிபதி ஆணைக்குழு, நிலந்த ஜயவர்தனவிடம் வினவியபோது அதற்கு அவர் ஆம் எனவும் பதிலளித்துள்ளார். (ரி1)

## வெளிநாட்டு பணியாளர்களுக்கு லெபனானில் புதிய சட்டங்கள்

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் லெபனான் நாட்டிற்கு வரும் இலங்கை உட்பட வெளிநாட்டு பணியாளர்களுக்காக புதிய சட்டத்திட்டங்கள் வகுக்கப்பட்டள்ளன. அதற்கமைய 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதியின் பின்னர் லெபனானுக்குச் செல்லும் பயணிகளிடம் பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
இப் பணியாளர்கள் லெபனான் அதிகாரிகளினால் பெயரிடப்படும் ஹோட்டல்களில் தங்குவது அவசியமாகும். அதற்கான கட்டணத்தை பணியாளர்கள் செலுத்த வேண்டும் என அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. அதற்கமைய பி.சி.ஆர் பரிசோதனைக்காகவும், ஹோட்டலில் 24 மணித்தியாலங்கள் தங்குவதற்கும் செலுத்த வேண்டிய பணத்தை பணியாளர்கள் வைத்திருக்க வேண்டும் என லெபனான் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த நபருக்கு கொரோனா தொற்றியுள்ளமை உறுதியாகினால் அதற்காக வழங்கப்படும் சிகிச் சைக்கான கட்டணத்தையும் பணியாளர்கள் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

அம்பலங்கொட ரயில் நிலையத்தின் அருகே ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்றைய தினம் கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயில் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.
பலபிட்டிய ஊரவத்த பிரதேசத்ச்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ரி3)

## மாடறுக்கும் மடுவத்துக்கு தவிசாளர் விஜயம்

மட்டக்களப்பு, ஓக.1
கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ள மாடறுக்கும் மடுவத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை தவிசாளர் யூ.எல்.அஹமட் தலைமையிலான குழுவினர் நேரடி விஜயமொன்றை மேற்கொண்டனர்.
ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அதிகளவான மாடுகள் அறுக்கப்படுவதைக் கருத்தில் கொண்டும், பெருநாள் அல்லாத காலங்களிலும் மடுவத்தின் சுகாதார நடைமுறைகள் தொடர்ந்து பேணப்படுவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கிலும் இந்த விஜயம் இந்த விஜயம் இடம்பெற்றது.
பொது மக்கள் உணவுத் தேவைக்காக இறைச்சியினைக் கொள்வனவு செய்கின்றபோது நாட்டின் சட்ட திட்டங்களை மதித்து, உரிய முறையில் அறுக்கப்பட்ட சுத்தமான இறைச்சி மக்களைச் சென்றடைவது, மக்களை நோய்களிலிருந்து பாதுகாப்பது மடுவத்தில் நிலவும் குறைபாடுகளை எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பவை இவ் விஜயத்தின் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2-150)

# சமூகப் பாதுகாப்புடன் பாடசாலைகள் ஆரம்பம்

வவுனியா, ஓக. 1
கொரோனாக் காலத்தில் பாடசாலைகள் பின்பற்ற வேண்டிய சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் எதிர்வரும் 10 ஆம் திகதி பாடசாலை ஆரம்பமாகும் என்று வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற பெற்றோர்களுடனான கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சமூக இடைவெளி பேணுதல் , கைகழுவுதல் , வகுப்பில் மாணவர்களுக்கிடையே ஒரு மீற்றர் தூர இடைவெளி முகக்கவசம் அணிவது உட்பட 45 சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த மார்ச் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பித்த தாக்கத்தைத் தொடர்ந்த கொரோனா இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டன. இம் மாதம் மீண்டும் பரீட்சைகள் இடம்பெறவுள்ள வகுப்புக்கள் மட்டும் ஆரம்பிக்கப் பட்டபோதிலும் மாணவர்களின் வருகை மிகவும் குறைந்தளவில் காணப்படுகின்றது . ஆரம்பப்பிரிவு உட்பட ஏனைய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படாத நிலையில் தற்போது எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள தரம் 6 மாணவர்களுக்கான வகுப்புக்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டும் இடம்பெறவுள்ளது. ஏனைய வகுப்புக்களும் சுழற்சி முறையில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந் நிலையில் மாணவர்கள் உட்பட பெற்றோர்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் உள்ளடங்கிய கையேடுகள் கலந்துரையாடலின்போது வழங்கப்பட்டன.
விடுமுறைகாலத்தில் வலயக் கல்வி அலுவலகத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட செயலட்டைகளை மாணவர்கள் பாடசாலை ஆரம்பிக்கும் போது வகுப்பு ஆசிரியரிடம் ஒப்படைக்குமாறும் பெற்றோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ரி)

# வாக்கு எண்ணும் நிலையங்களில் சி.சி.ரி.வி. பொருத்துமாறு கோர முடிவு

கொழும்பு, ஓக. 1

**வாக்கு எண்ணும் நிலையங்கள் அனைத்திலும் சி.சி.ரி.வி. கமராக்களைப் பொருத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.**

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தை இன்று அல்லது நாளை அனுப்பி வைக்கவுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் பந்துலால் வெள்ளால தெரிவித்துள்ளார்.

இப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டால், வாக்கு எண்ணும் நிலையங்களில் எவ்வித சிக்கலான நிலைமைகளும் ஏற்பட வாய்ப்பிருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே வாக்கு எண்ணும் நிலையங்களுக்குச் செல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் பேச்சு நடத்தி வருவதாக சுதந்திரக் கட்சியின் உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுச் சபையே இது குறித்து தீர்மானம் எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் 5 ஆம் திகதி நடக்கும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கையில் இந்த கூட்ட ணிக்குள் இருக்கும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதனால், தாம் விருப்பு வாக்குகளால் தோற்கடிக்கப்படலாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களுக்கு மத்தியில் அச்சம் நிலவுவதாகவும் பேசப்படுகிறது.


2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்ட 100 நாள் அரசில் அங்கம் வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டனர். இவர்கள் திட்டமிடப்பட்டு தோற்கடிக்கப்பட்டனர் என்று அப்போது குற்றம் சுமத்தப்பட்டது.

தேர்தல் பரப்புரைகளின்போதும் இரண்டு கட்சிகளின் வேட்பாளர்களும் பரஸ்பரம் பகிரங்கமாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுடன் சம்பந்தப்பட்ட எவருக்கும் விருப்பு வாக்குகளை வழங்க வேண்டாம் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அடிக்கடி கூறி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)




# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு என்ன செய்தது?

*கேட்கின்றார் சு.க. வேட்பாளர் விண்ணன்*



கொடிகாமம், ஓக. 1

இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக கொழும்பு வாழ் தமிழ் வர்த்தகர்கள் ஒன்று சேர்ந்து 12 கோடி ரூபா வழங்கினர். அவ்வாறிருக்க தமிழ் மக்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன செய்தார்கள் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் ப.வரதராஜசிங்கம் (விண்ணன்) கேள்வி எழுப்பினார்.

பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்தக் காலப்பகுதியில் வெளிநாடுகளிலும் கொழும்பிலும் தங்கள் குடும்பங்களுடன் தங்கியிருந்து தமது சுகபோக வாழ்க்கையை அனுபவித்தனர்.

தேசியம், சுயநிர்ணயம், தாயகம் என பேசும் தமிழ்க் கட்சிகள் மக்களை தேர்தல் காலத்தில் உசுப்பேத்தி விடுகின்றன.

நல்லாட்சி அரசில் தமிழ் மக்களுக்காக உருப்படியாக எதனையும் சாதிக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா.வில் அரசுக்கு கால அவகாசத்தையும் பெற்றுக்கொடுத்தது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை பொதுவெளியில் விமர்சிப்பதும் அவர்களுடன் சேர்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெறப் போகின்றோம் எனக் கூறுவதும் தமிழ் மக்களை ஏமாற்றும் நாடகம் - என்றார். (கு-159)


## மரண அறிவித்தல்



மறைவு
23 . 07 . 2020

### தில்லைச்சிவன் தியாகராஜா (தில்லை)

யாழ். தீவகம், நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியாவை வாழ்விடமாகவும், கொண்ட தியாகராஜா தில்லைச்சிவன் 23 .07. 2020 வியாழன் அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தியாகராஜா (விசகடி வைத்தியர்) - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகனும், யமுனாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற விமலாதேவி, மற்றும் சற்குண தேவி (ஜேர்மனி), புஷ்பரதி (கனடா), விஜயகாந்தன் (இலங்கை), ஆகியோரின் அன்புச் சகோதரரும், பெரிய தம்பி, சோமசுந்தரம், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, அஞ்சலிதேவி, மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான அனுசம்மா (விசகடி வைத்தியர், வேலணை) இராசலிங்கம், நடராசா, இரத்தினம் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சிற்றம்பலம் (விசகடி வைத்தியர், கொட்டடி) மற்றும் சிவபாதலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ் சென்றவர்களான இராசம்மா, பரிமளம், இலட்சுமி ஆகியோரின் பெறாமகனும், மற்றும் மகிழ்ராஜ், கவிதராஜ், கஜேதராஜ், கேஷாந்தன், சுஷாந்தன், திஷாந்தன், லக்ஷன், தியக்ஷன் ஆகி யோரின் மாமனாரும், நீறஜன், நீறஜா, நிருஷா, நிருஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு: Angel Funeral Care: 188 Alexandra Avenue, South Harrow, Harrow, HA29BN Saturday, 01st August 2020, 2:00 PM - 4:00 PM வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் Angel Funeral Care 188 Alexandra Avenue. Harrow, H2 9BN Sunday 02 August 2020, 10:00AM - 12:00 Noon, நடைபெற்று Hendan Crematorium, Holders HIH Road, London, NW7 1NBSunday, 02nd August 2020. 2:00 PM தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
தி. விஜயகாந்தன் + 94 (75) 6798334
பெ. மகிழ்ராஜ் : + 44 (0) 7833228729
சி. கதிர்வேலு: + 44 (0) 7950352784
க. லக்ஷன் : +1 (416) 8888044
சி. ஜெயசங்கர் : + 44 (0) 7748 986995

(க.30185) (13.17)



## பரவுலகில் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இகவுலகில் மலர்வு
07 04 1955



பரவுலகில் அமர்வு
01 08 2015

### திருமதி அன்ரனற் இருதயநாதர் (யோகமலர்)

"சீவியத்தில் என்னை நேசித்தவரே, மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்"

*பாசமிகு தலைவியாய், நேசமிகு தாயாய், அறம், நெறி, பண்புக்கு
பாத்திரவாளராய் இம்மையிலும் மறுமையிலும் இனியவளாய், தருமத்தின்
உபகாரியாய், எங்கள் குடும்பத்தின் அகல் விளக்காய் வாழ்ந்த எங்கள் அம்மா!
நாமோ கரம் கூப்பி சிரம் தாழ்த்தி ஆராதிக்கின்றோம்
உங்கள் நித்திய வாழ்வுக்காக நித்தமும்
இறைவனை வேண்டி நிற்கின்றோம் அம்மா!*

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (01.08.2020) சனிக்கிழமை யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் (குழந்தை இயேசு ஆலயத்தில்) காலை 6.00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்டு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நான் வாழ்ந்தாலும் இறந்தாலும் இறைவனுக்கே சொந்தம்"

செ.இருதயநாதர்
(துரைமணி)
077 130 8661
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு.

இவரது பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்
குடும்பத்தினர்.

# முஸ்லிம் மக்கள் மீதும் எமக்கு அக்கறையுண்டு!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 1**

**முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம்களுக்காகச் சிந்திக்காது தமது பதவிகள் குறித்து மட்டுமே சிந்திக்கின்றனர். ஆனால் நாம் முஸ்லிம் மக்கள் குறித்தும் சிந்திக்கிறோம். முஸ்லிம் மக்கள் எம்மை நம்பினால் எமக்கு ஆதரவைத் தாருங்கள். முஸ்லிம் சமூகத்தை ஒருபோதும் நாம் ஏமாற்ற மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார்.**

புல்மோட்டை வட்டார தமிழரசுக் கட்சியின் கிளைத்தலைவர் கலீல் தலைமையில் புல்மோட்டையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மை மக்களாகிய நாம் மிகவும் பிரச்சினைக்குரிய காலத்தில் வாழ்கின்றோம். எமக்கு எதிராகப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு தமிழர் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கும் மாற்றியமைக்கவும் பல்வேறு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த விடயங்கள் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். அதிகாரம் எம்மிடம் இருந்தால் மட்டுமே இந்தச் சதிகளை முறியடிக்க முடியும். தொல்பொருள் என்ற பெயரில் கிழக்கில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் மிக மோசமான பாதிப்பு முஸ்லிம் மக்களுக்கே ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களின் நிலைமைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிந்திக்கின்றது. முஸ்லிம்கள் நினைத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவு தாருங்கள். முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம்களுக்காக சிந்திக்காது அவர்களின் பதவிகள் குறித்து மட்டுமே சிந்திக்கின்றனர். ஆனால் நாம் மக்கள் குறித்து சிந்திக்கிறோம். சமூகங்களுக்கு இடையில் புரிந்துணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். முஸ்லிம் மக்களுக்காக நாம் கிழக்கின் முதலமைச்சர் பதவியைக்கூட விட்டுக்கொடுத்தோம். சமூக நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் நாம் அந்த விட்டுக்கொடுப்பை முன்னெடுத்தோம். இந்த நாடாமன்றத் தேர்தலில் முஸ்லிம் சமூகம் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டில் தீர்வு குறித்து பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றன. போரொன்று இடம்பெற்றது. அதற்கு முன்னரும் பின்னரும் பேச்சுக்கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஆரம்பத்தில் இருந்து நாம் மட்டுமே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். நாம் தேர்தலுக்காக மட்டும் செயற்படும் கட்சி அல்ல. இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஏற்ற அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டு அரசியல் அமைப்பில் நிலையான தீர்வு ஒன்றினை உருவாகிக்கொடுக்க வேண்டும். அதனை அடைவதற்கான வாய்ப்புகள் இன்று நெருங்கிக்கொண்டு உள்ளன. அதேபோல் மக்களின் தீர்மானம் இந்த தேர்தலில் வெளிப்பட்டாக வேண்டும். நாடாளுமன்றத்தில் நாம் பலமான அணியாக இருக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நாடு பூராகவும் நாம் சிறுபான்மை மக்களாக இருந்தாலும் கூட வடக்கிலும், கிழக்கிலும் நாம் தான் பெரும்பான்மையாக வாழ்கின்றோம். எனவே நாம் இரு சமூகமும் ஒற்றுமையாகச் செயற்பட்டால் எமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ம)

# பல கொள்ளைகளுடன் தொடர்புடையோர் என இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் வாள்களைக் காண்பித்துக் கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர்.

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் உள்ள பற்றைக் காணிக்குள் கூடாரம் அமைத்து மறைந்து வாழ்ந்துவந்த நிலையில் இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கீழான உதவிப் பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான சிறப்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையில் இந்தக் கொள்ளைக் கும்பல் சிக்கிக்கொண்டது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் 5 கொள்ளைச் சம்பவங்களுடனும் பளை, தெல்லிப்பழை, இளவாலை பொலிஸ் பிரிவுகளில் வீடுகளுக்குள் புகுந்து வாள்களைக் காண்பித்து இடம்பெற்ற கொள்ளைகளுடனும் இவர்கள் தொடர்புடையவர்கள். இவர்களுக்கு பல வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்த நிலையில் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடையில் பற்றைக் காணிக்குள் தற்காலிகக் கூடாரம் அமைத்து மறைந்திருந்தபோதே கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் நவாலிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் 4 பவுண் தங்க நகையும் மீட்கப்பட்டுள்ளன. கும்பலைச் சேர்ந்த மேலும் இருவர் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளனர். என்றனர். (ம-26)

# மாநகர சபையின் தீயணைப்பு வாகனத்தின் உண்மையான பெறுமதி மறைக்கப்பட்டதா?

யாழ்ப்பாணம், ஓக. 1

மாநகர சபையின் தீயணைப்பு இயந்திரத்தின் உண்மை பெறுமது மறைக்கப்பட்டு தவறான பெறுமதிக்கு காப்புறுதி செய்தமையினாலேயே உடனடியாக அடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்ல முடியாமல் நிர்வாகப் பணித்தொகுதி திணறுகின்றது என யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 7ஆவது மாதாந்தக் கூட்டம் நேற்று மாலை சபையின் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே தீயணைப்பு வாகன காப்புறுதியில் ஏற்பட்ட மாறுபாடு அதனது நிலைமை தொடர்பில் தனியான விசாரணை மேற்கண்டே ஆகவேண்டும் என்ற தீர்மானத்தை சமர்ப்பித்து உரையாற்றும்போதே உறுப்பினர் லோகதயாளன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 3 கோடியே 25 லட்சம் ரூபா பெறுமதிக்கு புதிதாக இந்த வாகனம் கிடைத்தபோதும் வெறும் 68 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியிடப்பட்டு வருடாநதம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா காப்புறுதி செலுத்தப்பட்டு வந்துள்ளது.

தற்போது வாகனம் விபத்திற்குள்ளாகி முழுமையான சேதம் அடைந்துள்ளது. இதனைத் திருத்த கணிப்பிடும் பெறுமதி கோடியைத் தாண்டுகின்றது. இருப்பினும் காப்புறுதி நிறுவனமோ குறித்த வாகனத்திற்காக கணிக்கப்பட்ட தொகையை வழங்குமா என்பது கேள்விக்குறி. இதனால் ஒரு தொகை நிதிச் சபையின் பொறுப்பிலேயே செலவிடப்பட வேண்டிய அவலம் அதிகாரிகளின் தவறினால் ஏற்படும் என்றே கருதுகின்றேன்.

புதிதாக கிடைத்த வாகனத்திற்கு குறைந்த தொகையில் காப்புறுதி செய்தமை ஆணையாளரின் முழுமையான தவறு. இந்த விடயத்திற்கு கணக்காளரும் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும். ஏனெனில் இந்த மாவட்டத்திற்கே உரித்தான சொத்து இன்று இழக்கப்பட்டுள்ளது என்றார்.

இதன்போது பதிலளித்த கணக்காளர் இந்த விடயத்தில் எனது பொறுப்பு ஏதும் கிடையாது. வந்த காப்புறுதிச் சிட்டைக்கு கொடுப்பனவு செய்தமை மட்டுமே என்னுடன் தொடர்புபட்ட விடயம் என்றார்.

இதுதொடர்பில் பதிலளித்த ஆணையாளர், இந்த விடயத்தில் தவறு நடந்துள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அது என்னுடைய பிழை அல்ல. இது வந்தநாள் முதலே 68 லட்சம் பெறுமதியிலேயே காப்புறுதி செய்யப்படுகின்றது. அதனையே நானும் செய்தேன் எனக்கு முன்பும் இரு ஆணையாளர்கள் இதனைத்தான் செய்துள்ளனர் என்றார்.

இதனை அடுத்து இவ்விடயம் தொடர்பில் உடனடியாக தனியான குழு அமைத்து விசாரணை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை உறுப்பினர் ந.லோகதயாளன் முன்மொழிய உறுப்பினர் சுபாதீஸ் வழிமொழிந்தார். (ம)

# அரசியல் முதிர்ச்சியைக் கருத்தில்கொண்டு தமிழர்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும்!

## தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 1

தமிழ் மக்கள் வரலாறு கற்றுத்தந்த அரசியல் முதிர்ச்சியைக் கருத்தில் கொண்டு சிந்தித்து வாக்களிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ் மக்கள் பேரவை.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமது தாயகம், மொழி, கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றின் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் பற்றுறுதி ஆழமானது. ஒரு தேசிய இனமாக தமிழ் மக்களின் தேசியம் சார்ந்த பற்றும் அரசியல் அறிவும் அரசியல்வாதிகளிலும் பார்க்க மேம்பட்டிருப்பதை பல சந்தர்ப்பங்களில் நாம் உணர்ந்திருக்கின்றோம். எமது மக்கள் தமது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற அடிப்படை அபிலாசைகளுக்காகவும், அதன் பால் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் தன்னார்வத்துடன் பல போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வலுவான கொள்கை அடிப்படையிலும் அந்த கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாட்டுத் தளத்திலும் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதை விடுத்து தங்களுக்குள் மோதிக் கொள்வதனை அனுமதிக்க முடியாது. பொதுமக்களுடன் சேர்ந்து இயங்கக்கூடிய நேர்மையான விலைபோகாத அரசியல் பிரதிநிதிகள் எமக்கு அவசியமாகின்றனர். அந்த வகையிலே எமது வாக்குரிமையை சரியாகப்பயன்படுத்தி பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்ய வேண்டிய பெரும் பொறுப்பு எம்முன்னே எழுந்திருக்கிறது. அதற்காக பின்வரும் விடயங்களை கருத்தில் எடுக்குமாறு தமிழ் மக்கள் பேரவையானது அனைவரையும் தாழ்மையுடன் வேண்டி நிற்கிறது - என்றுள்ளது. (ம)

# தனிப் பெரும்பான்மையை பெரமுனவுக்கு தாருங்கள்

## கட்சிகள் இணைந்த பெரும்பான்மையால் பயன் இல்லை என்கின்றார் நாமல்

**கொழும்பு, ஓக. 1**
**கட்சிகள் இணைந்த கூட்டணியால் கிடைக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர முடியாது. எனவே மக்கள் பொதுமக்கள் முன்னணிக்கு தனிப்பெரும்பான்மை பலத்தை தரவேண்டும் என பொதுமக்கள் முன்னணியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

தங்காலையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முழுமையான அரசமைப்பு உருவாக்க நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசமைப்புச் சட்டத்தை அடிப்படையாக கொண்டது. நாட்டுக்கு கெடுதியான சில உடன்படிக்கைகளை தோற்கடிக்க எமக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

கட்சிகள் இணைந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அரசமைப்புச் சட்டத்தை மாற்ற முடியாது. 19ஆவது திருத்தச் சட்டத்தை கட்சிகள் இணைந்து கொண்டுவந்தன. இறுதி நேரத்திலும் அதில் மாற்றங்களை செய்தனர். இந்தத் திருத்தச் சட்டம் நல்லதா கெட்டதா என்ற விடயமல்ல. அதனைக் கொண்டு வந்தவர்கள் எதிர்பார்த்த எதுவும் அதில் இல்லை.

மகிந்த ராஜபக்ச மீண்டும் ஜனாதிபதித் தேர்தலிலும் வெளிநாட்டு பிரஜா உரிமையை கொண்டிருந்த கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் தேர்தலில் போட்டியிட முடியாதபடியான தீர்மானங்கள் மாத்திரமே அதில் உள்ளன. கட்சிகள் இணைந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாது என்ற நிலைமைய நாம் நாட்டின் வரலாற்றில் கண்டுள்ளோம். மக்களை மையமாகக் கொண்ட அரசமைப்பே நாட்டுக்குத் தேவை - என்றார். (ம)



## எம்.பிக்களுக்கு கைகொடுக்கத் தடை முகக் கவசம் அணிவதும் கட்டாயம்!

கொழும்பு, ஓக. 1
அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபா மண்டபத்திலிருக்கும் நேரத்தில் எப்பொழுதும் முகக் கவசத்தை அணிந்திருப்பது அவசியமானது என நேற்று பிற்பகல் நாடாளுமன்றத்துக்கு கையளிக்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் தொகுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபா மண்டபத்திலிருக்கும் நேரத்தில் முகக்கவசத்தைக் கழற்றவோ அல்லது கீழிறக்கவோ கூடாது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆசனங்களில் அமர்ந்திருக்க முடியுமாக இருக்கின்றபோதும், அவர்கள் அனைவரும் சபா மண்டபத்திலிருக்கும்போது தமக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் மாத்திரம் அமரவேண்டும் என்பதுடன், சபா மண்டபத்திலிருக்கும் சகல நேரத்திலும் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

சபா மண்டபத்திலிருக்கும் சகல அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற பணியாளர்களும், கலரியிலிருக்கும் சகல தரப்பினரும் முகக்கவசத்தை அணிந்திருக்க வேண்டும் என்றும் இந்த வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்காக தயாரிக்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் தொகுப்பு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்கவினால், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற செயலாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கையடக்கத் தொலைபேசி மற்றும் பேனா போன்ற தனிப்பட்ட கருவிகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளாதிருப்பதுடன், கைலாகுகொடுத்தல், கட்டிப்பிடித்தல் போன்ற வாழ்த்தும் முறைகளைப்பின்பற்றாதிருத்தல் போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க, சுகாதாரப் பாதுகாப்பான முறையில் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இந்த வழிகாட்டல் தொகுப்புத் தயாரிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற சபா மண்டபத்துக்குள் நுழையும் சகல வாயில்களிலும் கிருமிநாசினி திரவம் வைக்கப்படுவதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் சபா மண்டபத்துக்குள் நுழைய முன்னர் தமது கைகளைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப்பின்பற்றி தமது ஆசனங்களில் அமரமுடியும் என்றும் குறிப்பிட்டார். (ம)

## தேர்தலின் பின்னரும் ஊரடங்கு அமுலாகாது

கொழும்பு, ஓக. 1
பொதுத் தேர்தல் முடிந்ததும் ஊரடங்கு உத்தரவு விதிக்க வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட வேண்டிய நேரத்தில் ஊரடங்கு உத்தரவு விதிக்க வேண்டிய அவசியமில்லை. அத்தோடு வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இதேவேளை மற்ற நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கும் நியாயமான முறையில் நடத்தப்படுவதை அரசு உறுதி செய்யும் என்றார். (ம)



## தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கந்தளாயில் நேற்றுக் கவனவீர்ப்பு

கொழும்பு, ஓக. 1
நாட்டில் கொரோனா நோயாளர்கள் அதிகரித்துச் செல்வதை கருத்தில் கொள்ளாது தேர்தல் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கந்தளாயில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. இதில் இருபதுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக பௌத்த தேரர்கள் கலந்து கொண்டனர். (ம)

# சுழிபுரத்தில் இன்று கூட்டமைப்பின் பரப்புரை

யாழ்ப்பாணம், ஓக. 1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் பரப்புரைக் கூட்டமொன்று சுழிபுரத்தில் இன்று இடம்பெறவுள்ளது. வலி மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் சுழிபுரம் காளுவன் சந்திக்கு அருகாமையில் இன்று மாலை 5 மணிக்கு இந்தப் பரப்புரைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா, உதயன் குழுமத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், திருமதி சசிகலா ரவிராஜ், கு.சுரேந்திரன், வே.தபேந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (ம)





## யாழில்...

ஆணைக்குழுவால் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட விசேட அதிகாரி, ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவர் தேர்தல் விதிமுறைகளை மீறுகின்றார் என்றும் அவருக்கு உடந்தையாக மாவட்டச் செயலகத்திலுள்ள உயர் அதிகாரிகள் இருவர் செயற்படுகின்றனர் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பல்வேறு தரப்புக்களால் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனையடுத்து விசேட அதிகாரி ஒருவரை தேர்தல்கள் ஆணைக்குழு நியமித்தது.

அந்த அதிகாரி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், ஆளும் கட்சி அரசியல்வாதியின் தேர்தல் விதிமுறை மீறல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஆளும் கட்சி அரசியல்வாதி யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய பரப்புரைக் கூட்டத்தில் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டுள்ளனர். சுகாதார வழிகாட்டி வர்த்தமானியில் 300 பேர் வரையில் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அதனையும் மீறி அதிகளவானோரை மண்டபம் ஒன்றினுள் பங்கேற்ற வைத்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதற்கு அமைவாக அதனைச் சென்று பார்வையிட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர் 150 பேர் வரையிலேயே கூட்டத்தில் பங்கேற்றனர் என்று அறிக்கையிட்டுள்ளார். ஆனால் மேற்படி அரசியல்வாதியின் உறவினரின் ஊடகமே, பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர் என்று காணொலிகளையும் வெளியிட்டிருந்தது.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவினுள் மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் உயர் அதிகாரி ஒருவரை செல்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தடைவிதித்திருந்த நிலையில், அவர் அந்த அலுவலகத்தினுள் நேற்றுமுன்தினமும் சென்று தலையீடு செய்துள்ளார்.

இவ்வாறு, யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர் அதிகாரிகள் சிலர் ஆளும் கட்சி அரசியல்வாதிக்கு பக்கச் சார்பாக நடப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்று தெரியவருகின்றது. (ஒ,5)

## விரக்தி...

னெடுக்க வேண்டும். இன அழிப்புக்கான பொறுப்புக் கூறலுக்கு இலங்கை அரசை சர்வதேச ரீதியாக உந்துவதன் மூலம் தமிழ் மக்களுக்கான பரிகார நீதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதிலிருந்து பிறக்கக்கூடிய ஒரு தீர்வே தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் என்பதில் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் எப்போதும் தெளிவாகவே இருந்து வந்திருக்கிறது.

கடந்த பத்தாண்டுகால அரசியல் பயணத்தில் நாம் சிறிதும் முன்னேறவில்லை என்பது விரக்தி தரும் ஒரு விடயமாகவே இருக்கிறது.

இன்றைய நிலையில் தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் பெருமளவில் உருத்திரண்டுள்ளன. இலங்கை ஒரு பௌத்த சிங்கள தேசம் என்பதை உறுதிப்படுத்துவதில் அவை முனைந்து நிற்பது வெள்ளிடை மலையாக உள்ளது. வடக்கிலே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சமய சாதீய முரண்பாடுகளையும் போரின் பின்னான வறுமை நிலையையும் தமக்கு சாதகமாக பயன்படுத்தி அரசியல் களத்தில் காலூன்றிவிட வேண்டும் என்ற பெரு விருப்போடு தென்னிலங்கைக் கட்சிகளும் வடகிழக்கிலுள்ள அவர்களின் முகவர்களும் களமிறங்கியுள்ளனர்.

தமிழ்த்தேசிய நிலைப்பாட்டிலிருந்து செயல்படுவதாக சொல்லும் கட்சிகள், கட்சிகளுக்குள்ளான உட்பூசல்களாலும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளாலும் பிளவுண்டு சிதறுண்டவைகளாக இத்தேர்தலை எதிர்கொள்கின்றன.

இன்றைய சூழ்நிலை பெரும் விரக்தி தருவதாக அமைந்திருப்பதால் தமிழ் மக்களாகிய நாம் தேர்தலில் ஆர்வம் காட்டாமல் ஒதுங்கிவிடவோ அல்லது சலுகைகளை பரப்புரை செய்யும் கட்சிகள் பக்கம் சாய்ந்து விடவோ உந்தப்படலாம். அது தவறு என்பதை நாம் தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் எமது வழுவா தமிழ்த் தேசிய மரபின் நிலை நின்று பின்வரும் வேண்டுகோள்களை எமது மக்களிடம் முன்வைக்கின்றோம்.

விரக்தி மனநிலையிலிருந்து விலகி வாக்களிக்க முன்வாருங்கள்

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அர்ப்பணத்தோடு இருக்கும் கட்சிகளை தெரிவு செய்யுங்கள்க ட்சி எல்லைகளுக்கப்பால் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அஞ்சாமல் குரலெழுப்பக் கூடிய ஆளுமைகளை அடையாளங் கண்டு வாக்களியுங்கள். இதன் மூலம் தேர்தலுக்கு முன் எம்மால் எட்டப்பட முடியாமல் போன ஒற்றுமையை தேர்தலின் பின்னாவது செயற்படு தளத்தில் எட்ட முடியுமென்று நாம் நம்புகிறோம்.

முப்பது ஆண்டு கால போராட்டத்தில் நாம் இழந்தவை பெரிது. அவற்றின் கைமாறு இன்றில்லாவிட்டாலும் என்றாவது கிட்டவேண்டும் என்பதில் உறுதியாக இருப்போம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ,5,26)

## ராஜபக்ஷ...

சக்களுடன் கூட்டமைப்பு எந்த உறவுமில்லை என்பதைத் துணிந்து சொல்வதுடன், குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் முன்னாள் நீதியரசர் மக்கள் என்ற நீதிபதிகள் முன்பாக முடிந்தால் ஆதாரங்களை முன்வைக்கட்டும் என்று சவால் விடுகின்றேன். ஆனால் ராஜபக்சக்களுடன், அவருக்கும் அவர் கூட இருப்பவர்களுக்கும் 'டீல்' இருக்கின்றது என்பதை என்னால் ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் வேட்பாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டுவில் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைத் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார். அவரது குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியில் தாக்கம் செலுத்தவில்லை. ஆனாலும் அவரோ சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போன்று ஏதாவது பொய்யையும் புரட்டையும் சொல்லி எப்பாடுபட்டாவது இந்தத் தேர்தலில் வெற்றி பெறத் துடிக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான ஆதரவுத் தளத்தைச் சிதைப்பதற்காக அவர் கடைசியாக எடுத்துள்ள ஆயுதம்தான், பெரமுனவுடன் கூட்டமைப்புக்கு இரகசிய ஒப்பந்தம் இருக்கின்றது என்ற கருத்துரை. அவரது மனசாட்சிக்கே தெரியும், தான் சொல்வது பச்சைப் பொய் என்று. இருப்பினும் அரசியல் ஆதாயத்துக்காக அதனை அவிழ்த்து விடுகின்றார்.

விக்னேஸ்வரனின் அணியில் இருந்து கொண்டு இந்தத் தேர்தலில் போட்டியிடுபவர்கள்தான் ராஜபக்சக்களுடன் 'டீல்' வைத்திருக்கின்றார்கள். அதனை திசை திருப்ப இந்தப் பழியை கூட்டமைப்பு மீது போட்டாரோ நான் அறியேன்.

மஹிந்த ராஜபக்ச அமைச்சராக இருந்த காலத்தில் அவரது தனிப்பட்ட செயலராக இருந்தவர் சுரேஷ் பிறேமசந்திரன். விக்னேஸ்வரனுக்கு இது தெரியுமோ தெரியாது. 2010ஆம் ஆண்டு போர் முடிந்த கையோடு ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. ஒட்டுமொத்த தமிழினமும் மஹிந்தவுக்கு எதிராக சீற்றமுடன் எழுந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்களின் கையாலேயே அவர்களின் கண்ணைக் குத்த வைக்க ராஜபக்சக்கள் பாடுபட்டனர். ராஜபக்சக்களுடன் 'டீல்' பேசிக் கொண்டு பணத்தையும் பெற்றுக் கொண்டு அந்தத் தேர்தலில் தமிழர் வாக்குகளைப் பிரிக்க களமிறங்கியவர் யார்? அவர் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். அவர் யார் என்று நான் சொல்லியா நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. தமிழரின் ஒற்றுமைக்கான கோசம் பெரும் எடுப்பில் ஒலித்தது. ஆனாலும் அந்த ஒற்றுமையைக் குலைக்க விரும்பிய ராஜபக்சக்கள் தமிழர் தாயகத்தில் பணம் கொடுத்து சுயேச்சைக் குழுக்களை டசின் கணக்கில் களமிறக்கினர். அந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வங்கியைச் சிதைத்த சிறீகாந்தாவும்; சிவாஜிலிங்கமும் தனித்துப் போட்டியிட்டனர். அவர்கள் யாருடைய தேவையை நிறைவேற்ற, யாருடன் 'டீல்' பேசிக் களமிறங்கினர் என்பது தெரியாதா?

வடக்கு மாகாண சபையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரதிநிதி என்று தன்னைத் தானே கூறிக் கொண்டவர், தனது தனிப்பட்ட உதவியாளராக, அமைச்சரான பின்னர் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாக யாரை நியமித்திருந்தார்? அவர் யார்? ராஜபக்சக்களின் புலனாய்வு அதிகாரியை நியமித்திருந்த அவர் இன்று உங்களுடன் சக வேட்பாளர்? இவையெல்லாம் மக்களுக்குத் தெரியாதா? இவை எல்லாவற்றுக்கும் மேலாக 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாருடைய ஏவலில் அவர் அந்தத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரினார்?

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச போட்டியிட்டபோது கூட்டமைப்பு அவரைப் பகிரங்கமாக எதிர்த்தது. அவரைத் தோற்கடிக்குமாறு தமிழ் மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. தமிழ் மக்களை கோத்தாவுக்கு எதிராக வாக்களிக்கத் தூண்டியது. 3 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு தலைசாய்த்து வாக்களித்தார்கள். ஆனால் நீதியரசரே நீங்கள் என்ன செய்தீர்கள்? கோத்தாபயவுக்கு எதிராக வாக்களிக்கச் சொன்னீர்களா? இல்லைத் தானே. அப்படியானால் இப்போது சொல்லுங்கள், ராஜபக்சக்களுடன் இரகசிய 'டீல்' பேசியது கூட்டமைப்பா? விக்னேஸ்வரன் அணியா?

நீதிபதிகளான மக்களே, விடயங்களை சீர்தூக்கி ஆராய்ந்து உங்கள் தீர்ப்புக்களை எதிர்வரும் 5ஆம் திகதி வழங்குங்கள் என்று அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன், என்றார். (ஒ,5)




## தீர்வை...

கள் பலமான ஆணை தர வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் தற்போது தமிழர்களின் பக்கம் நிற்கின்றது. இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் தவறவிடக்கூடாது. சர்வதேசத்தின் ஊடாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து எமக்கான தீர்வை நாம் வென்றெடுக்க வேண்டும். அதற்கு எமது மக்களின் பலமான ஆணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகவும் அவசியம். கூட்டமைப்பு க்கான அந்த ஆணையை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கிலுள்ள எமது மக்கள் வழங்க வேண்டும்.

நியாயமான ஓர் அரசியல் தீர்வை அரசு தமிழர்களுக்குத் தந்தே ஆக வேண்டும். இல்லையேல் அது பாரிய பின்விளைவுகளைக் கொண்டுவரும். அந்த நிலைமை நாட்டுக்கு உகந்ததல்ல என்று அரசுக்கு நாம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருக்கின்றோம்.

அரசியல் தீர்வு தொடர்பில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசு பின்வாங்க முடியாது.

தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கியவாக்குறுதிகளை சிங்களத் தலைவர்கள் மதிக்காமையாலேயே, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றது. அதனால் எமது போராட்டம் முப்பது வருடங்கள் ஆயுத வழியில் தொடர்ந்தது. மீண்டும் ஜனநாயக வழியில் நாம் போராடுகின்றோம். எமது இந்தப் போராட்டத்துக்கு சர்வதேசம் மதிக்கின்றது. எனவே, இலங்கை அரசும் எமது போராட்டத்தை மதித்து எமக்கான தீர்வை வழங்க வேண்டும், என்றார். (ஒ,5,22)

## மரண அறிவித்தல்

### திருமதி. சின்னத்தம்பி நல்லம்மா



அல்லாரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சின்னத்தம்பி நல்லம்மா நேற்று (31.07.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், நமசிவாயம், காலஞ்சென்ற திருமதி தம்பு செல்லமுத்துவின் அன்புச் சகோதரியும், தம்பு, காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி, அருணாசலம், பொன்னையா, கனகம்மா, கற்பகம், ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவனீதராஜா(ஜேர்மன்), மனோரஞ்சிதராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சௌந்தராணி(ஜேர்மன்), முருகானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், ருக்சி - மத்தியாஸ், பிரேமிகா, ஜனகன், சிவாஞ்சலி-வினூஜன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமாலியாவின் பூட்டியும், இரஜனி - இராஜமனோகரன், இரவிக்குமார் - பிறேமிளா, இரகுலேசன் - நளாயினி, ஆகியோரின் பெரிய தாயாரும், இராஜேஸ்வரி, இராசநாயகம், பரமேஸ்வரன், இராகினி, இன்பேஸ்வரி, இரவிக்குமார், உதயகுமாரி, இரதிக்குமாரி, ஆகியோரின் அன்பு மாமியும்,பிரியந்தி, கிருத்திகா, நர்த்தனா, நயனா, ஆகியோரின் ஆசை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியாள்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்

அல்லாரையை வடக்கு, மீசாலை, குடும்பத்தினர்

தொடர்பு:- 0770367260, 0770137266

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 05 . 1934



இறப்பு 31 . 07 . 2020

### வீரகத்தி நடராஜா

கட்டுவனை பிறப்பிடமாகவும், தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராஜா நேற்று (31.07.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருந்தவத்தின் அன்புக் கணவரும் நல்லம்மா, அன்னம்மா, ஐயம்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் கேதீஸ்வரன் (லண்டன்), சுகிர்தா (பிரான்ஸ்), வினோதரன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), மனோகரன் ஆகியோரின் தந்தையும் ஞானசேகரம் (லண்டன்), ஞானதீபம் (லண்டன்), சக்திவேல் (பிரான்ஸ்), கவிதா (பிரான்ஸ்),பூலோகவதி ஆகியோரின் மாமனாரும் குணாலன் (லண்டன்), பமிலா (லண்டன்), கிதுசன் (லண்டன்), மிதுசன் (லண்டன்), கபில்ராஜ் (லண்டன்), சகானா (லண்டன்), கபில்சன் (லண்டன்), தாருஜன் (பிரான்ஸ்), இந்துசா (பிரான்ஸ்), இனிசா (பிரான்ஸ்), தனுஜா (பிரான்ஸ்), அக்ஷயன் (பிரான்ஸ்), கவிஷா (பிரான்ஸ்), டினுசா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாச்சிமார் வீதி, தம்பாலை , அச்சுவேலி.

தகவல்:- குடும்பத்தினர்.

## சிகிச்சை...

தடவைகள் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில்கொரோனா தொற்று இல்லை என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களைவிடுவிக்கு மாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பிய ஒருவர் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றார். கடந்த 25ஆம் திகதி வரை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்படிருந்தது. அதன் பின்னர் அவர் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மீள மாற்றப்பட்டிருந்தார். அவருக்கு கொரோனா தொற்று மிகக் குறைந்த அளவில் உள்ளமை கடந்த திங்கட்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 7ஆம் விடுதியில் பணியாற்றும் மருத்துவ சேவையாளர்கள் நால்வர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டதாக மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சுகாதாரக் குழு நேற்றுமுன்தினம் கூடியது. அதன்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 7ஆம் விடுதியில் விவகாரம் கலந்துரையாடப்பட்டது. கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் 7ஆம் விடுதியின் மலசல கூடத்தைப் பயன்படுத்தினார் என்றும் மருத்துவமனை சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றிருந்தார் என்றும் தகவலளிக்கப்பட்டது. அதனால் ஆபத்தை முன்கூட்டியே தடுக்கும் வகையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 7ஆம் விடுதியில் ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதிவரை சிகிச்சை பெற்ற நோயாளிகள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்படவேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அவர்களைக் கண்டறிந்து சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தும் பணி நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு மாகாணம் மற்றும் பொலநறுவை, குருநாகல் என்று சுமார் 70 பேர் இவ்வாறு அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கொழும்பு ஐடிஎச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த, 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றவருக்கு அங்கு மீளவும் இரண்டு தடவைகள் பிசிஆர் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அந்த இரண்டு தடவைகளும் அவருக்கு கோரோனா தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களை விடுவிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## மஹிந்த...

ளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் மேற்படி குற்றவாளிகளுக்கு நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. கஹவத்தை பகுதியில் 2015ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைப் பேரணி இடம்பெற்றபோது, ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் பிரதிவாதிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜ்யசேகர, கஹவத்தை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வஜிர தர்சன சில்வா மற்றும் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நிலந்த ஜயக்கொடி ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## சம்பந்தனின்...

தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று மாலை 5 மணியளவில் தெல்லிப்பழையில் இடம்பெறவுள்ளதாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இறுதிக் கட்ட தேர்தல் பரப்புரைக்காக இரா.சம்பந்தன் யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில்; போட்டியிடும் 10 வேட்பாளர்களும் பங்கேற்கும் கூட்டம், தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ,5)

## லங்காபுர...

கந்தகாடு மறுவாழ்வு மையத்தில் கொரோனா தொற்றுடன் கண்டறியப்பட்ட நோயாளியுடன் லங்காபுர பிரதேச சபை ஊழியர் தொடர்புபட்டதால் அவருக்குத் தொற்று ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து லங்காபுர பிரதேச சபை ஊழியருடன் தொடர்புபட்டவர்களுக்கும் பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் பிறிதொருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ம)

REGISTERED AS NEWSPAPER

# உதயன்

விலை - 30 ரூபா பக்கங்கள் - 24 + VIII செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 245 ஆடி 17ஆம் நாள் சனிக்கிழமை 1 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



# இவருக்கோ எமது வாக்கு?

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்



உலகமெலாம் அதிர்வுகொள உண்மை வேண்டி
உய்வதற்கு வழிதேடி தமிழர்வாட
இலங்கை யதன் பாராளுமன்று தன்னின்
எழுச்சியுறும் தேர்தலதும் வந்ததாலே
நலம் சிதைய அணி பிரிந்து பதவி வேண்டி
நம்தலைவர் தமக்குள்ளே பகைத்து நின்றார்
குலம் அழிக்க வந்தவர்போல் ஒருவர் வீட்டின்
கூரையதைப் பிய்த்தேதான் இழிவு செய்தார்.

நீதியதன் பதியெனவே நின்ற ஏந்தல்
நீசர்களின் கைப்பொம்மையான பின்னர்
பாதிமதி நீறணிந்த சிவனைப் போல
பகல்வேஷம் போட்டேதான் வெளியில் வந்து
சேதிபல பொய்யோடு சேர்த்துச் சொல்லி
சிறப்பான இனம் சிதைக்க முன்னே வந்தார்
ஆதியிலே மண்ணுக்காய் உயிரை நீத்த
அற்புதரைத் தம் உறவாய்ப் பேசி நின்றார்

மாகாண சபையதனில் மண்ணைக் கௌவி
மாண்புகளைத் தொலைத்திட்ட மதியில் வேந்தர்
“ஆகா! நான் அது செய்வேன் இதுவும் செய்வேன்
அடுத்த சில நாட்களிலே ஈழம் பெற்று
பாகாகக் கொணர்ந்திடுவேன்” என்று பொய்யைப்
பலர் அறிய விற்கின்றார் பதவிக்காக
வாகாக நம் இனத்தை வளைக்க எண்ணி
வற்றாது பொய்யுரைத்து நிற்கின்றாரே.

நேற்று வரை பகை என்று சொன்னோர் தம்மை
நேசமுடன் கையணைத்துப் பதவிக்காக
வேற்றுமைகள் இல்லார் போல் விரும்பி நின்றார்
விரும்பியவர் வெறுத்தேதான் விலக்கி நின்றார்
சோற்றுக்கா வழியில்லை? இவர்க்கு ஏன்தான்
சொல்லதனுள் பொய் புதைத்து விற்கும் வேலை
சாற்றுகிற புகழ் இவர்க்கு வேண்டாமாமோ?
சகதியிலே அகப்பட்டு இழிந்து போனார்.

ஆற்றல் இல்லை நிர்வாகம் தன்னில் என்ற
அவ்வுண்மை வெளிப்படையாய்த் தெரிந்த பின்னும்
ஊற்றெடுக்கும் பதவியதன் ஆசைதன்னால்
ஊர் கெடுத்து வாழ்வுபெற விரும்பி நின்றார்
ஏற்றபெரும் பதவியதன் நினைவு மாறி
இழிவதனின் எல்லை தொட முனையும் இந்த
தேற்றமிலா மனிதர் தனை என்ன சொல்ல?
தேரிழுத்துத் தெருவ தனில் விட்டுவிட்டார்.

தனை அணைந்த அமைச்சர் தனைக் காக்கவேண்டி
தப்பில்லா அமைச்சரையும் தண்டித்தேதான்
வினை இழிவு செய்ததனால் மன்றில் இன்று
வீணாகத் தலைகுனிந்து நிற்கின்றாராம்.
பனைமரம் போல் நின்று உருவில் உயர்ந்து என்ன?
பண்பதனில் புல்லாகி வளைந்து போனார்
இணையதிலா தலைவனைத் தன் “தம்பி” என்று
இவர் கூறும் நகைச்சுவையை என்ன சொல்ல?



சுன்னாகத் தண்ணீரின் சுவையை மாற்றி
சொல்லவொணா இழிவுதனைச் செய்த அந்த
விண்ணர்களைக் காப்பதற்காய்ப் பொய்கள் கூறி
வேற்றுமைகள் பல செய்து ஆய்வின் பேரால்
மண்ணதனின் மக்களெலாம் மடியும் வண்ணம்
மனமொத்துச் செய்த பெருந்துரோகம் தன்னை
எந்நாளும் எங்கள் இனம் மறந்துபோமோ?
இவர்க்கோ எம் வாக்கதனை ஈயப்போறோம்?

தங்களது உறவுகளில் மனதை வைத்து
தமிழரினம் சிதைத்திடவே வழிகள் செய்யும்
பங்கமிகு இவர் அறிவை என்ன சொல்ல?
பண்பின்றித் தமிழர்களைப் பிரித்து நின்றார்
மங்களத்து வடிவொன்றே போதும் இந்த
மடையர் இனம் ஈர்ப்பதற்கு என்று எண்ணும்
பொங்குகிற இவர் வஞ்சம் புகுந்தேவிட்டால்
போய்த் தொலையும் எங்கள் இனம் மறந்திடாதீர்!

எதிரிகளாம் என்றுரைத்த அரசை நாடி
“எனக்கீயும் ஜீப்” என்று இரந்து நின்றார்
நிதி பெறவே மக்கள் அவை முன்னே வந்தும்
நீட்டினராம் கைகள்தனை நாணமின்றி
விதியதனால்த் திசைமாறி வாழ்வுக் கேங்கி
விம்முகிற ஏழைகளோ இவர்க்கு ஈவார்
மதிநிறைந்த தமிழரினம் மயங்கிப்போயும்
மானமதை விட்டிவரை ஏற்குமாமோ?

# என்றும் பின்வாங்காத பிதாமகன்



## உதயன் ஸ்தாபகர் சரவணபவனுக்கு ஊடகவியலாளர் குகநாதன் புகழாரம்


யாழ்ப்பாணம், ஓக. 11
'36 வருட காலமாக பல்வேறு தாக்குதல்கள், நெருக்கடிகள், நீதிமன்ற நெருக்குவாரங்கள் என பல்வேறுபட்ட நெருக்குதல்களுக்கு மத்தியிலும் உதயன் பத்திரிகையின் ஸ்தாபகரும் பிதாமகருமான ஈ.சரவணபவன் சற்றும் பின்வாங்காது கொண்ட கொள்கையில் இருந்து வழுவாது தனிமனிதனாக நின்று எதிர்த்துப் போராடி தமிழனின் குரலாக உதயனை கட்டிக்காத்து வருகிறார்' இவ்வாறு தெரிவித்துள்ளார் மூத்த ஊடகவியலாளரும், உதயனின் முன்னாள் செய்தியாசிரியருமான ஞா.குகநாதன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு ஒன்று கிட்ட வேண்டும். அவர்களது அபிலாசைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட உதயன் பத்திரிகை அந்தக் கொள்கையில் இருந்து விலகாது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. கடந்த 36 வருட காலமாக பல்வேறு தாக்குதல்கள், நெருக்கடிகள், நீதிமன்ற நெருக்குவாரங்கள் என பல்வேறுபட்ட நெருக்குதல்களுக்கு மத்தியிலும் உதயன் பத்திரிகையில் ஸ்தாபகரும் பிதாமகருமான ஈ.சரவணபவன் சற்றும் பின்வாங்காது கொண்ட கொள்கையில் இருந்து வழுவாது தனிமனிதனாக நின்று எதிர்த்துப் போராடி தமிழனின் குரலாக உதயனை கட்டிக்காத்து வருகிறார். அந்தப் பத்திரிகையில் 25 வருட காலம் பணியாற்றிய நான் எதிர்கொண்ட நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுக்க பக்கபலமாக இருந்தவர் அவரேதான். 2006ஆம் ஆண்டு அலுவலகத்துக்குள் ஆயுததாரிகள் புகுந்து என்னைக் கொலைசெய்ய முயன்றபோதும் 2011ஆம் ஆண்டு அலுவலகப் பணி முடித்து வீடு திரும்பும் வழியில் நான் தாக்கப்பட்ட போதும் எனக்கு ஆறுதல் கூறி தேற்றி மீண்டும் நான் பணியாற்ற வழிகாட்டியவரும் அவரே. ஊடகத் துறையில் என்னை இழுத்துவந்து எனக்கு சமூகத்தில் ஒரு அந்தஸ்தை தேடித் தந்தவரும் அவரே. தமிழரின் உரிமைப் போராட்டத்தில் நான் பலமாகத் தடம்பதிக்க உறுதுணையாக நின்றவரும் அவரேதான். தமிழர்களின் உரிமையை ஆயுத வழியில் போராடிப் பெறுவதற்கு களம் இறங்கியவேளை அவர்களுக்கு ஊக்கமளித்து உரமூட்டி வளர்த்ததில் முக்கிய பங்கு உதயனுக்கு உண்டு. அந்தப் பங்கை நிறைவேற்ற சரவணபவன் முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு எல்லாம் உற்ற துணையாக நின்றமையை இந்த நேரத்தில் நினைவுகூருகின்றேன்.

சகலரின் பங்களிப்பையும் பெற்று தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு உரம் சேர்த்த சரவணபவன் 2010ஆம் ஆண்டு அரசியலில் தமது பங்களிப்பை வழங்க முன்வந்தார். கடந்த இரு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகி தனது இனம் சார்ந்த மக்களுக்காக அரும்பணியாற்றினார். மீண்டும் இம்முறை தேர்தலில் களம் இறங்கியுள்ள அவரை தமிழ் மக்கள் ஆதரித்து வெற்றிபெறச் செய்து தொடர்ந்து வரும் அவர் பணி மக்களுக்கு கிட்ட வேண்டுகிறேன் என்றுள்ளது. (அ)

# தடுமாறாமல் வாக்களிக்க தயாரா?



இராசிகா

இலங்கைக்கே தலையாக இருப்பது யாழ்ப்பாணம். அதே போன்று அறிவாளிகளும், கல்விமான்களும் வாழ்வதும் இங்குதான். ஆனால் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் ஆகக் கூடுதலான செல்லுபடியற்ற வாக்குகள் அளிக்கப்படுவதும் இங்கு தான்.

**இது ஏன்?**

வழமையாகவே இந்த நிலை என்றால் இம்முறை கையில் கிடைத்துள்ள வாக்குச் சீட்டு அனுமர் வால் போல் நீண்டு ஒரு மயக்க நிலையை ஏற்படுத்துகின்றது. யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 19 அரசியல் கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. வாக்காளர்களுக்கு வாக்குசீட்டு கிழித்துக் கொடுக்கப்பட்டதும் முதலில் ஒரு பதற்றம் வரும். இத்தனைபேர் கேட்கிறார்களே, யாருக்கு வாக்குப் போடுவது என்ற ஒரு தடுமாற்றம் ஏற்படத்தான் செய்யும்.

**பதற்றம் தேவையில்லை**

உங்கள் கையில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டை நன்றாக அவதானத்துடன் பாருங்கள். அங்கே அங்கீகரிக்கப்பட்ட 19 அரசியல் கட்சிகளும்அவற்றுக்கான சின்னங்களும் காணப்படும். அதே வாக்குச் சீட்டில் அரசியல் கட்சிகளைத் தொடர்ந்து சுயேச்சைகளாகப் போட்டியிடும் குழுக்கள் 1 முதல் 14 வரை ஒழுங்குவரிசையில் இலக்கமிடப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்களும் அச்சிடப்பட்டிருக்கும்.

**இப்பொழுது செய்ய வேண்டியது என்ன?**

முதலில் நீங்கள் ஆதரிக்கும், தெரிவு செய்யும் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் சின்னத்துக்கு நேர் எதிராகக் காணப்படும் சதுரக் கூட்டில் × எனப் புள்ளடியிடுங்கள்.

இப்பொழுது நீங்கள் தேர்வு செய்த கட்சிக்கு வாக்களித்து விட்டீர்கள்.

இரண்டாவது கட்டமாக, அந்த வாக்குச் சீட்டின் கீழ்ப் பகுதியில் 1,2 3 4 5 6 7 8 9 10 என ஒன்று முதல் பத்துவரை இலக்கங்கள் காணப்படும். அந்த இலக்கங்களில் நீங்கள் தெரிவு செய்யும் வேட்பாளரின் இலக்கத்துக்கு மேல் × எனப் புள்ளடி இடுங்கள். ஒரு வாக்குச் சீட்டின் மூலம் ஒரே கட்சியைச் சேர்ந்தமூன்று பேருக்கு வாக்களிக்க முடியும். அதனால் உங்களுடைய இரண்டாம் மூன்றாம் விருப்பிலக்கங்களுக்கும் புள்ளடி அடையாளம் இட்டுவிட்டு, அந்த வாக்குச் சீட்டை வாக்களிப்பு பெட்டிக்குள் கொண்டு சென்று போட்டால் போதும், உங்கள் வாக்களிப்பு கடமை இனிதே நிறைவுறும்.

**நாம் விடும் தவறுகள்**

சென்றமுறை வாக்களிப்பின் போது சில தவறுகள் இடம்பெற்றுள்ளன. அதாவது நாம் விரும்பும் அரசியல் கட்சியின் சின்னத்துக்கு புள்ளடியிட்டபின் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் சுயேச்சைக்குழுக்களுக்கு ஒன்று (1) இரண்டு (2) என அவற்றின் இலக்கங்கள் அச்சிட்டிருப்பதைப் பார்த்து அந்த சுயேச்சைக் குழுக்களின் இலக்கங்களுக்கு எதிரே புள்ளடியிட்டிருப்பதையும் காண முடிந்தது. இதனால் உங்கள் வாக்கு செல்லுபடியற்றதாகி விடுகின்றது. அவதானிக்க வேண்டிய வித்தியாசங்கள் சுயேச்சைக் குழுக்களின் இலக்கங்கள் ஒழுங்குவரிசையில் அச்சிடப்படும். உதாரணமாக 'சுயேச்சைக் குழு 1' என அதனோடு இலக்கமும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கும். அது விருப்பு இலக்கம் அல்ல, வாக்குச் சீட்டுக்கு கீழ் பகுதியில் வரிசையாக அச்சிடப்பட்டிருக்கும் இலக்கங்கள் தான் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள் .நீங்கள் இந்த இலக்கங்களுக்கு மேல் புள்ளடியிட்டால் தான் நீங்கள் விரும்பும் வேட்பாளர்களைத் தெரிவு செய்ய முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**உதவிகளைப் பெறலாம்**

உங்களுக்கு வாக்களிப்பதில் ஏதாவது தடுமாற்றம் ஏற்பட்டால் அங்குள்ள அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் உதவுவார்கள். அவர்களிடம் நீங்கள் விரும்பும் கட்சி, மற்றும் விருப்பு இலக்கம் என்பவற்றைக் கூறி பதிவு செய்ய முடியும். அந்த உத்தியோகத்தர்கள் நீங்கள் கூறிய கட்சிக்கும் இலக்கத்துக்கும் சரியாக அடையாளம் இட்டனரா என்பதை கவனித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் உங்களுடைய வாக்கு ஒரு போதும் செல்லுபடியற்றதாகாது.

**இப்பொழுது நீங்கள் வாக்களிக்கத் தயார் தானே!**



## வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தரும்போது...

வாக்களிப்பு நிலையங்களில் கொரோனா பரவும் அபாயத்தை தடுப்பதற்கு சகல விதமான கட்டுப்பாட்டு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

1. கட்டாயமாக முகக் கவசம் அணிதல்
2. கை கழுவும் ஏற்பாடு
3. ஒரு மீற்றர் இடைவெளி
4. ஆள் அடையாள ஆவணங்களை தொடாமலேயே பரிசீலித்தல்
5. கிருமி நீக்கும் திரவம் பயன்படுத்தி கை சுத்தம் செய்தல்
6. மை பூசுவதற்கு ஒவ்வொருவருக்கும் தனித் தனியான தூரிகை
7. வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்காக கறுப்பு அல்லது நீல நிறப் பேனையை வாக்காளர்களே எடுத்துவரல்
8. வாக்களிக்கும் சிற்றறையை அடிக்கடி தொற்று நீக்கம் செய்தல்.
9. சுகாதாரம் தொடர்பான விடயங்களை கவனிப்பதற்கு என வாக்களிப்பு நிலையங்களில் 'விசேடமான அலுவலர்கள் நியமிக்கப்படல்.

வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தாம் விரும்பியவாறு இரகசியமாகவும் சுதந்திரமாகவும் வாக்கினை அளிக்கமுடியும். நீங்கள் இடும் வாக்கு யாருக்கு அளிக்கப்பட்டது என்பதனை எவராலும் எச்சந்தர்ப்பத்திலும் அறிந்துகொள்ளமுடியாது.

வாக்களிப்பதனை போலவே வாக்குகளை செல்லுபடியான விதத்தில் அளிப்பதும் முக்கியமானது.

வாக்குச் சீட்டில் தாம் விரும்பும் கட்சியின் / சுயேச்சைக் குழுவின் பெயர் மற்றும் சின்னத்திற்கு அருகில் வலது பக்கத்தில் உள்ள வெற்றுக் கூட்டில் தெளிவாக புள்ளடி இடுவதன் மூலம் வாக்கினை அளிக்கமுடியும்.

ஒருவர் தான் விரும்பும் ஒரு கட்சிக்குஃ சுயேச்சைக் குழுவிற்கு மாத்திரமே வாக்கினை அளிக்கமுடியும்

ஒன்றுக்கு மேற்பட்ட கூடுகளில் அடையாளமிடுவதால் வாக்குகள் நிராகரிக்கப்படும்.

வாக்குச்சீட்டின் அடியில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்து ஒதுக்கப்பட்டுள்ள இலக்கத்தின் மீது புள்ளடி இடுவதன் மூலம் குறித்த கட்சி / சுயேச்சைக்குழு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தமது விருப்பத்தெரிவுகளைக் குறிப்பிடலாம். இவ்வாறு ஆகக்கூடியது மூன்று வேட்பாளர்களுக்கே தமது விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

வாக்களிக்காமல் இருப்பது ஒருவர் தன்னுடைய உரிமையை இழப்பதற்குச் சமனானதாகும்.

**வாக்குரிமையை பாதுகாப்போம்**
**பாதுகாப்பாக வாக்களிப்போம்**

*தேர்தல்கள் அலுவலகம்*
*யாழ்ப்பாணம்*

# “இந்தியா விரும்பாததாலேயே விக்கி எம்மோடு இணையவில்லை”

## உண்மையை உடைக்கிறார் மணிவண்ணன்

நேர்கண்டவர்:
இரா.புத்திரசிகாமணி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.– கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உதயனுக்கு அளித்த செவ்வி.

**கேள்வி: உங்களுடைய அணியில் பெரும்பாலான வேட்பாளர்கள் சட்டத்தரணிகளாகவே இருக்கின்றீர்கள். சட்டம் தெரிந்தவர்கள் தான் நாடாளுமன்றம் செல்ல வேண்டுமா?**

பதில்: அப்படி இல்லை. எங்கள் அணியில் நான்கு சட்டத்தரணிகள்தான் இருக்கின்றனர். நாங்கள் போக வேண்டிய இடம் சட்டவாக்கசபை- (நாடாளுமன்றம்) அங்கு அரசியல் அமைப்பு உட்பட இன்னோரன்ன அதிமுக்கிய சட்டவாக்க விடயங்கள் கையாளப்படும். இந்த நிலையில் சட்ட நுணுக்கங்கள் வளைவு, சுளிவுகள் தெரிந்தவர்களாக இருந்தால் பெரிதும் நன்மை பயக்கும். கல்விமான்களும் சமூக நலனில் அக்கறை கொண்டவர்களும் எங்கள் அணியில் இருக்கின்றனர்.



**கேள்வி: இதுவரை மக்கள் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்றீர்கள். இப்பொழுது அரசியல் கைதிகளாக எத்தனைபேர் இருக்கின்றனர்? அவர்களின் விடுதலை தொடர்பாக நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?**

ப: புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் நடந்த வேளையிலும் பின்னரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டவர்களில் தற்போது 109 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தான் தமிழ் அரசியல் கைதிகள். நாங்கள் இவர்களை விடுதலை செய்வதற்காக ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்துள்ளோம். பலருக்கு சட்ட உதவிகளை வழங்கி வருகின்றோம். பல வழக்குகளில் நாங்களே இலவசமாக முன்னிலையாகி வாதிடுகின்றோம். அதேவேளை ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைப் பேரவை போன்ற சர்வதேச மன்றுகளுக்கும் மனுக்களை முன்வைத்துள்ளோம்.

**கே: தமிழ் மக்கள் பேரவை பல பிரிவுகளாகப் பிரிந்து சிதறிப்போய் வாக்கு கேட்கின்றீர்கள். இதனால் வாக்குகள் சிதைந்து தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்திவிடாதா?**

ப: நிச்சயமாக, நாங்கள் ஆரம்பம் முதலே எல்லா அமைப்புகளும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளோம். நாங்கள் சுரேஷ் பிரேமச்சந்திரனை தலைவராக ஏற்றுக்கொள்கிறோம் என வலிந்து அழைத்தோம். ஆரம்பத்தில் அதற்குச் சம்மதித்துத் தலை ஆட்டியவர் டெல்லிக்குப் போய் வந்து எமது கூட்டணியை ஏற்க மறுத்துவிட்டார். அதன் பின்னர் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கட்சியும் நாங்களும் இணைந்து போட்டியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதுவும் கைகூடவில்லை. அதற்கு எம்மோடு தான் இணைவதை இந்தியா விரும்பவில்லை என விக்னேஸ்வரன் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். இது தொடர்பான மின்னஞ்சல் ஆதாரமும் என்னிடம் உண்டு.

**கே:அப்படியானால் கூட்டமைப்பு மாற்றாக தமிழ்த் தேசியக் கொள்கையோடு உருவாக இருந்த பலமான கூட்டணியை உடைத்தது சுரேஷ் பிரேமச்சந்திரனும் விக்னேஸ்வரனும் தான் காரணம் என்கின்றீர்களா?**

ப: ஆம், அதுதான் உண்மையும் கூட.

**கே: ஏனைய அமைப்புக்களை விட உங்கள் தலைவர் கஜேந்திரகுமாருடன்தான் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெகு நெருக்கமாக இருந்தார். அப்படி இருந்தும் உங்களது கட்சிதான் அவருடன் இணைந்து செயற்பட மறுத்ததாகக் கூறப்படுகின்றதே?**

ப: இது தவறு. நாங்கள் இணைந்து செயற்படவே அன்றும் இன்றும் விரும்புகின்றோம். விக்னேஸ்வரன் ஐயா எவருடனும் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளத் தெரியாதவர். எத்தனையோ விடயங்கள் பலராலும் முன்வைக்கப்பட்டும் எல்லாவற்றையும் நிராகரித்து தூக்கி எறிந்து விடுவார். அதேவேளை நேர்மைத்திறன் உள்ள ஒரு தலைமைத்துவத்துக்கான தகுதி இல்லாதவர். நிர்வாகத் திறமையும் ஆளுமையும் இல்லாதவர். அவருடன் இணைந்து செயற்படுவது பெரிதும் சிக்கல்களை ஏற்படுத்திவிடும்.

**கே: 13ஆவது திருத்தச் சட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

ப: இல்லவே இல்லை. சம்பந்தன் ஐயா கூட அது இறந்துவிட்டது என்று கூறி உள்ளார்.

**கே: ஏற்கமுடியாத 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. 2017ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்ட போதும் நீங்கள் பங்கேற்காமல் விலகி இருந்தது ஏன்?**

ப: தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிட ஒரு முயற்சி , அப்போதைய மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது, அப்படி ஒன்றாகத்தான் போட்டியிடுவதாயின் , தேர்தலின் போது தயாரிக்கப்படும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 13ஆம் திருத்தச் சட்டத்தை நிராகரிக்கின்றோம் என்று குறிப்பிட வேண்டும் என வலியுறுத்தினோம். ஆனால் அதைச் சம்பந்தர் ஏற்கவில்லை. அதனால் நாங்கள் மாகாண சபைத் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை.

(VIIஆம் பக்கம் பார்க்க)






## சபையில் சரவணபவன்

வடக்கிலும் தெற்கிலும் தேர்தல் காய்ச்சல் சூறாவளி வேகத்தில் மக்களைத் தாக்கி வருகின்றது. குளிர் காய்ச்சலோ இல்லை, நெருப்புக்காய்ச்சலோ தெரியவில்லை. எல்லோரும் உளறிக் கொட்ட ஆரம்பித்து விட்டனர். தெற்கே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு தாம் தோற்றுப் போய்விடுவோமோ என்ற அச்சம் அவரை கோமாளியாக்கிவிட்டது.

காலை ஒரு மேடையில் பேசும்போது தேர்தலின் பின் பெரும் கலவரம் ஏற்படும் என்று கூறுகின்றார். மாலையில் என்னடாவென்றால், எல்லோரும் நேரகாலத்தோடு போய் வாக்களித்துவிட்டு வீடுகளுக்குப் போய் விடுங்கள். மாலையில் என்ன நடக்குமோ தெரியாது என்று அபாயச் சங்கை ஊதுகின்றார். தேர்தலை குழப்பிவிடவும் மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்குமே மஹிந்த திட்டமிடுகின்றார் என்று நாம் கூறவில்லை. தெற்கில் மஹிந்த அரசுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) உறுப்பினரான பிமல் ரத்னாயக்கவே விசனம் தெரிவித்துள்ளார்.

வடக்கின் நிலைமை இதைவிட மோசமாகி உள்ளது. மாற்றுத் தலைவன் நானே என்று கூறிக்கொண்டு கூட்டைப் பிரித்த ஒரு பெரிய மனிதருக்கு சித்தமே கலங்கி பித்துப் பிடித்து விட்டதுபோல் பேசுகின்றார். இவருக்கு ஒன்றைக் கூறி வைக்க விரும்புகின்றோம். 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க மஹிந்தவின் கயிற்றை விழுக்கிவிட்டு கட்சிமாறினார். அவர் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டாமா?

ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டைப் பிரித்துக் கொடுத்து விடுவார்கள் என்று போலியான ஒரு ஆவணத்தை ஊடகங்களுக்குக் காட்டி மஹிந்தவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். கடைசியில் கெட்டிக்காரன் புழுகு எட்டு நாள்தான் என்று இது ஒரு போலியானது என நிரூபிக்கப்பட்டு சிறைச்சோறு சாப்பிட நேர்ந்தது.

இப்போது இங்கே ஒரு பெரியவர் முன்னாள் போராளிகள் குழு மஹிந்தவின் கையாள்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கும் என்கிறார். ஐயோ பாவம் இந்த பெரிய மனிதர். என்ன நடக்கப் போகிறதோ பொறுத்திருந்து பார்ப்போம்.

1 2 3 4 5 6 7 8 9 10

# நாட்டார் கலைகளை கட்டிக்காக்கும் வட்டுக்கோட்டை



எந்த ஒரு இனத்தினதும் பாரம்பரிய கலை, இலக்கியங்கள் அந்த இனத்தின் பண்பாட்டின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகவும், அவற்றை அழகியல் வடிவத்தில் முன் வைப்பவையாகவும் திகழ்கின்றன. அவ் வகையில் எமக்கே உரிய பாரம்பரிய கலைவடிவங்களை பேணிப்பாதுகாத்து வளர்த்தெடுப்பதில் வட்டுக்கோட்டைக் கிராமம் காத்திரமான பங்கை வகித்து வருகிறது. இவற்றில் தருமபுத்திரன் நாடகம், விராட நாடகம், குருகேத்திர நாடகம் என்பவை முக்கியமான ஆட்டக்கூத்துக் கள். இவை வடமோடிக்கூத்துகளுக்குரிய பொது முறையைக் கொண்டிருந்தபோதும், வட்டுக்கோட்டைக்குரிய தனித்துவம் இருப்பதை அவதானிக்க முடியும். அத்துடன் தமிழரின் முக்கிய கலைகளான குதிரை ஆட்டம், காவடி ஆட்டம், கரகாட்டம், பொம்மலாட்டம், சூரன் ஆட்டம், தயிர் முட்டி அடித்தல், அனுமார் ஆட்டம், கோலாட்டம் போன்றவற்றை இவ்வூர்க் கலைஞர்கள் பாதுகாத்து நிகழ்த்தி வருகின்றனர். கலாபூசணம் கந்தையா நாகப்பு காலமான



பின்பு, அவரது பிள்ளைகளான நாகப்பு தவநாக மீனேஸ், நாகப்பு குமரன், நாகப்பு மணிவண்ணன் ஆகியோரும், அந்தக்கிராமத்தில் அவர்களுடன் இணைந்த கலைஞர்களும் தொடர்ந்து கோவில்கள் உட்பட நாடளாவிய ரீதியில் இடம்பெறும் விழாக்களில் நிகழ்த்தி இக்கலைகளை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் வட்டுக்கோட்டையின் மணியகாரனாக இருந்த சுவாமிநாத முதலியார், தருமபுத்திரன் கூத்தை எழுதி அதை ஆடும் படி பலரை வேண்டியபோதும் அதைச்

(மறுபக்க பார்க்க)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
"எங்கள் தமிழர் தேசமக்கள் விடிவுக்காக விடுதலைக்காக அர்ப்பணித்தவர்
உண்மை, நேர்மை, தியாகம்"

X 8
மாவை.சோ.சேனாதிராசா
இலங்கை தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு)

பாராளுமன்ற தேர்தல் 2020
அ.கிருபாகரன்
கிருபா லேணர்ஸ் அதிபர்

X 2
ஐக்கிய மக்கள் சக்தி
யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

பாராளுமன்றத் தேர்தல் 2020 யாழ் கிளிநொச்சி மாவட்டம்
சிறந்த வங்கியலாளராக இருந்து பல வங்கி ஊழியர்களை உருவாக்கியவரும் சிறந்த நிதியியல் ஆலோசனைகளை வழங்கி பல நிதியியல் நிறுவனங்களையும், முதலீட்டு நிறுவனங்களையும் உருவாக்கி சிறந்த பொருளாதார திட்டமிடல்களை வகுத்து வேலைவாய்ப்புக்களையும் சமூக அபிவிருத்தியையும் உருவாக்கக் கூடிய ஒப்பற்ற வங்கியியலாளனை வாக்களித்து வெற்றிபெறச் செய்வோம்.

X 5
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
தமிழ் சம விடுதலை இயக்கம்
இலங்கை வங்கியியல் சமூகம்
குருசுவாமி சுரேந்திரன்.MBA
முன்னாள் முகாமையாளர் இலங்கை வர்த்தக வங்கி

சரியாகச் செய்ய முடியுமா என்ற பயத்தில் பலர் ஆடம றுத்துவிட்டனர். இறுதியில் சிறந்த மத்தள வாசிப்பாள ரான வேலுப்பிள்ளையே இந்தக் கூத்தையாட முன் வந்தார்.

இதையடுத்து வட்டுக்கோட்டையில் நாட்டுக்கூத்துகளின் புதிய யுகம் ஆரம்பமாகியது.

அதில் கலாபூசணம் கந்தையா நாகப்பு வட்டுக்கோட்டை கூத்துகளை ஒரு உயர்ந்த கட்டத்துக்கு இட்டுச்சென்ற துடன் அவற்றை நாடு முழுவதிலும் பிரபலப்படுத்து வதிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார்.

தர்மபுத்திரன், விராட நாடகம், குருகேத்திரன் கூத்து என்பவை இவரின் முயற்சியால் நாடளாவிய ரீதியில் புகழ் பெறும் நிலைமை ஏற்பட்டதுடன் பல்க லைக்கழகங்களில் மாணவர்களால் மெருகுப டுத்தப்பட்டு மேடையேற்றப்படும் வாய்ப்புகளும் உருவாகின.

பொதுவாக வட இந்திய இதிகாசக்க்தைகளைக் கொண்ட நாடகங்களே வடமோடிக்கூத்துக்கள் என அழைக்கப்படுகின்றன. வட்டுக்கோட்டைக்கூத்துக்க ளும் வடநாட்டு இதிகாசக் கதைகளையே கொண்டவை. ஆனால் இவற்றின் ஆட்ட ஒழுங்கு முறைகளும், மத் தளத் தாளக் கட்டுக்களும் வழமையான வடமோடிக் கூத்துக்களை விட 'வட்டுமோ'டி என அழ்ழக்கப்படும் இந்தச் சிந்து புரக்கூத்து க்கள் வேறுபடுகின்றன. அது மட்டுமன்றி இந்தக்கூத்துக்கள் கடுமை யான ஆட்டங்களைக் கொண்டிருந்த போதிலும் மரச்சட்டங்களாலும் கண் ணாடிகள், மணிகள் போள்றவற்றால் செய்யப்பட்ட மிகவும் பாரம் கூடிய உடுப் புகளான கரப்புடுப்புகளை அணிந்து கூத்தாடியதாக அறியமுடிகிறது. இந்தக் கரப்புடுப்பை ஆக்குவதற்கு ஏற்படும் அதிக செலவீனம் காரணமாகவோ அல் லது அதன் பாரம் காரணமாகவோ, அவற்றை ஆக்கக்கூடிய கலைஞர்கள் அருகிப்போய்விட்டதாலோ தற்சமயம் அவை கைவிடப்பட்டு பாரம் குறைந்த. துணிகளிலான உடுப்புகளே பாவிக்கப் படுகின்றன.

கந்தையா நாகப்பு கூத்துக்கான ஆடை அணிகலன்கள் செய்வதிலும், பாவிக் கப்படும் ஆயுதங்கள் என்பன ஆக்குவ திலும் ஓவியம் வரைவதிலும் பொய்க் கால் குதிரையாட்டம் போன்ற கலைக ளுக்கான குதிரைகள் பொம்மலாட்டத் துக்கான பொம்மைகள் என்பனவற்றை உருவாக்குவதிலும் வல்லவராக இருந் தார். அவரது இறப்பின் பின் அவரது மகனான தவநாக மீனேஸ் இவ்வகை யானவற்றை உருவாக்குவதில் வல்லவ ராக விளங்கி வருகிறார்.

அது மட்டுமன்றி வட்டுமோடிக் கூத்து களையும் நாட்டார் ஆட்ட வகைகளை யும் நெறிப்படுத்தி வழிநடத்துவதிலும் இவர் முன்னோடியாக விளங்கு கின் றார். இவரது சகோதரர்களான மணி வண்ணன், குமரன் ஆகியோரும் இவருடன் இணைந்து இக்கலைகளை ஆற்றுகை செய்து வருகின்றனர்.

வருடாவருடம் சிந்துபுரத்து இலுப்பை யடி முத்துமாரியம்மன் ஆலயத்தில் தர்மபுத்திரன் கூத்தோ அல்லது ஏனைய கூத்துகளிலொன்றோ தவறா மல் அரங்கேற்றப்பட்டு வருவது வட் டுக்கோட்டையின் சிறப்பாகும்.

இக்கூத்துகளின் ஒவ்வொரு பாத்திரங் களும் ஒவ்வொரு குடும்பங்க ளின் சொத்தாகவே கருதப்படுகின்றன. ஒரு வர் இறந்துவிட்டால் அவருடைய மகனோ அல்லது சகோதரனோ அப்பாத்திரத்தை ஏற்று நடிப்பதே வழமையாகும். இவ்வ ழமை காலங்காலமாக மீறப்படாமல் பேணப்பட்டு வருகின்றது.

வட்டுக்கோட்டை கட்டிப்பாதுகாக்கும் இக் கலைகளை ஊக்கு வித்து முன்னெ டுத்துச் செல்வதற் கான ஆதரவை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவ ணபவன் அவர்கள் அர்ப்பணிப்புடன் செய்து வருகிறார். அதுமட்டுமின்றி சிந்துபுர மக்களின் வீதி அபிவிருத்தி, ஆலயங்கள் புனர மைப்பு போன்ற தேவைகளை நிறை வேற்று வதி லும் அவர் அக் கறை காட்டி வரு கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 04 . 1942



மறைவு
19 . 07 . 2005


அமரர் திருமதி
**சுந்தரலிங்கம் சிவபாலம்பிகை**

எங்கள் அன்புத் தெய்வமே
நீ எம்மை விட்டு பிரிந்து
15 ஆண்டுகள் போனாலும்
எங்களோடு கூட இருப்பதாக
எண்ணுகின்றோம்....
உன் கண்ணில் நீர் வடிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுமடி
உன்னைக் கரம் பிடித்தேன்
வாழ்க்கை உன்னதமானதடி....
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

உனது பிரிவால் வாடும்
அன்புக் கணவர்,
பெறாமகன் சஞ்சீவன்,
சகோதரர், சகோதரிகள்,
பெறாமக்கள், மருமக்கள்,
மைத்துனர், மைத்துனிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

262, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
077 742 0240

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர் **நல்லதம்பி பொன்னுத்துரை**

மண்ணில் 22.05.1924 விண்ணில் 13.08.2019
*திதி: ஆடிமாத வளர்பிறை திரயோதசி*

எமது குடும்பத்தலைவரே
- நீங்கள்
மறைந்து ஆண்டு ஒன்று
- கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்கள் மனங்களில் வாழும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

வாகையடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**கனகசபை பாலசிங்கம்**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பாலசிங்கம் கடந்த (30.07.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - மாகுலம் தம்பதிக ளின் புதல்வனும். காலஞ்சென்ற பிரேமாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - பூபதி தம்பதியினரின் மருமகனும் விசியசுந்தரம், நடேஷ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் ஞானேஸ்வரி, பாலராசா, நாகேஸ்வரி ஆகியோ ரின் சகோதரரும் துவாரகா, கீர்த்திகா, வேலவேந்தன், காலஞ்சென்ற வர்களான தீபன், மைந்தன் ஆகியோரின் தந்தையுமாவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2020) சனிக் கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக் காக தலைக்கிரி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காமல் லேன்,
யாழ்ப்பாணம்.
தகவல்:
K. பாலராசா (சகோதரர்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
18 . 03 . 1946



மறைவு
03 . 07 . 2020

**அமரர் கந்தையா கனகசபை**
*(ஓய்வுபெற்ற முகாமையாளர் - இலங்கைவங்கி)*

கடந்த (03.07.2020) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்திகேட்டு நேரில் வருகை தந்தும், தொலைபேசி மூலமும் அனுதாபம் கூறியும் எமது துயரத்தில் பங்குபற்றியவர்களிற்கும், அஞ்சலி செலுத் தியவர்களிற்கும் எமக்கு பலவழிகளில் உதவிகள் செய்த அனைவரிற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியகிரியைகள் நாளை (02.08. 2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து **நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில்** மதியம் 11.30 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

374, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.
குடும்பத்தினர்
021 222 6505

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

கடந்த 25.07.2020 அன்று இறைபதமெய்திய
எமது குலவிளக்கு



**ஸ்ரீமதி ஞானப்பூங்கோதை (குஞ்சம்மா) ஜோதீந்திரக்குருக்கள்**

அவர்களின் தசாகாதி கிரியைகள் பின்வரும்
தினங்களில் நடைபெறவுள்ளன.

'02.08.2020 ஞாயிற்றுக்கிழமை தசாகம் முற்பகல் 11.00 மணி
03.08.2020 திங்கட்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
04.08.2020 செவ்வாய்க்கிழமை சபிண்டீகரணம்
05.08.2020 புதன்கிழமை கிருஹயக்ஞம் (மதிய போசனம்) பகல் 12.00 மணி

மேற்படி கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"சரஸ்வதி வாசம்"
வீரபத்திரர் கோவிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
குடும்பத்தினர்.
077 6510 307

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கே: நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பின் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய முன்னணி போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் உண்டா?**

ப: ஆம். தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் இல்லாத இலங்கை இந்தியா ஒப்பந்தத்தையும் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் நிராகரிக்கின்றோம் என எங்கள் தேர்தல் அறிக்கையை மக்கள் முன்வைத்து ஆணை கேட்போம். டக்ளஸ் தேவானந்தாவின் கட்சிக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளுக்குள்ளும் சிக்கிவிடக் கூடாது என்பதை குறிக்கோளாகக் கொண்டே போட்டியிடுவோம்.

**கே: உங்களுடைய முன்னணி நாடாளுமன்றம் சென்றால் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவீர்களா?**

ப: எமது மக்களின் நலம் சார்ந்த விடயங்களில் புரிந்துணர்வுடன் ஒரே நோக்குடன் இணைந்து செயற்படவே விரும்புகின்றோம். அங்கேயும் ஈகோ, மூப்பு, பிடிவாதம் என முரண்பட்டால் நாங்கள் தனித்து செயற்படுவதைத் தடுக்க முடியாது.

**கே: இம்முறை நீங்கள் எத்தனை ஆசனங்களைப் பெற முடியும் என எதிர்பார்க்கின்றீர்கள்.**

ப: ஏழு ஆசனங்களைப் பெறுவதற்கான முயற்சியுடன் செயற்படுகின்றோம். மூன்று கிடைக்கும் என நம்புகிறோம்.

---

## கலைப்பீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை

### 3ஆம் வருட, 4ஆம் வருட கலைமாணிப் பட்ட மாணவர்களுக்கான அறிவித்தல்

4ம் வருட 1ம் அரையாண்டு விரிவுரைகளும் COVID 19 காரணமாக 13.03.2020 அன்று இடைநிறுத்தப்பட்ட 3ம் வருட 1ம் அரையாண்டு பரீட்சைகளும் 10.08.2020 அன்று கலைப்பீடத்தில் ஆரம்பமாகும். பரீட்சை நேர அட்டவணையினை கலைப்பீட விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டைகளை பரீட்சைக்கு கொண்டு வருமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
31.07.2020

---

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

### Supply of Skilled, Semiskilled and Unskilled Workersto the University of Jaffna -2020/2021

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m. on **24th August 2020.**
2. Period of contract should be 365/6 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   3.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million**
   3.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million.**
   3.4 . Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 30.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
   Contact numbers: - Tele: 021 2226517, Fax:- 021 2226517.
5. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **20th August, 2020** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. **2500.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account Number 162-1-001-6-0000880** at any Branch of People's Bank in Island wide.
6. Bidders are strongly advised to attend the **Pre-bid meeting on 17th August 2020 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on or before 24th August 2020 or** be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend
8. Bids shall be Valid for a period of 91 Days (should be as at 22nd November 2020) from the date fixed for closing of Bids or any extended period.
9. All Bids shall be accompanied by a Bid security for and which shall be;
   - In the form included with the Bidding document
   - In fvour of Competent Authority, University of Jaffna
   - For an amount of Rs. 50,000.00 Valid up to 21st December 2020 (120 days from the date of closing of bid)
   - Issued by one of the agencies
     a. A bank operating in Sri Lanka;
     b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

Chairman,
Procurement Committee,
University of Jaffna
01.08.2020

---

*நுகர்வோர் பாவனையாளர் அதிகார சபையால்*

# 11 லட்சத்து 38 ஆயிரம் ரூபா வடக்கில் தண்டமாக விதிப்பு

## ஜூலை மாதத்தில் மட்டும்

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கடந்த மாதம் (ஜூலை) நுகர்வோர் பாவனையாளர் அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு சுற்றிவளைப்புக்களில் 248 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. சுமார் 11 லட்சத்து 38 ஆயிரம் ரூபா அவற்றுக்குத் தண்டமாக விதிக்கப்பட்டன. நுகர்வோர் பாவனையாளர் அதிகார சபையின் வடமாகாண பதில் உதவிப் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பதிகாரியுமான ஏ.எல்.ஜகுபர் சாதிக் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் 72 சுற்றிவளைப்புக்களில் 128 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. அவற்றுக்கு 6 லட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. வவுனியாவில் 51 சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. இதில் 79 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு அவற்றுக்கு 3 லட்சத்து 13 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. முல்லைத்தீவில் 38 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 47 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 500 ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. மன்னாரில் 32 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 24 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 49 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. கிளிநொச்சியில் 36 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. எனி னும் வழக்குகள் எதுவும் பதிவாகவில்லை. (ம)

**கார் விற்பனைக்கு உண்டு**
பாவித்த மாருதி **800** கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 625 8242

**வேலையாள்கள் தேவை**
**யாழ்ப்பாணத்திலும் சாவகச்சேரியிலும் கிளைகள் உள்ள பிரபல ஹோட்டலுக்கு**
1.உணவு தயாரிப்பாளர்(ஆண்)
2.உணவு பரிமாறுபவர்(ஆண்/பெண்)
3.சுத்திகரிப்பு செய்பவர்(ஆண்/பெண்)
**அனுபவமுள்ள/ பழக விரும்புவர்கள் தேவைப்படுகின்றனர்**
தங்குமிட வசதி உண்டு
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்
**தொடர்புக்கு: 077 087 2396, 077 208 6240**

**காணி விற்பனைக்கு**
கொக்குவில் கிழக்கு உடையார் லேனில் நிலப்பரப்பு 01குளி 14 கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 3058 782

---

## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

### 2017/2018ஆம் கல்வியாண்டின் மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு மற்றும் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் தொடர்பான அறிவித்தல்

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கல்வி பயிலும் மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு நாடகமும் அரங்கியலும் மற்றும் கர்நாடக இசைத்துறை மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர் வரும் **12.08.2020 (புதன்கிழமை)** தொடக்கம் நடைபெறவுள்ளன.

மேலும் 2017/2018ஆம் கல்வியாண்டின் மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டின் நடனத்துறை மாணவர்களுக்கு நடைபெறாத மேலதிக பாடங்களுக்குரிய பரீட்சைகள் (ASU 3212, ASU 3232, ASU 3242 & ASU 3292) எதிர்வரும் 12.08.2020ஆம் திகதி நாடகமும் அரங்கியலும் மற்றும் கர்நாடக இசைத்துறை மாணவர்களுடன் சேர்த்து நடைபெறும்.

அத்துடன் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு நடனத்துறை மற்றும் கட்புல தொழில்நுட்பக் கலைத் துறை மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் **12.08.2020 (புதன்கிழமை)** தொடக்கம் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகள் நிறுவகத்தின் இணையத் தளத்தில் பதிவேற்றப்படும்.

**பிரதிப் பதிவாளர்**
**சு.வி.அ.க.நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**
29.07.2020




ES Printers

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch | Vehicle Brand
T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print | Book Printing | Woodent Print



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471 / 021 492 7472

நாடாளுமன்றத் தேர்தல் - 2020




போட்டிப்பரீட்சை
முகாமைத்துவ உதவியாளர்
MA/MSO
உமாசங்கர் &
வளவாளர்கள்
✓உளச்சார்பு
✓மொழித்திறன்
02.08.2020 ஞாயிறு
9am - 2pm
தொடர்ந்து பிரதி
ஞாயிற்றுக்கிழமைகளில்
முற்றிலும் எதிர்பார்க்கை
மற்றும் நவீன
விடயங்களுடன்
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
076 166 1986, 077 741 7143

தேவை
யாழ் வர்த்தக நிலையம்
ஒன்றிற்கு வேலையாள்கள்
தேவை
021 222 2505, 077 639 9447

விற்பனைக்கு
கமுகு மடலில் செய்த முற்றிலும்
இயற்கையான சாப்பாட்டு தட்டுக்கள்
விற்பனைக்கு உண்டு. தற்போதைய
சூழலில் நிகழ்வுகளுக்கு உகந்தவை.
LAVA CARE
077 3164 617
85, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.